www.padippakam.com

ஏப்ரல் 16-30, 02 ரூ.5

# நங்கூரம்

மாதமிருமுறை வழி

# பாலஸ்தீனமும்





# தமிழீழமும்



# காதலும் இந்து முன்னணியும்

படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொரு தமிழனும் படிக்க வேண்டிய அரிய நூல்கள்

# மாணவர் புத்தகப் பண்ணை

## வெளியீட்டில், விற்பனையில்...

| | | விலை ரூ. |
|---|---|---|
| தமிழ்ச் சான்றோர் பேரவையின் தமிழ்வழிக் கல்விப் போராட்ட மலர் | தமிழுக்காக உயிர் துறக்கத் துணிந்த 102 போராளிகளின் படங்களுடன் | 15.00 |
| நெஞ்சின் அலைகள் | நா.அருணாசலம் | 25.00 |
| தமிழீழம் நாடும் அரசும் | சு.இராசரத்தினம் | 45.00 |
| காசி ஆனந்தன் கவிதைகள் | காசி ஆனந்தன் | 50.00 |
| தமிழனா ? தமிங்கிலனா ? | காசி ஆனந்தன் | 35.00 |
| நெற்றியில் ஓர் எரிமலை | பல்லவன் | 15.00 |
| சின்ன நதிகள் | பல்லவன் | 15.00 |
| காற்றும் கலைஞரும் | இளவேனில் | 40.00 |
| புயலுக்கு இசை வழங்கும் பேரியக்கம் | இளவேனில் | 30.00 |
| படிமக் கோடுகள் | கோ.திருஞானம் | 250.00 |
| உருவக் கோடுகள் | கோ.திருஞானம் | 250.00 |
| ஓவியக் கோடுகள் | கோ.திருஞானம் | 120.00 |
| Indus Script Dravidian | இரா.மதிவாணன் | 300.00 |
| திருக்குறள் (English Couplets) | யோகி சுத்தானந்த பாரதி | 50.00 |
| புஷ்பவனம் குப்புசாமியின் தமிழிசைப் பாடல்கள் – ஒலிநாடா (2) | | 70.00 |
| ஈழம்: தமிழரின் தாயகம் | டாக்டர். க.ப.அறவாணன் | 60.00 |
| அவ்வையார் அன்று முதல் இன்று வரை | டாக்டர் தாயம்மாள் அறவாணன் | 100.00 |
| நந்தன் பகுத்தறிவு மலர் | | 10.00 |
| நந்தன் புரட்சி மலர் | | 15.00 |

அஞ்சலில் பெற விரும்புவோர் ஒவ்வொரு நூலின் விலையுடனும் கூடுதலாக ரூ.12.00 அனுப்ப வேண்டும்.

தொடர்புக்கு:

**மாணவர் புத்தகப் பண்ணை**

26, ச.ப. சாலை, அடையாறு, சென்னை – 600 020.

**தொலைபேசி: 4919353, 4911358**

(காசோலை, பணவிடை அனுப்பும்போது **நா.அருணாசலம்** என்ற பெயரில் அனுப்பவும்)

படிப்பகம்

www.padippakam.com


# நந்தன்

உலகத் தமிழர்களை
ஒருங்கிணைக்கும் ஏடு

ஆசிரியர்:
**நா.அருணாசலம்**

5 – 24

பெரியார் ஆண்டு 123
திருவள்ளுவர் ஆண்டு 2033
ஏப்ரல் 16–30, 2002

மாணவர் மறுதோன்றி அச்சகம், 4, அபெக்ஸ் சேம்பர்ஸ், சௌந்திர பாண்டியன் அங்காடி (பாண்டி பஜார்), சென்னை–17 இல் அச்சிட்டு 218, அண்ணா சாலை, சென்னை–6 என்ற முகவரியிலிருந்து வெளியிடுபவர், உரிமையாளர்: நா.அருணாசலம்.

நந்தன் வழி
அம்பாள் மாளிகை,
218, அண்ணா சாலை,
சென்னை–6.
தொலைநகல் (ஃபேக்ஸ்): 859 1809


□□

***"தமிழ் முன்னேற்ற மடைந்து உலக மொழி வரிசையில் அதுவும் ஒரு மொழியாக இருக்க வேண்டுமானால் தமிழையும், மதத்தையும் பிரித்து விட வேண்டும்",***

***- தந்தை பெரியார்***





மானமும் அறிவும்
மனிதர்க்கு அழகு
**- தந்தை பெரியார்**

# களம் அழைக்கிறது!

தமிழ்வழிக் கல்விக்காகத் தமிழ்ச் சான்றோர் பேரவை உள்ளிட்ட தமிழ் அமைப்புகள் நடத்திய தொடர்ச்சியான போராட்டங்களின் பயனாக கடந்த 2000–ஆம் ஆண்டில் அப்போதைய தி.மு.க. அரசு தமிழகத்தில் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்று ஒரு ஆணை பிறப்பித்தது. அதை எதிர்த்து ஆங்கிலவழிப் பள்ளி கல்வி வியாபாரிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க, அந்த வழக்கிலும் தமிழக அரசு தரப்பு வழக்கறிஞர் சரியாக வாதாடாததாலும், தமிழக அரசு ஏனோதானோ என்று இருந்ததாலும், அந்த ஆணை செல்லாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதை எதிர்த்து, தமிழக அரசு உடனடியாக உச்சநீதிமன்றம் செல்ல வேண்டும் என்று தமிழ்ச் சான்றோர் பேரவை உள்ளிட்ட தமிழ் அமைப்புகள் வலியுறுத்தியும், மிக நிதானமாகக் கடந்து 2001 ஜூலை மாதம் தமிழக அரசினால் மேல் முறையீடு செய்யப்பட்டது. ஜூலை 30–ஆம் தேதியே உச்சநீதிமன்றம் அதை ஏற்று, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நோட்டீஸ் பிறப்பித்தது.

என்றாலும் தமிழக அரசின் மெத்தனப் போக்கின் காரணமாக கடந்த 1.4.2002 அன்று நீதிபதிகள் சந்தோஷ் ஹெக்டே, துரைசாமி ராஜூ ஆகியோர் கொண்ட சுப்ரீம் கோர்ட் பெஞ்சு முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அந்த விசாரணையில் தமிழக அரசின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் "இப்பிரச்சினையை நீதிமன்ற முடிவுக்கே விட்டு விடுகிறோம்" என்று கூறி, தமிழக அரசு தமிழ் வழிக் கல்வியைக் கைகழுவும் நோக்கில் இருப்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இதனைக் கண்டிக்கும் வகையில் தமிழ்ச் சான்றோர் பேரவை முதல் கட்டமாக 4 நகரங்களில் அடையாளப்பூர்வ பட்டினிப் போர் நடத்தத் தீர்மானித்துள்ளது.

வெறும் ஆணைபிறப்பிப்பதோடு இல்லாமல் தமிழ்வழிக் கல்வியைக் கட்டாயமாக்கி, தகுந்த சட்டமியற்ற வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்வழிக் கல்வி வழக்கில் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு நடந்துகொண்ட தமிழ்த்துரோக நடவடிக்கையைக் கண்டித்து, தமிழ்ச் சான்றோர் பேரவை சென்னை, திருச்சி, நெல்லை, மதுரை ஆகிய நான்கு இடங்களில் மே முதல் நாள் அடையாள பூர்வப் பட்டினிப்போர் நடத்தத் தீர்மானித்துள்ளது.

இதில் தமிழ்ச் சான்றோர் பேரவை நிறுவனர் நா.அருணாசலம், ஒருங்கிணைப்பாளர் முனைவர் தமிழண்ணல் மற்றும் தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்கின்றனர்.

போராடாமல் நியாயம் பிறக்காது என்பதை அரசு மறுபடியும் உணர்த்தித் தமிழ் அறிஞர்களைக் களத்துக்கு அழைக்கிறது.

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்.
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே
என்கிற புரட்சி வரிகளை மெய்ப்படுத்துவோம்! ●

படிப்பகம்

www.padippakam.com



# கபடச் சூழ்ச்சியும் கலாச்சார வீழ்ச்சியும்

ஆனாருனா



"தலைமைக் காவலர் தங்கராஜ் இருக்காரா?"

"நீங்க யாரு சார்?"

"நான் டிஜிபி. பேசுறேன்!"

"இன்ஸ்பெக்டரைக் கூப்பிடட்டுங்களா அய்யா?"

"இல்லை உங்களிடம்தான் பேசணும்!"

"ஐயா நான் எந்தத் தப்பும் பண்றதில்லை. மாமூல் வாங்கினாக்கூட முழுசையும் இன்ஸ்பெக்டரய்யாவுக்குக் கொடுத்துடுவேன். அவராப் பார்த்து ஏதாவது குடுத்தாத்தான் வாங்கிக்குவேன்.."

"அதுபற்றித்தான் பேசணும். காவல்துறையின் அடித்தளம் சாதாரண கான்ஸ்டபிள்கள்தான். சமூக விரோதிகளின் நேரடித்தாக்குதல், அரிவாள் வெட்டு, வெடிகுண்டு வீச்சுக்குப் பலியாகும் அப்பாவிகள் நீங்கள்தான். எந்த நாட்டிலே கான்ஸ்டபிள்கள் கவலையற்றிருக்கிறார்களோ, அந்த நாட்டிலேதான் சட்டம் ஒழுங்கு சிறந்த முறையில் காப்பாற்றப்படும். சம்பளம் போதாமல் கான்ஸ்டபிள்கள் கையேந்துவது காவல் துறைக்குப் பெருமை தராது. அதனால்..."

"தெய்வமே..!"

"இனிமேல் நேரடியாக நானே உங்களுக்குக் கூடுதல் சம்பளம் தரப்போகிறேன்..!"

"கோடிப் புண்ணியம் அய்யா!"

"இனி எதுவாக இருந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன்!"

"அப்படியானால் இன்ஸ்பெக்டர், டிஎஸ்பி. எஸ்பி. இவர்களெல்லாம்..."

"இருப்பார்கள். ஆனால் நான் நேரடியாக உங்களுடன்.."

இந்த உரையாடலின் போது இன்ஸ்பெக்டர் வருகிறார்.

"எவ கூடய்யா காலைல கொஞ்சுற?"

இன்ஸ்பெக்டரின் குரல் காவலரின் காதில் விழவே இல்லை.

வழக்கமாகக் காவல் நிலையத்துக்குள் நுழையும் போது உத்தியோக பூர்வமான 'சல்யூட்' அடிப்பானே, அது கூட இல்லை. கையிலே சிகரெட்... என்ன ஆயிற்று இவனுக்கு என்று ஆய்வாளருக்கு அதிர்ச்சியூட்டும் மலைப்பு.

"த்ரீ டொன்டி! யாருடன்யா பேசிக்கிட்டிருக்கே?"

"டிஜிபியோடதான்!"

"போனை எங்கிட்ட குடுய்யா?"

"மிஸ்டர்! டிஜிபி. பேச விரும்புறது எங்கிட்டத்தான்!"

"ராஸ்கல்! யாரிடம் பேசுறோம்னு தெரியுதா? தண்ணி அடிச்சிருக்கியா?"

"இத பாரு... மரியாதை கெட்டுப் போயிடும். இன்ஸ்பெக்டருன்னா பெரிய கொம்பனா? நீ யாருய்யா என்ன அதிகாரம் பண்ணுறதுக்கு? எதுவா இருந்தாலும் டிஜிபி. மூலமா வா. அங்க நான் பேசிக்கிறேன்!"

இன்ஸ்பெக்டர் அயர்ச்சியில் உறைந்து விடுகிறார்.

அது ஒரு நிலப் பிரபுத்துவக் குடும்பம். பண்ணையாரின் வருமானத்துக்கும் குறைச்சல் இல்லை; அதிகாரத்துக்கும் குறைச்சல் இல்லை. அதிகாரம் பண்ணையில், ஊரில் மாத்திரமில்லை குடும்பத்திலும்தான். பண்ணையார் வரும் காலடி ஓசை கேட்டாலே மனைவி நடுங்குவாள்; பிள்ளைகள் நடுங்குவார்கள். மகன் வளர்ந்து, அவனுக்கும் திருமணமாகிவிட்டது. ஆனால், தனது செலவுக்கு அவன் பண்ணையாரிடம் அழுது கெஞ்சுவான்.

தந்தையிடம் காட்டமுடியாத கோபத்தையும் சாபத்தையும் மகன் தனது மனைவி பார்வதியிடம் காட்டிக் கொள்வான். கணவனை நம்பி வாழ வந்துவிட்ட அந்தப் பெண்ணோ பார்த்தோர் பரிதவிக்கும் நிலையில் ஒரு கொத்தடிமையின் அவலத்தையும் அவமானத்தையும் தாங்கிக் கொண்டிருந்தாள்.

திடீரென்று மருமகள் மீது பண்ணையாருக்குக் கரிசனம் வந்து விட்டது.

"பார்வதி உனக்கு என்ன குறை? எதுவாயிருந்தாலும் என்னிடம் சொல்!"

"உங்க பிள்ளை என்னை உதாசீனப்படுத்துகிறார். வேண்டப்படாதவளாய் ஒரு தீண்டத்தகாதவளாய் நான் மானங்கெட்டு மனம் நொந்து வாடுகிறேன்!"

"சரி; கவலையை விடு. கண்ணீரைத் துடை. எது தேவைப்பட்டாலும் என்னைக் கேள். உனது சுகம்தான் எனக்கு மகிழ்ச்சி!"

மருமகளை இழுத்து அணைத்து ஆறுதல் சொல்லி விட்டுப் போனார் பண்ணையார்.

சில நாட்களிலேயே பார்வதியின் முகத்தில் மகிழ்ச்சியும், களையும் மலரத் தொடங்கியது.

பண்ணையார் மகன் ஒருநாள் களைப்போடு வீட்டுக்குள் வந்தான். மனைவியை அழைத்தான். அவன் 'ஏய்' என்று ஒரு குரல் கொடுத்தாலே நடுங்கிவந்து பணிவிடை செய்யக் காத்திருப்பாள். பார்வதி. அன்று கத்திப்பார்த்தும் அவளுடைய வருகையோ, குரலோ இல்லை. அப்போது மாடியிலிருந்து பார்வதியின் சிரிப்பொலி கேட்டது.

ஆத்திரத்தோடு மேலே சென்றான் பண்ணையார் மகன். திறந்து கிடந்த சன்னல் வழியே அவன் கண்ட காட்சி அவனுள் இடியாய் இறங்கியது.

மருமகள் மடியில் பண்ணையார். பண்ணையார் ஆலிங்கனத்தில் மருமகள்.

www.padippakam.com

ஊரிலே பேசிக் கொண்டார்கள். "பண்ணையார்க்கு மருமகள் மேலே தான் எத்தனை பாசம்!"

பண்ணையார் மகன் ஆத்திரத்தோடு எதையோ தேடினான்.

**த**மிழக சட்டமன்றத்தில், நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது நிதி அமைச்சர் பொன்னையன் மத்திய அரசின் மீது வேதனையோடு பல குற்றச் சாற்றுகளை வைத்தார்:

"தமிழகத்துக்கு நிதி ஒதுக்குவதில் மத்திய அரசு பாராபட்சமாக நடந்து கொள்கிறது.

"எந்த ஒரு மாநில அரசும் திட்டங்களுக்காக உலக வங்கி போன்ற நிறுவனங்களில் கடன் வாங்க வேண்டுமானால் மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டியதிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்காகப் பிற மாநிலங்களைப்போல டிட்கோ, குடிநீர் வடிகால் வாரியம் போன்ற மாநில அரசின் நிறுவனங்கள் மூலம் கடன் பெற்று வந்தோம். இதற்கும் மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டும் என்று கடந்த அக்டோபர் மாதம் கூறிவிட்டது. இதுவரை இருந்து வந்த உரிமையை மத்திய அரசு பறித்து விட்டது. மாநில அரசின் நிதி அதிகாரத்தை மத்திய அரசு முழுமையாகப் பறித்துவிட்டது!" என்று பொன்னையன் வேதனையோடு குறிப்பிட்டார்.

தமிழக அரசின் நிலை இவ்வாறு இருக்கையில் டில்லியில் பஞ்சாயத்துக்களின் மாநாட்டைக் கூட்டியது மத்திய அரசு. மாநிலங்களை உரிமையற்ற நிலையில் வைத்திருக்கும் மத்திய அரசு கூட்டிய மாநாட்டில் பஞ்சாயத்துக்களின் நிலை குறித்து பிரதமர் வாஜ்பேயி உருக்கமாகப் பேசினார்:

போதிய நிதி ஒதுக்கப்படாததாலும், உரிய அதிகாரங்கள்தரப்படாததாலும் உள்ளாட்சி மன்ற அமைப்புகள் செயல்பட முடியாமல் தவிக்கின்றன. இந்த நிலை மாற வேண்டும். பஞ்சாயத்து அமைப்புகளால் சராசரியாக ஆண்டுக்கு ஏழாயிரம் ரூபாய்தான் திரட்ட முடிகிறது. இந்தச் சொற்பத் தொகையைக் கொண்டு எந்த திட்டத்தைத்தான் நிறைவேற்ற முடியும்?

நாடு சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் ஆகியும் இன்னும் பல கிராமங்களில் குடிநீர் இல்லை என்பது வேதனைக்குரிய செய்தி. பஞ்சாயத்துக்களின் நன்மைக்காக மத்திய அரசு சட்டத்தைத் திருத்தவும் தயாராக இருக்கிறது என்றார் பிரதமர் வாஜ்பேயி.

மத்திய அரசின் பரிவுரையில் மயங்கிப்போனார்கள் பஞ்சாயத்துத் தலைவர்கள்.

மத்திய அரசின் நிதியை மாவட்ட பஞ்சாயத்துக்களுக்கு நேரடியாக வழங்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு கையெழுத்திடும் அதிகாரம் மட்டுமே உள்ளது. நடைமுறைப்படுத்தும் அதிகாரம் இல்லை. உள்ளாட்சி அமைப்புகளின் ஒட்டுமொத்த ஆதங்கத்தை மத்திய அரசுக்குத் தெரிவித்து அதன் மூலம் பலன்பெற மாநாடு உதவியாக இருக்கும் என்று பல தமிழக பஞ்சாயத்துத் தலைவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

பஞ்சாயத்துராஜ் குறித்து அதிகமாக அக்கறை எடுத்துக் கொண்டு புதிய முறையைக் கொண்டு வர விரும்பினார் ராஜீவ் காந்தி.

ராஜீவ் காந்திக்கு வாஜ்பேயியும் புகழாரம் சூட்டியிருக்கிறார். மத்தியில் ஆட்சி அதிகாரம் இருந்தாலும் தமிழ்நாடு போன்ற பல மாநிலங்களில் மத்தியில் ஆளும் கட்சிக்கு எந்தச் செல்வாக்கும் கிடையாது.


**சோது குடியான்** கவிதை நூல்

**ஒரு தமிழனின் சமூகச் சிந்தனைகள்**

வெளியீட்டு விழா

27.4.2002 சனிக்கிழமை – மாலை 6.00 மணி

பாரதியார் இல்லம்
(பார்த்தசாரதி கோவில் எதிரில்),
துளசிங்க பெருமாள் கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தலைமை : **அ.கா.ஜலீல்**

வரவேற்புரை: **பழனி மோசஸ்** பி.காம்., (பாஸ்டர்)

நூல் வெளியீடு
விழா வேந்தன் N.K.T.G. **முத்து**

மதிப்புரை
**கார்க்கி இளவேனில்**

வாழ்த்துரை
**டாக்டர் ஔவை நடராஜன்**
(தஞ்சை பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர்)

**புலவர் அகமது பஷீர் எம்.ஏ.,**
**தத்துவக் கவிஞர் இ.பதுருதீன்**


தேசிய உணர்வுகளை மதிக்காத டில்லி தர்பாருக்கு மாநில மக்கள் வழங்கிய தண்டனை அது.

ஆனால் எந்த வழியிலாவது மாநிலங்களில் தனது ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பிய ராஜீவ் காந்தியின் 'பஞ்சாயத்துராஜ்' குறித்து அதிகமாகவே அக்கறை பாராட்டினார்.

பஞ்சாயத்துக்களுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையேயுள்ள பிணக்குகளைப்பயன்படுத்தி மத்திய அரசு நேரடியாகப் பஞ்சாயத்துக்களுடன் உறவு கொள்வதும் நடவடிக்கை எடுப்பதும் ராஜீவ் காந்தி, வாஜ்பேயி கும்பலுக்கும் உற்சாகம் தருவதாக இருக்கலாம்.

ஆனால் இது ஓர் ஆபத்தான முயற்சி!

மத்திய அரசு பஞ்சாயத்துக்களின் மாநாட்டைக் கூட்டியிருக்கக்கூடாது. அந்த மாநாட்டில் பஞ்சாயத்துத் தலைவர்கள் கலந்து கொண்டிருக்கக்கூடாது. அதை மாநில அரசுகள் அனுமதித்திருக்கக் கூடாது.

நேரடியாகப் பஞ்சாயத்துக்களுடன் மத்திய அரசு தொடர்பு கொள்வது, நிதியளிப்பது என்பது மாநில அரசுகளின் மதிப்பு மரியாதையைக் கெடுப்பதுடன் ஒரு மோசமான கலாச்சாரத்தை உருவாக்கி விடும்.

தேசிய உணர்வும் தேசிய கலாச்சாரமும் அழிக்கப்பட்டு ஒரு காட்டு மிராண்டிக் கலாச்சாரத்துக்குத் தமிழ் நாடும் இந்தியாவின் இதர நாடுகளும் தள்ளப்பட்டு விடும்.

பஞ்சாயத்துக்களுடன் மத்திய அரசு நேரடி உறவும் நடவடிக்கையும் என்பது மாநில அரசுகளை அப்புறப் படுத்தும் சூழ்ச்சி மாத்திரமல்ல; அது ஒரு கலாச்சார வீழ்ச்சிக்கும் கதவு திறந்து விட்டு விடும்.

மகனுக்கும் மருமகளுக்கும் இடையேயுள்ள பிணக்குகளைப் பயன்படுத்தி மாமனார் தனது இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதை நாகரிக உலகம் அனுமதிக்காது. ●



படிப்பகம்

www.padippakam.com



# பாலஸ்தீனமும் தமிழ் ஈழமும்

பாலஸ்தீனத்தில் ரமல்லா நகரம். ஜன்னல்கள் இல்லாத ஒரு இருட்டறை. இரண்டு உதவியாளர்கள் கையிலேந்திய இரண்டு மெழுகு வர்த்திகளோடு நிற்கிறார்கள்.

மெழுகு வர்த்திகளின் மெல்லிய வெளிச்சக் கீற்றுகளில் ஐசீரா தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் பதிவு செய்திருக்கும் யாசர் அராஃபட்டின் இருண்ட முகம். அரேபியப் பாரம்பரியத் தலைப் பாகையுடன்.

"இஸ்ரேலுக்குச் சரணடைய மாட்டேன் வீரமரணம் எய்துவேனே ஒழிய வெளியேற மாட்டேன்" என்ற அராஃபட்டின் உறுதி மொழி ஒலிப்பதிவாகிறது.

> மூன்று கண்டங்களின் மதங்களும் பண்பாடுகளும் சந்திக்கும் முச்சந்தியாகப் பாலஸ்தீனம் இருந்ததால், அது ஆதிக்க சக்திகளின் கைகளில் அடிக்கடி மாறுவதும், அத்தகைய மாற்றங்களின் போது நிகழும் யுத்தங்களில் அம்மக்களும் சிக்கிக் கொள்வதும் நடைபெற்றன.





காட்சி மாறுகிறது.

இஸ்ரேல் ராணுவத்தின் கவசவண்டிகள் ரமல்லா நகருக்குள் வெடிமுழக்கங்களோடும் இடிச்சிதறல்களோடும் வெறிச்சோடிய வீதிகளில் வலம் வருகின்றன. சென்ற வாரத் தொலைக் காட்சிச் செய்திகளில் மேற்சொன்ன காட்சிகளை உலகம் முழுதும் கண்டு திகைத்தது. யார் இந்த அராஃபட்?

**அராஃபட்**

'மொகமத் அப்துல் ரவூஃப் அராஃபட் அஸ்குட்வா அல் ஹுசைனி'

யாசர் அராஃபட்டின் முழுப் பெயர் இது. 1929 ஆகஸ்ட் மாதம் எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் பாலஸ்தீனத் தாய்க்கும் எகிப்தியத் தந்தைக்கும் பிறந்தவர். ஆடை வியாபாரத்தில் அராஃபட்டின் தந்தை பெரும் பணக்காரர்.

அவரது பதின்பருவ வயதிலேயே பாலஸ்தீனப் போராளிகளுக்காக ஆயுதங்களைக் கடத்தி வந்து உதவியிருக்கிறார். பத்தொன்பது வயதில் படிப்பைத் துண்டித்து விட்டுக் கெய்ரோ பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறி விடுதலை இயக்கத்தில் கரைந்தார். எனினும் ஃபாட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1956-இல் பொறியியல் பட்டதாரியானார். குவைத் நாட்டின் பொதுப்பணித்துறைப் பொறியாளராக அரசு பணியிலும் இருந்தார்.

www.padippakam.com

1958-இல் அல் - ஃபட்டா என்ற விடுதலை இயக்கத்தைத் தோற்றுவித்தார். அதற்கான வார இதழ் ஒன்றை நடத்தினார். 1964-இல் குவைத்தை விட்டு வெளியேறி முழுநேரப் போராளியாக மாறினார்.

**பி.எல்.ஓ**

அந்த ஆண்டுதான் அரபு நாடுகள் கழகம் (Arab league) பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை (Palastine Liberation Organisation - PLO) தொடங்கி வைத்தன.

பி.எல்.ஓ என்ற பாலஸ்தீன விடுதலை இயக்கம், பாலஸ்தீனியர்களின் அனைத்து விடுதலை இயக்கங்களையும் உள்ளடக்கிய ஒரு குடை அமைப்பாக இருந்தது. அராஃபட்டின் அல் - ஃபட்டா இயக்கமும் அதில் இணைந்தது.

அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் 1967-இல் நடந்த ஆறு நாள் யுத்தத்தில் அரபு நாடுகள் பெற்ற தோல்வியின் காரணமாக பி.எல்.ஓ பலவீனப்பட்டுப் போனது. அந்த நேரத்தில்தான் தலைமறைவு இயக்கமாக வெற்றிகரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த அராஃபட்டின் அல்ஃபட்டா இயக்கம் ஆற்றல் மிக்க அமைப்பாக வெளிப்பட்டு 1968 முதல் பி.எல்.ஓ அமைப்பைக் கைப்பற்றியது. அராஃபட் அதன் தலைவரானார்.



**தணிகைச்செல்வன்**

அதுவரை மிதவாத இயக்கமாக இருந்த பி.எல்.ஓ பாலஸ்தீனத்தின் தேசிய விடுதலை இயக்கமாகப் பரிணமித்தது. ஜோர்டான் நாட்டில் தலைமையகம் வைத்துக் கொண்டு இயங்கிய பி.எல்.ஓ இஸ்ரேல் நாட்டிடம் இழந்து விட்ட பாலஸ்தீனத் தேசத்தை மீட்கும் போரில் வீறு கொண்டு ஈடுபட்டது.

1974-இல் மொராக்கோ நாட்டின் ரபாத் நகரில் நடந்த அரபு நாடுகளின் உச்சி மாநாட்டில் பி.எல்.ஓ மட்டுமே பாலஸ்தீன மக்களைப் பிரதிநிதிப்படுத்தும் ஒரே அமைப்பு என்று அங்கீகரிக்கப்பட்டது.

ஜோர்டான் நாட்டிலிருந்து இயங்கிய பி.எல்.ஓ அந்த நாட்டு ராணுவத்துடன் ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு தன் தலைமையிடத்தை 1975-இல் லெபனானுக்கு மாற்றிக் கொண்டு இடம் பெயர்ந்தது.

லெபனானிலிருந்து கொரில்லாத் தாக்குதலை இஸ்ரேல் மீது நடத்தியதால் பி.எல்.ஓவைச் சிதறடிக்க இஸ்ரேல், லெபனான் மீது 1982-இல் போர் தொடுத்தது. இதன் விளைவாகப் பி.எல்.ஓ போராளிகள் பன்னிரண்டாயிரம் பேர் லெபனானை விட்டுச் சிரியா போன்ற அண்டை அரபு நாடுகளுக்கு இடம் பெயர்ந்தார்கள்.

அராஃபட்டின் தலைமையை ஏற்றுக் கொண்ட பி.எல்.ஓ படையினர் டுனீசியாவின் தலைநகரான டூனிஸ் சென்றடைந்து அங்கிருந்து தங்கள் இனப் போரைத் தொடர்ந்தார்கள். அங்கேயும் வந்து விமானத் தாக்குதல் நடத்தியது இஸ்ரேல்.

1985-இல் நடந்த அத்தகைய தொரு விண் வழித் தாக்குதலால் அராஃபட்டின் தலைமையகக் கட்டடம் பெருத்த சேதத்துக்குள்ளாகியது.

பி.எல்.ஓ என்பது மூன்று அடுக்கு அமைப்பாக இயங்கியது.

மேல் அமைப்பு: பி.எல்.ஓ நிர்வாகக் குழு

இடை அமைப்பு: மத்தியக் கமிட்டி.

அடித்தள அமைப்பு: பாலஸ்தீனத் தேசியக் கவுன்சில். இந்த அமைப்புதான் பாலஸ்தீன மக்களின் தேசியச் சபையாகக் கருதப்பட்டது.

"இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பண்டைய பாலஸ்தீனத் தேசத்தை மீட்டெடுப்பது" என்ற ஒரே நோக்கம்தான் இன்றுவரை பி.எல்.ஓ.வை வழி நடத்துகிறது.

**பாலஸ்தீனம்:**

தமிழர்களைப் போலவே பாலஸ்தீனியர்களும் மிகத் தொன்மையான வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள்.

மத்தியதரைக் கடலின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள தேசம் பாலஸ்தீனம். ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களின் மதங்களும் பண்பாடுகளும் சந்திக்கும் முச்சந்தியாகப் பாலஸ்தீனம் இருந்ததால், அது ஆதிக்க சக்திகளின் கைகளில் அடிக்கடி மாறுவதும், அத்தகைய மாற்றங்களின் போது நிகழும் யுத்தங்களில் அம்மக்களும் சிக்கிக் கொள்வதும் நடைபெற்றன.

வரலாற்றில் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றிய முதல் பேரரசாக எகிப்து இடம் பெறுகிறது. கி.மு. மூவாயிரம் வாக்கில் எகிப்து, பாலஸ்தீனத்தை ஆட்கொண்டது. கி.மு.1400-இல் எகிப்தின் ஆதிக்கம் சரியத் தொடங்கியது. அப்போதுதான் மெசப்பட்டோமியாவிலிருந்து படையெடுத்து வந்த



படிப்பகம்

www.padippakam.com

யூதர்கள் பாலஸ்தீனத்தைக் கைப் பற்றினார்கள்.

இஸ்ரேலியர்களின் ஆதிக்கம் பாலஸ்தீனத்தில் நெடுங்காலம் நீடிக்கவில்லை. பாலஸ்தீனத்தை விட்டு உலகின் பல பகுதிகளுக்கும் இஸ்ரேலியர்கள் சென்று குடியமர்ந்தார்கள்.


பண்டைய பாலஸ்தீனத்தின் எல்லை இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மத்தியக் கிழக்கில் இரு திட்டுகள் என்ற அளவில் சுருங்கி விட்டது.

ஒன்று மேற்குக் கரை (West bank) மற்றொன்று காசாப் பகுதி (Gaza strip)

**மேற்குக் கரை: (West bank)**

ஜோர்டான் நதியின் மேற்குப் பகுதியில் இருப்பதால் பாலஸ்தீனத்தின் இப்பகுதி மேற்குக்கரை என்றே அழைக்கப்படுகிறது.

1920 முதல் 1948 வரை பிரிட்டிஷ் ஆளுகையில் இது இருந்தது. 1950-இல் பிரிட்டன் அதை ஜோர்டானுக்கு விட்டுக் கொடுத்தது. இந்த ஒப்பந்தத்தை அரபு நாடுகள் குழுவோ, ஐ.நா. சபையோ அங்கீகரிக்கவில்லை. 1967-இல் நடந்த அரபு - இஸ்ரேல் யுத்தத்துக்குப் பின் மேற்குக்கரை இஸ்ரேல் வசமாகியது.




கருப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ள பகுதிகள் பாலஸ்தீனத்தைக் குறிக்கும்.

**காசாப்பகுதி: (Gaza strip)**

மத்தியதரைக் கடலின் மேற்குக் கரையில் விமானத்தின் ஓடு பாதை போல் 42 கி.மீட்டர் நீளமும் 8 கி.மீ அகலமும் கொண்ட ஒரு பாலை வனப் பாதை இது. 1917 முதல் 1948 வரை பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து 1948 முதல் எகிப்தின் கைக்கு மாறியது. 1967-இல் அரபு யுத்தத்தில் மேற்குக்கரை போன்றே இதுவும் இஸ்ரேலிடம் இழக்கப் பட்டது.

காசாப் பகுதியிலுள்ள எட்டு லட்சம் அரேபியர்களும் இஸ்ரேலால் விரட்டியடிக்கப்பட்ட பாலஸ்தீன அகதிகளே.

ஜோர்டான் மன்னர் உசேன் தன் ஆளுமைக்குட்பட்டிருந்த (பின் இஸ்ரேலால் அபகரிக்கப் பட்ட) மேற்குக் கரைப் பகுதியைப் பாலஸ்தீனத்திற்கு வழங்குவதாக அரபு நாடுகளிடம் 1988-இல் அளித்த வாக்குறுதிக்குப் பிறகு தான் பாலஸ்தீனியர்களுக்கு அதிகாரப் பூர்வமான ஒரு தேசம் உருப்பெற்றதாகக் கருதப்பட்டது.

1988-இல் அல்ஜீரியாவில் நடந்த பாலஸ்தீனத்தேசியக் கவுன்சிலில் தான் முதன் முறையாகச் சுதந்திர பாலஸ்தீனத் தேசத்தின் தொடக்கம் அறிவிக்கப்பட்டது. ஜெருசலேம் அதன் தலைநகரம் என்றும் ஏற்கப்பட்டது.

ஐ.நா. சபையின் தீர்மானங்கள் எண் 242 மற்றும் 338 ஆகியவற்றின் அடிப்படையில் பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையை உலகம் அங்கீகரித்தது. பாலஸ்தீன மக்களின் அதிகாரப்பூர்வ அமைப்பாகப் பி.எல்.ஓ வை அமெரிக்காவும் அங்கீகரித்தது.

**இஸ்ரேல்**

இரண்டாம் உலகப்போருக்கு முன்புவரை ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் யூதர்கள் பரவி இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கான ஒரு தேசம் இல்லை.

எந்த நாட்டில் வாழ்ந்தார்களோ அந்த நாட்டுக் குடி உரிமையோடு வாழ்ந்தார்கள். வட்டிக்கடையும் வாணிபமும் தான் அவர்களின் பூர்வீகத் தொழில் என்பதால் எந்த இடத்திலும் அவற்றில் அவர்கள் கையே மேலோங்கி இருந்தது. இட்லருக்கு யூதர்கள் மேல் ஏற்பட்ட வெறுப்புக்கு அடிப்படைக் காரணமே ஜெர்மானிய மக்களை யூதர்கள் கொள்ளையடித்தார்கள் என்பது தான்.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தொழில் அரசர்களாகவும், நிதி அரசர்களாகவும் அரசுத் துறை மேல்தட்டு அதிகாரிகளாக

www.padippakam.com

வும் ஆதிக்கம் புரிந்த யூதர்களின் செல்வாக்கு ஒரு புறமும், ஜெர்மனியில் அவர்களுக்கு இட்லரால் இழைக்கப்பட்ட கொடுமையால் விளைந்த உலக அனுதாபம் மறுபுறமும் இணைந்து இயங்கியதால் தான், யூதர்களைக் குடியமர்த்த வேண்டி, தங்கள் பண்டைய மண்ணிலிருந்து பாலஸ்தீனியர்கள் விரட்டப்பட்டார்கள். அமெரிக்கா - பிரிட்டன் நெருக்கடிகளால் பாலஸ்தீனியர்கள் துரத்தப்படுவதினின்றும் பாதுகாக்க இஸ்லாமிய நாடுகளும் முன்வரவில்லை; உலக நாடுகளும் ஊமையாகிக் கிடந்தன. சொந்த மண்ணில் இயற்கையாக மலர்ந்த தேசமல்ல இஸ்ரேல். உறைந்து கிடந்த ஹீப்ரு மொழிக்கு உயிரூட்டிச் செயற்கைக் கருத்தரிப்பால் கனியவைத்த தேசியமே இஸ்ரேல். பாலஸ்தீனத்தின்மீது மேற்கு வல்லரசுகளால் திணிக்கப்பட்ட தேசியம் அது.

### பாலஸ்தீனப் போர்

இந்தப் பின்னணியில் தான் சுமார் நாற்பதாண்டு காலமாக நடக்கும் பாலஸ்தீனத்தின் தேசிய விடுதலைப் போர் மேலும் மேலும் தொடர்ந்து தோல்வியைத் தழுவுதற்கான காரணத்தைக் காணவேண்டும்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் ஏற்பட்ட எல்லை ஒப்பந்தங்களும் சமாதான ஒப்பந்தங்களும் எண்ணற்றவை.

1988-இல் தொடங்கிய சமாதான மாநாட்டு ஒப்பந்தம் முதல் 1988-இல் இஸ்ரேல் பிரதமர் நேட்டன் யாருவும் யாசர் அராஃபட்டும் கையெழுத்திட்ட நதிக்கரை ஒப்பந்தம் வரை கடந்த பத்தாண்டுகளில் இஸ்ரேலில் பிரதமர்கள் மாறும் போதெல்லாம் அமெரிக்காவின் நிழலில் அராஃபட் அமர்வதும் ஒவ்வொரு பிரதமரும் ஒப்பந்தம் போடுவதும் அடுத்து வருபவர் அதைக் கிழித்துக் காற்றில் பறக்க விடுவதும் தொடர்ந்து நடைபெறும் சோக நாடகமாகும்.

கடைசியாக அமெரிக்கா அதிபர் கிளிண்டன் இஸ்ரேல் பிரதமர் எஹூத் பாரக் பாலஸ்தீனத் தலைவர் அராஃபட் ஆகியோரின் முக்கூட்டு ஒப்பந்தம் 25-ஆம் நாள் ஜூலை 2000 அன்று கையெழுத்தாகியது கேம்ப் டேவிட் என்ற இடத்தில். பலன் என்ன?

எஹூத் பாரக் தோற்று ஏரியல் ஷரான் இஸ்ரேல் பிரதமரானதும் கேம்ப் டேவிட் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டுவிட்டது. ஏற்கெனவே உலக நாடுகள் ஒப்புக்கொண்ட பாலஸ்தீனப் பகுதிகளுக்குள் இஸ்ரேல் ராணுவம் புகுந்துவிட்டது கடந்த வாரம்.



யாசர் அராஃபட்டின் அதிகாரப் பகுதிகளாக உள்ளவை அனைத்தையும் இஸ்ரேல் படை மீண்டும் தன்வசப்படுத்திக் கொண்டது.

ரமல்லா நகரில் உள்ள அராஃபட்டின் அலுவலகமும் வீடும் முற்றுகையிடப்பட்டு, மின்சாரம், குடிநீரும் கூடத் துண்டிக்கப்பட்டுச் சொந்த வீட்டிலேயே சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார் அரபு நாடுகளின் இணையற்ற தலைவர் அராஃபட்.

இந்தச் சூழலில்தான் நாம் கட்டுரையின் தொடக்கத்தில் வர்ணித்த தொலைக்காட்சியின் உணர்வுகளை உள்வாங்கிக் கொள்கிறோம்.

### விடுதலை இயக்கத்தின் தலைவன் அமெரிக்காவா ?

இதுவரை உலகில் நடந்த, நடக்கிற தேச விடுதலை இயக்கங்களுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்த வரலாறு ஒன்றேனும் உண்டா?

வியட்நாமிலும் கொரியாவிலும் விடுதலைப் போராளிகள் மீது அது பொழிந்த குண்டுகளும், பதித்த கண்ணி வெடிகளும் இன்றும் வெடித்துக் கொண்டிருக்கின்றன. 'ஏஜெண்ட் ஆரஞ்சு' என்ற ரசாயன விஷத்தை வெடிகள் மூலம் தூவியதால் இன்றுவரை அதன் பாதிப்புக்காளாகி ஊனமாகிக் கிடக்கும் எண்ணற்ற குழந்தைகள் பற்றிய செய்தியையும் படத்தையும் இந்து நாளிதழ் (ஏப்ரல் 3, 2002) வெளியிட்டிருந்தது.

எலி வளைக்கு நரியைக் காவல் வைத்த கதையாகப் பாலஸ்தீன விடுதலைக்கு அமெரிக்காவை மத்தியஸ்தம் செய்ய அழைத்ததன் விளைவு, சமரசமற்ற போராளியாய்த் திகழ்ந்த அராஃபட் 'சமரசம் ஒன்றே முறை; அதை விட்டால் கதி வேறில்லை' என்று வாஷிங்டன் வாசலில் காத்திருக்கத் தொடங்கிய நாளிலிருந்து பாலஸ்தீனத்தின் தேசப்போர், வெறும் மேசைப் போராக மாறிவிட்டது. மேசைகளைச் சுற்றி வெட்டிப் பேச்சு நடக்கும் போது மேற்குக் கரையில் வெற்றிக் கொடியை நாட்டுகிறது இஸ்ரேல்.

வீட்டுக் காவலில் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் இப்போது கூட, அவர் விழிகள், 'ஆதிமூலமே'



படிப்பகம்

www.padippakam.com

என்று அமெரிக்காவை அழைக்கின்றனவே ஒழிய, 'ஆயுதங்களோடு அனைவரும் திரளுங்கள்' என்று அரேபியர்களுக்கு அறைகூவல் விடுக்கவில்லை.

பாலஸ்தீனத்துக்காகவே அமெரிக்காவின் மீது விமானக் கணைகள் செலுத்தியதாக மார்தட்டும் ஒசாமா பின்லேடன், தனது அல்-கொய்தா வீரர்களையோ, தாலிபான் மறவர்களையோ ஜெருசலேமுக்குள் செலுத்த முடியவில்லையே ஏன்? ஆப்கானிஸ்தானத்தில் முழங்கிய 'ஜிகாத்' பாலஸ்தீனத்தில் 'ஜகா' வாங்குகிறதே ஏன்?

### பாலஸ்தீனமும் தமிழ் ஈழமும்

பாலஸ்தீனம் எழுப்பும் கேள்விகளுக்குத் தமிழீழத்தில் விடை பொதிந்திருக்கிறது.

☐ பாலஸ்தீன விடுதலை இயக்கம் தோன்றி சுமார் நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன.

☐ விடுதலைப் புலிகளின் ஈழப் போரின் வயது இருபதுதான்.

☐ அராஃபட் இயக்கத்துக்கான பொருளாதாரப் பின்னணி மிக மிக வலுவான எண்ணெய் வளம்.

☐ தம்பி பிரபாகரனுக்கோ 'கைக்கும் வாய்க்குமான' ஏழ்மை நிலை.

☐ பாலஸ்தீனத்தை ஆதரிக்க அதைச் சுற்றிலும் ஏராளமான அரபு நாடுகள் - உலக அளவில் இஸ்லாமிய நாடுகள் - என்று ஒரு மாபெரும் பேரணியின் பின்னணியில்தான் அராஃபட் இயங்குகிறார்.

ஆனால், பிரபாகரன்?

தன் மரபு வழித் தாயகமான தமிழ்நாடே பகை நாடு போன்றுள்ள நிலை. தமிழர்களின் தார்மீக ஆதரவு, என்பதைக் கூடக் கணக்கிலெடுத்துக் கொள்ள இயலாத கையறு நிலை.

உலக நாடுகளின் உறுதுணை என்ற அம்சத்தை எடுத்துக் கொண்டால் பாலஸ்தீனத்துக்கு அது ஏறத்தாழ நூறு விழுக்காடு சாதகம்.

தமிழீழத்துக்கோ - பூஜ்யம்! அதிகாரப்பூர்வ ஆதரவு என்பது தமிழீழத்துக்குத் தமிழகத்திலிருந்தே இல்லை. அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனா போன்ற வல்லரசு நாடுகளின் எதிர்ப்புக் கிடையிலே தான் - ஈழப்போர்!

எந்தக் கோணத்திலும் சாதகமற்ற சூழலில் பாதக அம்சங்களே நித்தமும் பயமுறுத்தும் சூழலில் ஈழப்போரை வெற்றிப் படிக்கட்டுகளுக்கு உயர்த்திச் செல்லுகிற யுத்த தந்திரமும் ராஜதந்திரமும்தான் பிரபாகரனைத் தேடிச்சென்று பார்க்கும்படி இலங்கைப் பிரதமருக்கு நிர்ப்பந்தம் தருகின்றன.



**வியட்நாமிலும் கொரியாவிலும் விடுதலைப் போராளிகள் மீது அது பொழிந்த குண்டுகளும், பதித்த கண்ணி வெடிகளும் இன்றும் வெடித்துக் கொண்டிருக்கின்றன. 'ஏஜெண்ட் ஆரஞ்சு' என்ற ரசாயன விஷத்தை வெடிகள் மூலம் தூவியதால் இன்றுவரை அதன் பாதிப்புக்காளாகி ஊனமாகிக் கிடக்கின்றார்கள் எண்ணற்றோர்.**

1993-இல் கையெழுத்தான ஒப்பந்தத்திலேயே அராஃபட் தன் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டார்.

அவற்றை 'ஹமாஸ்' என்ற போர்க்குண இயக்கம் எடுத்துக் கொண்டது என்றாலும், வெகுஜன ஆதரவில்லாமையால் அந்த இயக்கத்தின் எல்லைகள் சுருங்கிக் கிடக்கின்றன. எப்போதாவது இஸ்ரேலின் பொதுமக்கள் மீது வெடிவீச்சு என்ற அதிரடி உத்தியைத் தவிர அந்த இயக்கத்திடம் அடிப்படைத் திட்டம் ஏதுமில்லை.

சுருக்கமாகச் சொன்னால், அராஃபட்டின் தோல்விக்கு மூன்று காரணங்களைப் பட்டியலிடலாம்.

ஒன்று: தேசிய விடுதலைக்காக ஒரு தெளிவான போர்த்திட்டம் இல்லை அதற்கேற்ற போர் உத்தியும் இல்லை.

இரண்டு: நேச அணிகளைத் தேர்வதில் நேர்ந்துள்ள பெரும் பிழை. சத்தியமாகப் பாலஸ்தீனத்தின் நேசநாடாக அமெரிக்கா இருக்க முடியாது.

மூன்று: சமரச ஒப்பந்தங்களைக் குறியாக வைத்து ஒரு விடுதலை இயக்கம் இயங்கக்கூடாது. அராஃபட்டுக்கே அதை விட்டால் வேறு வழியில்லை என்ற அவல நிலை.

இந்த மூன்று முனைகளிலும் விழிப்போடிருப்பதும், எந்த மக்களுக்காய் விடுதலைப் போர் நடக்கிறதோ அந்த மக்களின் பேராதரவும், அந்த மக்களிடமிருந்தே போர்ப்படையை உருவாக்குவதும் இவையே தமிழீழத் தேசியத்தின் ஆதார வேர்கள்.

வியட்நாம் விடுதலைக்குப் பிறகு, உலகெங்கும் உள்ள தேசிய இனப் புரட்சியின் இயக்கங்களுக்கு முன்னுதாரணமாக இருக்க யாசர் அராஃபட்டால் முடியாது: வேலுப்பிள்ளை பிரபாகரனால் முடியும்.

இது ஒருதலைச் சார்பான கருத்து என்று ஒதுக்கிவிட வேண்டாம்.

விடுதலைச் சார்பான கருத்து என்பதை விருப்பு வெறுப்பு அற்றவர்கள் ஏற்பார்கள். ●

www.padippakam.com



# அட், இராமா!



கவிவேந்தர்
கா.வேழவேந்தன்

வாலியை மறைந்து நின்றே
வதைசெய்த இராமா! உன்றன்
வால்பக்தன் அனுமன் என்போன்,
வளமார்ந்த இலங்கை நாட்டின்
வேலியைத் தாண்டிச் சென்றே
வெறித்தீயால் எரித்தான்! இன்றும்
சூலத்தை, வாளை ஏந்தித்
தொடர்வதேன் 'அனுமன் கூட்டம்?'

அரசாட்சி வேண்டாம் என்றும்,
அயோத்தியைத் துறந்தாய் என்றும்
பெருமையாய்ப் பேசு வோர்தாம்
பேயாட்டம் ஆடு கின்றார்!
'கரசேவைக் காவிக் கும்பல்'
கற்கோயில் கடைக்கா லாக
நரப்பலி படைப்ப தேன்? ஏன்?
நாசங்கள் புரிவ தேன்? ஏன்?

எத்தனை கொலைகள்? நாளும்
எத்தனை இரத்த வெள்ளம்?
எத்தனை ஓலம்? நாட்டில்
எத்தனை கோடிச் சேதம்?
இத்தனை பார்த்தே நீயும்
இருக்கிறாய் என்று சொன்னால்,
எத்தனை பித்த லாட்டம்?
என்வாதம் மறுப்போன் எங்கே?



படிப்பகம்

www.padippakam.com



# சிவப்பு விளக்குச் சுடுகிறது

" 'விபச்சாரிகள்' என்ற பட்டமே எங்களுக்கு இந்த சமூகம் கொடுத்த தண்டனை. அதுபோதாதென்று காவல்துறையும், சட்டமும் எங்களை மீண்டும் மீண்டும் தண்டிக்கிறது" என்று கண்கலங்குகிறார் சாரதா.

சென்னை எழும்பூரில் பாலியல் தொழிலாளர்களின் கூட்டமொன்றில் சாரதாவைப் போலப் பலரும் கலந்து கொண்டனர்

அடிப்படையான மனித உரிமைகள்கூட மறுக்கப்பட்ட நிலையில் இந்தச் சமூகத்தால் வஞ்சிக்கப்பட்டு அபலைகளாக்கப் பட்டிருக்கும் இவர்களின் குரல் நம் நெஞ்சைப் பிசைகிறது.

**●● பொருளாதார ஏற்றத் தாழ்வு மிகுந்த இந்தச் சமூக அமைப்பில் வறுமையைப் போலவே விபச்சாரமும் தவிர்க்க முடியாததாகி விட்டது. மன, உடல் விகாரங்களுக்கு ஆட்படும் இந்தச் சூழலைத் தனக்கான வாழ்முறையாக ஒரு பெண் விரும்பி வரித்துக் கொள்கிறாள் என்பதை எப்படி சட்டமும் சமூகமும் நம்புகிறது. ●●**

"விபச்சார அழகிகள் கைது" என்ற தலைப்பில் வரும் செய்திகளை எந்தச் சலனமுமில்லாமல் அன்றாடம் கடந்து செல்லும் நமக்கு நேரடியாக அவர்களிடமிருந்து பீறிடும்போதுதான் அந்த வலியும் வேதனையும் முழுமையாய் உறைக்கிறது.



"காலத்துக்குத் தகுந்தவாறு இதன் பெயர் வேண்டுமானால் மாறியிருக்கலாமே தவிர, எல்லாக் காலத்திலும் எங்கள் மீதான சமூகத்தின் பார்வை ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகிறது. விலைமகள், கணிகை, விபச்சாரி என்று முழுக்கவும் எங்களை மட்டுமே குறிப்பிடும் சொற்கள்தான் வழக்கில் உள்ளதே தவிர எங்களோடு அதே குற்றத்தில் ஈடுபடும் ஆண்களைக் குறிப்பிடும் இதுபோன்ற நேரடியான சொற்கள் ஏதாவது இருக்கிறதா?

சில நேரங்களில் மோசமான

www.padippakam.com

ஆண்களைத் திட்டும்போதுகூட "தேவடியாப் பையா" என்று பெண்ணே அங்கும் இழிவுபடுத்தப்படுகிறாள். ஒரு ஒட்டு மொத்தமான சமூகத்தின் குற்றம், அதே சமூகத்தால் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட பெண்களின் மீது மட்டுமே முழுக்க முழுக்க சுமத்தப்பட்டிருப்பதை இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும். தமிழ் நாட்டின் ஏதோ ஒரு மூலையிலுள்ள தொகுதி எம்.எல்.ஏ. தொடங்கி, அமெரிக்க ஜனாதிபதி உட்பட தலைவர்கள், நீதிபதிகள், மடாதிபதிகள் என்று எங்களிடம் வராதவர்கள் யாருமே இல்லை. ஆனால், இது தொடர்பாக வெளிவரும் செய்திகளில் மட்டும் இதுவரை ஒரு ஆணின் படம்கூட வெளியிடப்பட்டது கிடையாது. அந்தப் பெண்ணின் படம் மட்டுமே வெளியிடப்படும். இந்த நிலையில் எங்களுக்காக ஓர் அமைப்பை ஏற்படுத்தி எங்களின் அடிப்படையான மனித உரிமைகளுக்காகப் போராடுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

வாடிக்கையாளர்களிடம் ரூ.1000 பேசினால் வாகன ஓட்டுனருக்கு ரூ.500 போய் விடுகிறது. பாக்கி ரூ.500-இல் ரூ.250 தரகர் எடுத்துக் கொண்டது போக ரூ.250 மட்டுமே எங்களுக்குக் கிடைக்கிறது. சாதாரணமாக ஓர் ஆணிடம் பேசிக் கொண்டு நிற்கக் கூட எங்களுக்கு உரிமை இல்லை..." என்று இந்த அவல வாழ்வில் புதைந்து கிடக்கும் துயரங்களை நம்முன் கொட்டித் தீர்க்கிறார், ஒரு பெண்மணி.

பொருளாதார ஏற்றத் தாழ்வு மிகுந்த இந்தச் சமூக அமைப்பில் வறுமையைப் போலவே விபச்சாரமும் தவிர்க்க முடியாததாகி விட்டது. மன, உடல் விகாரங்களுக்கு ஆட்படும் இந்தச் சூழலைத் தனக்கான வாழ்முறையாக ஒரு பெண் விரும்பி வரித்துக் கொள்கிறாள் என்பதை எப்படி சட்டமும் சமூகமும் நம்புகிறது.

விபச்சாரம் என்பது ஒரு பெண்ணைப் பொறுத்தவரை வாழ்வின் அனைத்துக் கதவுகளும் மூடப்பட்ட பிறகு புதைக்கப்படும் படுகுழி.

"பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும்போது இன்ஷியல்கூட எங்கள் பெயரைப் போடுவதில்லை. பிள்ளையைப் பெற்றெடுக்கும் எங்களுக்கு எந்தப் பங்கும் இல்லையா என்கிறார் இவர்களில் ஒரு பெண்.

மற்றவர்களைப் போல இயல்பானதொரு வாழ்வை இந்தச் சமூகம் நிர்தாட்சண்யமாக அவளுக்கு மறுத்து விடுவதுடன் அதற்கான மாற்றாகவும் இந்த ஒன்றை மட்டுமே அவள்மீது திணிக்கிறது. தங்களின் இன்னொரு பக்கத்தைப் பத்திரமாகப் புதைத்துவைக்க சமூகத்தின் இந்த இருட்டுப் பகுதி சில பெரிய மனிதர்களுக்கு வசதியாகவும் போய்விடுகிறது. ஆனால், சட்டத்தையும் சமூக நீதியையும் பாதுகாக்கும் பொறுப்பைத் தொடர்ந்து அவர்களிடம்தானே ஒப்படைத்து வருகிறோம்.



●●

**விபச்சாரம் என்பது ஒரு பெண்ணைப் பொறுத்தவரை வாழ்வின் அனைத்துக் கதவுகளும் மூடப்பட்ட பிறகு புதைக்கப்படும் படுகுழி.**

●●

இந்த நிலையில் பாலியல் தொழிலாளர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு அதற்கான சலுகைகளையும் உரிமைகளையும் சட்ட ரீதியாகப் பெறும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டிருப்பது தவிர்க்க முடியாததும் நியாயமானதுமாகும்.

கடந்த மாதம் சென்னை எழும்பூரில் உள்ள எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் நடந்த இந்தக் கூட்டத்தில்,

"தங்கள் மீது எந்தக் காரணமும் இல்லாமல் பொய் வழக்குப் போடுவது ஆண் பெண் இரு பாலரையும் கைது செய்தாலும் பெண்களை மட்டுமே தண்டிப்பது, தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் குறித்த புகார்களைப் புறக்கணிப்பது" உள்பட பல பிரச்னைகளுக்கும் தீர்வு காண வேண்டி கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

மற்றவர்களைப் போல சகஜமாக நாங்கள் எந்தத் தடையுமின்றி நடமாடுவதற்கு ஏதுவாக விபச்சாரத் தடைச் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்கிறார் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த நளினி.

இந்தக் கூட்டத்தில் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குனர் கிறிஸ்துதாஸ் காந்தி தலைமை தாங்கிப் பேசினார். பெரியகுளம், கரூர், பரமக்குடி, இராமேஸ்வரம், புதுக்கோட்டை, நாகர்கோவில், தென்காசி, நெல்லை, திருவண்ணாமலை, கடலூர், திருச்சி, திண்டுக்கல் ஆகிய பிற பகுதிகளிலிருந்தும் சமூகநலத் திட்ட அமைப்புகளைச் சார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் என்ற புனுகுக்குள் புரையோடிய புண்ணாகி இருக்கும் இந்தச் சமூகக் காயம் ஆற மனித இனம் பற்றி விழுமியக் கனவு காணும் எல்லோரும் பாடுபட வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com



# மரபுக்கும் பிரமைக்கும் எதிராக

**நந்தன்:** மலேசியாவின் புகழ் பெற்ற கவிஞர் என்ற முறையில் உங்களுக்குக் கவிதைத் துறையில் ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்த கவிஞர் யார் என்று குறிப்பிட முடியுமா?

**முரசு நெடுமாறன்:** நான் பிறந்து வளர்ந்தது தோட்டப்புறம். (கிராமப் பகுதி). எனவே அங்கு இதற்கெல்லாம் வாய்ப்பில்லை. தமிழ் முரசு கோ.சாரங்கபாணி, ஐ.உலகநாதன் ஆகியோர் பத்திரிகைத் துறையில் எனக்கு வழிகாட்டியாக இருந்தனர். 1987-இல் தமிழகத்துக்குப் பட்டப்படிப்புக்காக வந்த எனக்கு தமிழறிஞர்களின் நட்புக்கிடைத்தது. அதன் பிறகுதான் எனக்கு ஓரளவு தெளிவு கிடைத்தது.

**நந்தன்:** தமிழகத்தின் தமிழ்க் கவிதைகளுக்கும் மலேசியத் தமிழ்க் கவிதைகளுக்கும் வித்தியாசமென்று ஏதாவது இருக்கிறதா?

**முரசு நெடுமாறன்:** 1947 வரைக்கும் தமிழகத்துக் கவிதைகளின் மறுபதிப்பாகத்தான் மலேசியக் கவிதைகள் இருந்தன. 1947-க்குப் பிறகு பெரியார் இரண்டு முறை மலேசியாவுக்கு வந்திருக்கிறார். அவருடைய வருகைக்குப்பிறகு திராவிட இயக்கத்தின் தாக்கம் அங்குள்ள படைப்புகளில் பிரதிபலித்தது. அந்தத் தாக்கத்தை அதிகம் பெற்றவர் ஐ.உலகநாதன். அதன் பிறகு கருத்தளவில் அந்த மண்ணைப் பிரதிபலிக்கும் வேறுபாடுகள் இருக்குமே ஒழிய யாப்பிலோ, வடிவத்திலோ அதிகம் வேறுபாடு இருக்கும் என்று சொல்ல முடியாது.

••

பெரியார் இரண்டு முறை மலேசியாவுக்கு வந்திருக்கிறார். அவருடைய வருகைக்குப்பிறகு திராவிட இயக்கத்தின் தாக்கம் அங்குள்ள படைப்புகளில் பிரதிபலித்தது.

••



**நந்தன்:** 70-களுக்குப் பிறகு தமிழ் இலக்கியத்துறையில் புதிய வரவுகள் பெரிய அளவில் இல்லை. இப்போது எழுதிக் கொண்டிருக்கும் பலரும் 70-களில் எழுதத் தொடங்கியவர்கள்தான். இதற்கான சமூகப் பின்னணியாக எதைப் பார்க்கிறீர்கள்...?

**முரசு நெடுமாறன்:** இன்றைய சமூகம் பொருளை நோக்கி ஓடுகிற சமூகமாக மாறிவிட்டது. இலக்கியம் என்பது தமிழில் ஆதாயகரமான ஒரு துறை இல்லை என்பதுதான் இதற்கு முக்கியமான காரணம். தமிழில் ஒரு புத்தகத்தை வெளியிட்டால் அதை விற்று முடிப்பதற்குள் அவருடைய வாழ்நாளே போய்விடும். தொலைக்காட்சி வந்தபிறகு படிப்பவர்கள் மிகவும் குறைந்து போனார்கள். படிப்பவர்கள் குறைந்து போனதால் படைக்கிறவர்களும் குறைந்து போனார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

**நந்தன்:** ஒரு சமூகம் தேக்கமடைந்து செயலூக்கிழந்து கிடக்கும்போது சிறந்த இலக்கியங்கள் படைக்கப்பட்டு அந்தச் சமூகத்தையே அவை தட்டி எழுப்பிய சம்பவங்கள் உலகவரலாற்றில் நிறைய உண்டு. தமிழ் நாட்டில் அப்படி ஒரு எழுச்சியை ஏற்படுத்த முடியாதா?

**முரசு நெடுமாறன்:** எத்தனையோ நூறு ஆண்டுகளாகத் தூங்கிக் கிடந்த தமிழர்களைப் பெரியார் வந்து தட்டி எழுப்பினார். அதன் தாக்கம் இலக்கியங்களில் இருக்கத்தான் செய்தது. பின்பு ஏற்பட்ட அரசியல் வீழ்ச்சியும் கலை இலக்கிய வீழ்ச்சிக்கு முக்கியமான காரணம். மீண்டும் அரசியலிலும், கலை இலக்கியத்திலும் மறுமலர்ச்சி ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**நந்தன்:** கவிதையில் நவீனத்துவம் பற்றியும் அது தொடர்பான பல இடங்கள் பற்றியும் தற்போது நிறையப் பேசப்படுகிறது. இவற்றின் வடிவங்களில்தான் மாறுதல் இருக்கிறதே தவிர உள்ளடக்கம் மிகப் பழமையானதாகவே இருக்கிறது.

www.padippakam.com

*ஞானக்கூத்தன் பெரிதும் மரபில்தான் எழுதுகிறார். எதுகை மோனைகள் வேண்டுமானால் சில இடங்களில் இடறும். ஆனால் அவருடையதைப் புதுக்கவிதை என்கிறார்களே...?*

**முரசு நெடுமாறன்:** 'புதுக்கவிதை என்பது' பிரமைகளை உடைத்தெறிவது என்று ஒருமுறை பேராசிரியர் மறைமலை சொன்னார். தடையாயிருக்கிற மரபுகளையும், பழமைகளையும் உடைத்தெறிவதே அதன் நோக்கம். அந்த அடிப்படையில் அவர் கவிதைகளைப் புரிந்து கொண்டிருக்கலாம்.

**நந்தன்:** *ஒரு கவிஞர், அண்ணா சாலை பாட்டா கடை ஓரமாகப் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கும் தொழுநோயாளியைப் பார்த்து இவனைப் போல் நம்மால் உழைக்காமல் உட்கார்ந்து சாப்பிட முடியவில்லையே என்று வருந்தி, தான் உழைத்து உண்ண வேண்டியிருப்பதை நினைத்து வருந்தும் தொனியில் "வேலை என்ற சொல்லே குசுப்போல் நாறுகிறது" என்று எழுதுகிறார். ஒரு பிச்சைக்காரனைப் பார்த்து இரக்கப்படும் மனிதாபிமான உணர்வுக்கு நேர் எதிரான இப்படி ஒரு மனோபாவம் எப்படிப் புதுமையாகும்?*

**முரசு நெடுமாறன்:** இப்படி ஒரு நிலை அங்கு இல்லை என்றே சொல்லலாம். "பால்மரம் அறுக்க அன்று குனிந்தவன் இன்னும் நிமிரவே இல்லை" என்ற சமூகக் கவலை மிகுந்த கவிதைகள் இப்போதும் வருகின்றன. உழைக்கும் வர்க்கத்தின் மீது பரிவும், மனித நேயமும், மிளிரும் கவிதைகள்தான் மலேசியாவில் இன்றும் எழுதப்படுகின்றன. அது இன்னும் தொட வேண்டிய எல்லை இருக்கலாம். ஆனால் இதைப் போன்ற சோம்பேறிகளை ஆராதிக்கும் கவிதைகள் எங்கள் நாட்டில் இல்லை.

**நந்தன்:** *அதிகம் பேர் படித்தால் அது சிறந்த படைப்பாகாது என்று ஒரு கருத்து நிலவுகிறதே...?*

**முரசு நெடுமாறன்:** திருக்குறளை அதிகம் பேர் படிக்கிறார்கள். அதனால் அது நல்ல இலக்கியமில்லை என்று சொல்லிவிட முடியுமா என்ன? பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் எல்லோரும் நிறையப் பேரால் படிக்கப்படுபவர்கள்தாம்.

**நந்தன்:** *உள்ளடக்கம் ஒரு வலிமையான சமூக நோக்கத்தைக் கொண்டிருந்தால் அதைப் பிரச்சாரம் என்று ஒதுக்கித் தள்ளும் போக்குக் காணப்படுகிறதே?*

**முரசு நெடுமாறன்:** திரைப்படத் துறையில் வேலைக்காரி, பராசக்தி போன்ற படங்கள் பெரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்தின. அவை பிரச்சாரமாக இருந்தாலும் மக்களைச் சென்றடைந்து ஒரு சமூகத்தை வென்றெடுக்கும் போது அது கலையாகத் தன்னை நிலை நிறுத்திக் கொள்கிறது. பாரதி, பாரதிதாசன் கவிதைகளும் இது போலத்தான். எனவே பிரச்சாரம் என்று சிறந்த சமூகப் படைப்புகளை ஒதுக்க நினைப்பது மேலோட்டமான பார்வையே. தட்டில் வைத்து வழங்காமல் கலை, வெளிப்பாடாக இருக்க வேண்டும் என்று சொல்லலாமே தவிர அதனால் அதிகமானவர்கள் படித்தால் அது நல்ல இலக்கியமில்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. பிர்ச்சாரமில்லாத ஒரு இலக்கியமே இல்லை.



●●

"பால்மரம் அறுக்க அன்று குனிந்தவன் இன்னும் நிமிரவே இல்லை" என்ற சமூகக் கவலை மிகுந்த கவிதைகள் இப்போதும் வருகின்றன. உழைக்கும் வர்க்கத்தின் மீது பரிவும், மனித நேயமும், மிளிரும் கவிதைகள்தான் மலேசியாவில் இன்றும் எழுதப்படுகின்றன.

●●

**நந்தன்:** *உங்களுடைய கவிதைகளின் கருப்பொருளாகப் பெரிதும் எதை வைக்கிறீர்கள்?*

**முரசு நெடுமாறன்:** என்னுடைய கவிதைகளில் பெரும்பாலானவை குழந்தைக் கவிதைகள். குழந்தைக் கவிதை என்பது குழந்தையாகவே மாறி எழுத வேண்டிய ஒன்று.

"பாப்பா தூங்க அம்மாதான் பாடுகின்றார் தாலாட்டு

எனது பொம்மை தூங்கிடவே பாடுவதாரோ ஒரு பாட்டு" இருந்தால் என்ன "ஆராரோ இன்றே நானும் பாடிடுவேன். எனது பொம்மை மகிழ்ந்திடுமே இன்பமாகத் தூங்கிடுமே". இது பலராலும் பாராட்டப்பட்ட என்னுடைய கவிதைகளில் ஒன்று. நான் பாரதிதாசனில் தோய்ந்தவன். எனவே பெரியவர்களுக்கென்று நான் எழுதிய கவிதைகளில் சமூக அக்கறையே மேலோங்கி நிற்கும்.

தொகுப்பு: மேனா



படிப்பகம்

www.padippakam.com



## இரா. இரத்தினகிரியின் குறிப்பேட்டிலிருந்து


**899**-வது குறளை இங்கே தருகிறோம். மக்கள் கவனத்துக்காக மட்டுமல்ல. ஆட்சியாளரும் அறிவு பெறுவதற்காக.

"ஏந்திய கொள்கையார் சீறினிடைமுரிந்து
வேந்தனும் வெந்து கெடும்."

"உயர்ந்த கொள்கையைக் கொண்ட பெரியார் சீறுவாரானால், நாட்டை ஆள்கின்ற அரசன் கூட இடைநடுவே முறிந்து அரசு இழந்து கெட்டுப்போவான்- என்பது இதன் பொருள்.

அன்றைக்கு அரசனுக்காகக் கூறப்பட்டது இது. இன்றைக்கு அவன் பொறுப்பையேற்றுள்ள அமைச்சர்களுக்கும் பொருந்தும்.

தமிழ்நாட்டுப் பெரியார் சாதாரணமாகச் சீற்றங்கொள்வதில்லை. இந்தியாவிலே இன்று சட்டத்துக்கும், அமைதிக்கும் மரியாதை தருகின்ற ஒரே தலைவர், பெரியார் ஈ.வெ.ரா அவர்கள். "ஆகஸ்ட் தியாகம்" என்ற காங்கிரஸ் 'தேசபக்தி' கிளர்ச்சிகளையே "காலித்தனம்" என்று கண்டிப்பவர். 'ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் கட்டளையைக்கூட மீறக்கூடாது' என்று தம் கழகத்தாருக்குக் கடுமையான கட்டளை விதித்திருப்பவர்.



இப்பேர்ப்பட்ட 'உயர்ந்த' கொள்கையைக் கொண்ட பெரியார் இன்றைய சமுதாயக் கொடுமைகள் சிலவற்றைக் கண்டு "சீறுகின்றார்" என்றால், ஆட்சியாளர் அலட்சியப்படுத்த முடியாது; அலட்சியப்படுத்தமாட்டார்கள் என்பது நமக்குத் தெரியும்.

4-ந்தேதி ஞாயிறு அன்று மாலை திருச்சியில் வெள்ளம் போன்ற தமிழர்கள் கூட்டம் கூடியிருந்தது. பெரிய பெரிய அரசியல் பிரச்சனைகளுக்குக்கூட, இம்மாதிரிக் கூட்டம் கூடியதில்லை. ஒரு ஜில்லா அதிகாரியைப்பற்றிய ஒரு சாதாரணமான பிரச்சனை தான். இதற்காக சுமார் அய்ம்பதாயிரம் மக்கள் இரவு 10 மணி வரையில் காத்திருந்து, பெரியார் பேச்சைக் கேட்டு ஆரவாரஞ் செய்தார்களென்றால், பொதுஜன உணர்ச்சி இன்று தமிழ் நாட்டில் எந்த உச்சியை எட்டிப்பிடித்திருக்கிறது என்பதைத்தான் கவனிக்க வேண்டும்.

இரண்டு அய்யங்கார் நீதிபதிகள் ஒரு தமிழர் கலெக்டரைப்பற்றி எல்லை மீறிய கடுஞ் சொற்களடங்கிய தீர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர் என்றும், மற்றொரு அய்யங்கார் அட்வகேட் ஜெனரல் கலெக்டர் சார்பில் வாதாட வேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டாரென்றும், இன்னொரு அய்யங்கார் ஏடு (இந்து) இத்தீர்ப்பை ஆதரித்து குதூகலப்பட்டிருக்கிறதென்றும், இது ஆரியர் - தமிழர் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதே தவிர, நீதியையோ, சட்டத்தையோ, நிர்வாகத்தையோ அடிப்படையாகக் கொண்ட பிரச்சனையல்லவென்றும், சுமார் ஒன்றரை மணி நேரம் விளக்கிக் காட்டிப் பேசிய தலைவர் பெரியார் அவர்கள் இந்தியாவிலேயே (அல்லது உலகிலேயே) எந்தத் தலைவரும் சொல்லத்துணியாத ஒரு உண்மையைச் சொல்லியிருக்கிறார்.

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

உயர்நீதிமன்றத் தீர்ப்புகளைப் பற்றிப் பொதுமக்கள் கருத்துத் தெரிவிப்பது, கோர்ட்டை அவமானப்படுத்துவதாகும் (Contempt of Court) என்ற பூச்சாண்டியை இனியாவது அம்பலப்படுத்த வேண்டும். உயர்நீதி மன்றத்து நீதிபதிகளும் மனிதப் பிறவிகளாதலால், ஆசாபாசங்களுக்கும், சமுதாய உணர்ச்சிகளுக்கும், தவறுகளுக்கும் கட்டுப்பட்டவர்கள். இவர்களை நியமிக்கின்ற இந்தியத் தலைவரையும், அவருக்கு அடுத்தபடியாக உள்ள இந்தியத் தலைவரையும், அவருக்கு அடுத்தபடியாக உள்ள இந்திய முதலமைச்சரையும் கண்டிக்கவும். கொடும்பாவி

www.padippakam.com

கட்டிக் கொளுத்தவும். இவர்கள் எல்லோருக்கும் மேம்பட்டதாதக் கூறப்படுகின்ற 'தேசியக்கொடி' என்பதையுமே கிழித்துப் போட்டுத் தீ வைக்கவும், ஜனநாயக சமூகத்தில் உரிமையிருக்கும்போது சாதாரண சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் ஒருவரான நீதிபதியின் தீர்ப்பைத் தவறு என்று கண்டிப்பதற்கு மக்களுக்கு உரிமையிருக்க வேண்டாமா?

என்ற கருத்துப்பட பேசினர். பெரியார் அவர்கள். 'இது சட்டப்படி குற்றமாகுமானால், அதன் விளைவுகளையும், அனுபவிக்க வேண்டியதுதான்' என்று இடிமுழக்கஞ் செய்தார்.

'செயற்கரிய செய்பவர்'அல்லவோ, பெரியவர்!

"தமிழர்; தமிழர் கலாச்சாரம்; தமிழர் உரிமை; தமிழர் உத்தியோகஸ்தர் - ஆகியவர்களின் வழக்குகளைப் பற்றி இனி ஆரிய நீதிபதிகள் விசாரணை செய்தல் கூடாது என்ற முடிவு ஏற்பட வேண்டும்'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார். முற்றிலும் புதிய கருத்து. நியாயமான கருத்துங்கூட. ஆரிய - திராவிட இன உணர்ச்சி அசைக்க முடியாமல் வேரூன்றிவிட்ட பிறகு, இனி மறைத்துப் பேசி மழுப்புவானேன்?

"நியாயமற்ற முறையில் தீர்ப்பளித்த இரு அய்யங்கார் நீதிபதிகளையும் உடனே தமிழ் நாட்டைவிட்டே மாற்றிவிட வேண்டும்; கடமையைச் செய்யத்தவறிய அட்வகேட் ஜெனரல் அய்யங்கார்மீது சர்க்கார் தக்க நடவடிக்கையெடுக்க வேண்டும்."

"நியாயமற்ற முறையில் தீர்ப்பளித்த இரு அய்யங்கார் நீதிபதிகளையும் உடனே தமிழ் நாட்டைவிட்டே மாற்றிவிட வேண்டும்; கடமையைச் செய்யத்தவறிய அட்வகேட் ஜெனரல் அய்யங்கார்மீது சர்க்கார் தக்க நடவடிக்கையெடுக்க வேண்டும்.'' என்ற தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டது; 40,000 கைகள் ஈட்டிபோல் வான்நோக்கி உயர்ந்தன! 'இத்தீர்மானத்தை எதிர்ப்பவர் உண்டா? கை தூக்குங்கள்' என்று கேட்டார் அவைத்தலைவர் பழனியாண்டி எம்.எல்.ஏ. ஒரு கைகூட உயரவில்லை. இது சர்க்கார் சுருக்கெழுத்தாளருக்கு மட்டுமல்ல. மாற்றுடையில் வந்திருந்த நூற்றுக் கணக்கான இரகசிய போலீசாருக்கும் தெரியும்! (இவர்கள் கூடக் கையை உயர்த்திருக்க வேண்டும். ஏனெனில் கையை உயர்த்தாத மனிதரே காணப்படவில்லை. அந்த மாபெரும் மக்கள் கடலில்!) எனவே ஒரு நொடியில் 40,000 வாய்களிலிருந்தும் பீறிட்டுக் கிளம்பியது.

ஆம்! ஆரிய இனத்தையே வெளியேறச் சொல்லும் போது, இரண்டு ஆரிய நீதிபதிகளை மாற்றச் சொல்வதும், ஒரு ஆரிய ஏட்டுக்கு (காகிதத்துக்கு) தீ மூட்டுவதும் அற்பத்திலும் அற்பமான சொத்தை நிகழ்ச்சிகள்தானே!



திருச்சியில் நடந்ததுபோன்று சென்னைக் கடற்கரையிலும் இதற்காக ஒரு மாபெரும் கூட்டம் நடத்த வேண்டுமென்று தலைவர் பெரியார் அவர்கள் கருதியுள்ளார்கள். அதற்குப் பிறகு, இதே பிரச்சனைக்காக ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் நீதிபதித் தீர்ப்பு அதிருப்தி கூட்டங்கள் நடைபெற ஏற்பாடாகி வருவதாக தெரிகிறது.

எனவே, இது கோர்ட்டை அவமதிப்பதல்ல என்பது நம் கருத்து. இது சர்வ சாதாரணமாக மனித உரிமைதான். தனிப்பட்டவரின் லாப, நஷ்டங்களில் சுயநலமான காரியங்களில் கோர்ட் தீர்ப்புக்குத் தலை சிறந்த மரியாதையும் கீழ்ப்படிதலும் காட்டவேண்டியது மிக மிக முக்கியந்தான். ஆனால், இதுபோன்ற பொதுநலப் பிரச்சனைகளில் கோர்ட்டாரின் தீர்ப்பைக் கண்டிப்பதற்கு மக்களுக்கும் பத்திரிகைகளுக்கும் உரிமையிருக்க வேண்டாமா?

இந்த உரிமைக்கு விதையூன்றிய தலைவர் பெரியார் அவர்கட்கு நன்றி செலுத்திக் கொள்கிறோம்.

அடுத்த ஆண்டுக்குள் 'ரிட்டயர்' ஆகப் போகிற திருச்சி கலெக்டரை ஆட்சியாளர் எதுவும் செய்து விட முடியாது; எது செய்தாலும் அவர் சம்பளத்தையோ, பெருமையையோ, நேர்மையையோ, அவர் பாலுள்ள பொதுஜன அன்பையோ மயிரிழைக்கூட அசைக்க முடியாது. ஆதலால் அவரைப் பற்றியதல்ல. இந்தப் பிரச்சனை. ஆரிய நீதிபதிகளின் எல்லைக்கு மீறிய தீர்ப்புக் கருத்து வாக்கியங்களைப் பற்றியதேயாகும் இந்தப் பிரச்சனை.

இனி, என்ன நடக்கிறதென்று பார்ப்போம்! எதற்கும் தயாராயிருக்கிறார்கள், லட்சக்கணக்கான தமிழர்கள்! இராமன் படத்தை வெறுங்குப்பைத் தொட்டி கடுதாசி என்றும், பிள்ளையார் உருவத்தை வெறும் களிமண் என்றும் கருதித் தீவைத்தும், உடைத்தும் காட்டிய தமிழ்ப் பெருமக்கள் 'கோர்ட் அவமதிப்பு' என்ற பூச்சாண்டிக்கு அஞ்சி உண்மையை எடுத்துக் கூறத் தயங்குவார்களா என்று அதிகார வர்க்கம் சிந்தித்துப் பார்க்கட்டும். ●



படிப்பகம்

www.padippakam.com



# திருஞானசம்பந்தர்

திருவாரூர் கே.தங்கராசு





**காட்சி – 26**

மதுரைப் பெருநகரின் கண் இலங்கி அறத்தையும் பண்பையும், வளர்த்துவந்த சமணர் பள்ளிகள், பாழிகள், சைத்தியங்கள், விகாரங்கள் அத்தனையையும் சைவ மத வெறியர்களும், அரசு ஊழியர்களும், சம்பந்தன், குலச்சிறை இவர்களின் மேற்பார்வையில் உடைத்தும், தகர்த்தும், பெயர்த்தும் சில இடங்களில் கடைக்கால் (அஸ்திவாரம்) உட்பட தோண்டியும் நாசம் செய்கின்றனர்! பல இடங்களில் மாவீரர் (மகாவீரர்) விருஷபர் மற்றும் உள்ள சமண தீர்த்தங்கரர்களின் சிலைகளையெல்லாம் போட்டு நொறுக்கி விட்டு, அந்த இடங்களிலே அரி, அரன், கந்தன், விநாயகன் முதலிய உருவாரங்களை நிலை நாட்டுகின்றனர். ஒவ்வொரு இடத்திலும் உடனே மறையவர்களாம் முப்புரியினர் புகுந்து கொள்கின்றனர். இந்தக் காட்சிகளையெல்லாம் சம்பந்தனும், அவனது கூட்டத்தினரும் பார்த்துப் பார்த்து பூரிக்கின்றனர்.

**காட்சி – 26 (அ)**

இடம்: தோணியப்பர் ஆலயத்தையொட்டிப் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் பெரிய யாகசாலை

நேரம்: நடுப்பகல்

(ஆடவரும், பெண்டிரும், குழந்தைகளுமாக ஆயிரக்கணக்கான ஆரியர்கள் பெரும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் திரண்டிருக்கின்றனர். மறையோதும் வேதியர்கள், பெரிய பெரிய யாக குண்டங்களின் முன்பு வரிசையாக அமர்ந்து வடமொழியில் பெருங்குரலெடுத்து வேத ஸ்லோகங்களைக் கூறிக் கொண்டிருக்கின்றனர்)

யாகப் புரோகிதர்கள்: (ஒரே குரலாகக் கத்துகின்றனர்)

*யக்ஞார்த்தம் யசவ ஸ்ருஷ்டா!*
*ஸ்வமேய ஸ்வயம்புவா!*
*யக்ஞஸ்ய பூத்யை:*
*சர்வஸ்ய தஸ்மாத் யக்ஞோ!*
*வதோ வத!*

(இம்மாதிரியே மேலும் பல ஸ்லோகங்களைக் கூறியபடியே சமித்துகளையும், நெய்யையும் வாரி வாரிச் சொரிந்தபடி இருக்கின்றனர். நன்கு கொழுத்த பெரிய பெரிய ஆட்டுக்கடாக்கள் பல, வரிசையாக சந்தனமும் குங்குமமும் சாற்றப்பட்டு யாகக் குழிகளில் போட்டு வாட்ட தயாராகக் கட்டி வைக்கப்பட்டுள்ளன! தீயிலே பொசுக்கப்பட்ட ஆட்டு மாமிசத்தையும், மதுவையும் நன்கு சுவைத்து உண்டு பழக்கப்பட்ட பூசுரக் கூட்டத்தினர் நாவைச்

www.padippakam.com

சுழற்றியபடியே காத்திருக்கின்றனர். இப்போது சிவபாதவிருதயரும், நம்பாண்டார் நம்பியும் பேரானந்தமடைந்தவர்களாக, யாக யக்ஞாதிகளைச் சுற்றி வந்து மேற்பார்வையிட்டு வந்தவர்கள் தலைமைப் புரோகிதர் அருகில் வந்து....)

சிவபாதவிருதயர்: என்ன ஸ்வாமிகளே! நாழிகை ஆயிண்டே போறது! எல்லோரும் பசியோட காத்திண்டிருக்கா! சீக்கிரமா மேஷங்களை ஆகுதி குடுங்கோ!

தலைமைப் புரோகிதர்: ஆஹா! லக்னத்துக்கோசரம் காத்திண்டிருந்தேன். இதோ இப்பவே ஆரம்பிச்சுடறேன். (சீடர்களை நோக்கி) பிடிச்சிண்டு வாங்கோ!

(உடனே சில துடிப்பார்ப்பனர்கள் பாய்ந்து ஓடிச் சென்று கட்டியிருந்த ஆட்டுக்கடாக்களையெல்லாம் ஒவ்வொன்றாக இழுத்து வருகின்றனர். வாயில்லாத அந்தப் பிராணிகள் நெருப்பின் வெப்பத்தையும், புகையின் கொடுமையையும் தாங்காது கதறுகின்றன!... கல்நெஞ்சப் பாதகர்களான ஆரியர்கள் சிறிதும் மனமிரங்காது மந்திர ஸ்லோகங்களை முழக்கியபடியே முழு முழுக்கடாக்களாக வாயையும், கால்களையும் கட்டி அப்படியப்படியே தூக்கித் தூக்கி அக்கினி குண்டங்களில் போடுகின்றனர். அந்தோ கொடுமை! கத்தவோ, ஓடவோ வகையில்லாத அந்த உயிர்ப் பிராணிகள், சித்திரவதைக்கு ஆளாகி அப்படியப்படியே துடிதுடித்து தீயில் கருகி உயிரை விடுகின்றன. தீயில் பொசுங்கும் உரோமத்தின் கருகல் வாடையும் மாமிசத்தின் நிணநாற்றமும், கூடி நிற்கும் ஆரியர்களின் மூக்கில் புகப்புக அனைவரும் வயிற்றைத் தடவியபடியே மகிழ்ச்சிப் பரவசமாகின்றனர். புரோகிதச் சண்டாளர்களோ, இந்த 'ஜீவவதையை' பார்த்து வெறிவசமாகி மேலும் மேலும் ஆங்காரமாக அதிக சப்தத்தோடு மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு, செத்த ஆடுகளை குட்டுக்கோலால் புரட்டிப் புரட்டி வாட்டுகின்றனர். நன்றாக கருகி வெந்த ஆடுகளைப் பதம் பார்த்து சிலர் தூக்கியெடுத்து பெரிய பெரிய தட்டுகளில் வைக்க, சிலர் கூரிய கத்திகளால் அவற்றின் வயிற்றைப் பிளந்து, ஈரல், குலைக்காய்களைத் தனித்தனியாகவும் மற்றும் மாமிசங்களைக் கூறு கூறாகவும் பிரித்து வைக்கின்றனர்.)

### காட்சி – 26 (ஆ)

இடம்: உணவுக்கூடம் (போஜன சாலை)

நேரம்: மாலை.

ஆயிரக்கணக்கான ஆரியர்கள் ஆண்களும், பெண்களும் கலந்து, வரைமுறையின்றி அமர்ந்து சுவைமிகு உணவு வகைகளையும் யாகத்தில் 'ஆகுதி' கொடுக்கப்பட்ட ஆட்டு மாமிசத்தையும், இதர மாமிச வகைகளையும் உண்டு மகிழ்கின்றனர். சிவபாத விருதயரும், நம்பாண்டார் நம்பியும் இங்குமங்கும் ஓடி ஓடி உபசரிக்கின்றனர். அளவுக்குமீறி உண்டுவிட்டு வலி தாங்காது வயிற்றைத் தடவியபடி, குமட்டிக் கொண்டிருந்த ஒரு பூசுரனிடம் சிவபாத விருதயர் ஓடி வந்து....)

சிவபாத: சாப்பிடுங்கோ சாஸ்திரிகளே! நன்னா சாப்பிடுங்கோ!... கொஞ்சம் ஈரல் போடச் சொல்லட்டுமா?

சாஸ்திரி: மூளை இருக்க ஓய்....!

நம்பாண்: என்ன!

சாஸ்: இல்லே! மூளை இருந்தா போடுங்கோன்னேன்! இந்த மாதிரி கசிருசியா போஜனம் பண்ணி எத்தனை வருஷமாறது! இந்தச் சமண சாக்கியப் பசங்க ஒழுங்கா ஒரு யாகம் பண்ண விட்டான்களோ இத்தனை காலமும்!

சிவ: அந்தச் சண்டாளன்களைத்தான் பூண்டோட நாசம் பண்ணீட்டோமே ஓய்!

சாஸ்: அதனாலேதான் இப்ப திவ்யமாச் சாப்'டிண்டிருக்கோம். எல்லாம் உம்ம பையன் சம்பந்தனோட செயல்'ன்னா? ஓய்! விருதயரே! பெற்றாலும் பெற்றீர் பிள்ளையைப் படுசுட்டியான்னா பெற்றுட்டீர்! எல்லாம் அவன் செயல்!

நம்பா: சிவன் செயல்!

சாஸ்: அதுவும் சர்தான்!

(என்று கூறியபடி சாஸ்திரி சாப்பாட்டைக் கவனிக்க, சிவபாத விருதயரும் நம்பாண்டார் நம்பியும் அப்பால் போகின்றனர். கூடி இருந்தவர்கள் அனைவரும் வயிறு புடைக்க நன்றாக உண்பதும், மயக்கம் தரும் பான வகைகளைப் பருகுவதும், சந்தனத்தைப் பூசிக்கொண்டு புரள்வதும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பிடித்தவர்கள், இழுத்தவர்கள், கிடைத்தவர்கள் என ஆண்களும், பெண்களும் உருள்வதும், புரள்வதும், இறுதியில் அயர்வதுமாக மகிழ்ச்சிப் பெருங்கடலுக்குள் மூழ்கிக் கிடக்கின்றனர் விடியும் வரை.)

### காட்சி – 27

இடம்: மதுரை மீனாட்சி ஆலயம்.

நேரம்: மாலை

பாத்திரங்கள்: சம்பந்தன், அவனது பரிவாரங்கள், குலச்சிறை, மங்கையர்கரசி, பாண்டியன் மற்றும் வேதியர்கள், வேதமத முன்னோடிகள், வேடிக்கைப் பார்க்க வந்தவர்கள்,

(சமணர்களை அறவே ஒழித்து சைவத்தை நிலைநாட்டிய மகிழ்ச்சி விழாவைப் பெருங்களிப்போடு கொண்டாடி மகிழுகின்றனர். ஆலயம் மிகவும் ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. பூசுரப் பெண்கள் புதுக்கோலம் பூண்டு காட்சி தருகின்றனர். அவர்களைப் பார்த்து மகிழ்வதற்கே ஆலயம் புகும் வாலிபர்கள் வரையின்றி திரண்டிருக்கின்றனர். நட்டுவனாரின் 'ஜதிக்'கேற்ப நாட்டிய மங்கையர்கள் ஆடுகின்றனர்! சம்பந்தன் பாடுகின்றான்!

• சம்பந்தன்:

பட்டிசைந்த அல்குலாள்
பாவையாளோர் பாகமா
ஒட்டிசைந்த தன்றியும்
உச்சியாளொருத்தியாக்
கொட்டிசைந்த ஆடலாய்
கூடல் ஆல வாயிலாய்

---

• இப்பதிகங்கள்: சமணர்களைக் கழுவேற்றியதும், சம்பந்தன் கூட்டம் குலச்சிறை, மங்கையர்க்கரசி, பாண்டியன் உட்பட 'ஆலவாய் அண்ணலிடம் சென்று பாடி மகிழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

எட்டிசைந்த மூர்த்தியா
யிருந்தவாறி தென்னையே
குற்றம் நீ குணங்கள் நீ
கூடல் ஆல வாயிலாய்
சுற்றம் நீ பிரானும் நீ
தொடர்ந்திலங்கு சோதி நீ
கற்ற நூற் கருத்தும் நீ
அருத்தமின்ப மென்றிவை
முற்றும் நீ புகழ்ந்து முன்
உரைப்பதென்மு கம்மனே!

(சம்பந்தன் பாடி முடிக்கும் சமயம் சிவபாத விருதயரும், மற்றும் சிலரும் ஆலயத்துள் வருகின்றனர். அவர்களைப் பார்த்த சம்பந்தன் மிகவும் மரியாதையாக எழுந்து வரவேற்கிறான். சம்பந்தன் எழுந்ததைப் பார்த்த மன்னனும் மற்றவர்களும் எழுந்து மரியாதை செய்



கின்றனர். சம்பந்தன் ஓடிச் சென்று தந்தையைத் தழுவி...)

சம்பந்தன்: வாருங்கள் அப்பா! வாருங்கள்! அமருங்கள்!

(எல்லோரும் இருக்கையில் அமர்ந்ததும் மன்னனைப் பார்த்து)

சம்பந்: மன்னா! இவர் என் தந்தை! என்னை அழைத்துப் போக வந்திருக்கிறார்கள்.

பாண்டியன்: (திடுக்குற்று) அழைத்துப் போகவா!

சம்: வேறு! நிலைத்து இங்கேயே இருந்துவிடல் முடியுமா? (குலச்சிறையைப் பார்த்து) குலச்சிறை நீ சொல்! தருமம் அழிந்து அமணர்களும் அறிவிலிகளும் நிறைந்து கிடக்கும் மண்டிலங்கள் இன்னும் எத்தனை இருக்கின்றன என்று! அங்கெல்லாம் போக வேண்டாமா? அரன் பெருமை பாட வேண்டாமா?

குலச்: ஆம் அரசே! சமணர்கள் முற்றும் ஒழிந்து விட்டார்கள் என்று சொல்ல முடியாது! சோழ மண்டலத்தின் கீழ்ப் பகுதிகளில் பல இடங்களில் மறைந்தும் சில இடங்களில் உயர்ந்தும் வாழ்ந்து வருகிறார்கள்; புத்தர்கள் பலரும் கூட பரந்து வாழ்கின்றனர். அப்பகுதிகளில் அங்கெல்லாம் அருட்



பெருந்தகையாம் நம் அண்ணலின் பாதம்பட வேண்டு மல்லவா!

பாண்டி: ஆஹா! தர்மப்பணி பூண்டு நிற்கும் தங்கள் தொண்டுக்கு நான் குறுக்கே நிற்க மாட்டேன். ஆனால் மறந்திடாதீர்கள் இந்த நெடுமாறனை! எந்த நேரம் வேண்டுமானாலும் வாருங்கள் என் மனை தங்களுக்காகத் திறந்தே இருக்கும்.

சம்பந்: (விஷமப்புன்னகையோடு மங்கையைப் பார்த்தபடியே) மனை மட்டும்தானா?

பாண்: ஏன் இந்த மண்டிலமே தங்களதுதானே! என்ன வேண்டுமானாலும் எடுத்துப் போகலாமே!

சம்பந்: நல்லது மன்னா! வேண்டும்போது வருகின்றேன்! (குலச்சிறையைப் பார்த்து) குலச்சிறை! குறையேதும் இல்லை இனி யுனக்கு?

குலச்: தங்கள் அருளுக்குப் பின் மருள் ஏது ஸ்வாமி?

சம்: நல்லது! மகிழ் வோடு வாழ்! மதத்தோடு வாழ்! மனத்தோடு வாழ்! (மங்கையைப் பார்த்து) மங்கை!

(மங்கையர்க்கரசி பொங்கும் புனல் விழிகளை யடைக்க, சம்பந்தனின் அருகில் வந்து நின்று தலைகவிழ்க்கின்றாள்.



கண்ணீர்த் துளிகள் பொல பொலவெனத் தரையில் வீழ்ந்து சம்பந்தன் பாதத்தை நனைக்கின்றன.)

சம்பந்: என்ன மங்கை இது! ஏன் இப்படி? எங்கே போகிறேன் நான்! அரன் புகழ் பாடத்தானே!

மங்கை: (ஏறிட்டுப் பார்த்து) ஸ்வாமி! வந்தபோதே என் சிந்தையில் குடியேறிவிட்ட தாங்கள் எங்கள் மனையிலும் குடியேறி எங்களுடனேயே இருந்து விடுவீர்களென்று நம்பினேன். இன்று புறப்படுகிறீர்களே ஸ்வாமி! தங்களது தென்றல் தவழும் உரைகளையும், தேன் மணக்கும் பாக்களையும் இனி எங்கே கேட்பேன்? என்று கேட்பேன்?

www.padippakam.com

சம்பந்: கேட்பாய் மங்கை! கேட்பாய்! வேளை வந்தால் நாளையே கூட நான் திரும்பினாலும் திரும்பி விடுவேன்! மங்கை! நாம் இன்பத்திலும், இனிமையிலும், சுற்றத்திலும் சுவையிலும் வாழ வேண்டியது தான்! அப்படி நாம் வாழ முதலில் நம் மதம் வாழ வேண்டும். அது வாழ்ந்தால்தான் நாம் வாழ்வோம்! அது இருந்தால்தான் நாம் இருப்போம். அது அசல்! நாம் நிழல்! அது ஆடினால் நாம் ஆடுவோம்! அது கூட்டுவித்தால் நாம் கூடுவோம்! எனவே முதலும் மூலமுமான அந்தப் பணியை முன்னால் கவனிப்போம் - முடிந்ததும் நமது அணி! எப்போதும் போல என்ன...?

மங்கை: ஸ்வாமி! என்னை மறந்துவிட மாட்டீர்களே!

சம்: மறப்பதா! என்பதிகங்கள் தங்கள் இனிமையை மறந்தாலும் நான் உன்னை மறக்கமாட்டேன் மங்கை! நாடும் மறக்காது! நமது ஏடும் மறக்காது!

மங்கை: தங்களுக்கு எப்போது எது தேவையானாலும்...!

சம்: வருவேன்! வரும்போது... பெறுவேன் பெற வேண்டியதை! நீயும் தருவாய் தரவேண்டியதை! (பின்பு வாய்ச் சொல்லிழந்து கண்களால் பேசிக் கொள்கின்றனர்.)

(மயக்க மொழிகளில் மங்கையும், சம்பந்தனும் பேசுவதைப் பார்த்துச் சகிக்காத குலச்சிறை முன்வந்து)

குலச்சிறை: ஸ்வாமி! பல்லக்கு கள் சித்தமாகிவிட்டன!

சம்பந்: என்ன...! பல்லக்கா...! அதற்குள்ளாகவா தயாராகி விட்டது? மங்கை....

மங்கை: ஸ்வாமி....

சம்பந்: வரவா....

மங்: பிரிவா... (கண்களை மூடியபடியே துக்கம் தாளாது தவிக்கிறாள்.)

(அதைப் பார்த்த சம்பந்தன் குலச்சிறையைப் பார்த்து கெஞ்சுவது போல்...)

சம்: குலச்சிறை! வந்தது முதல் இந்த கூடல் மாநகரிலேயே நாம் தங்கிவிட்டதால் பாண்டிய நாட்டின் ஏனைய பகுதிகளை இதுகாறும் நாம் பார்க்கவில்லை... இல்லையா...?

குலச்: ஆஹா... இப்போதே எல்லா பகுதிகளையும் பார்த்துக் கொண்டே பின்னர் தாங்கள் காழி செல்ல ஏற்பாடு செய்கிறேன்..

சம்: செய்....? அப்படி யாம் பாண்டிப் பகுதிகளைப் பார்வையிடம் போது...

குலச்: யானும் கூடவே வந்து குறைவின்றிக் கவனிக்கிறேன்!

சம்: வா... அத்தோடு....

குலச்: மன்னர் பெருமானும்



மகிழ்வோடு கலந்து கொள்வார்.

சம்: கலக்கட்டும்...! அவரோடு....

குலச்: (சம்பந்தனது உட்கருத்தைப் புரிந்து கொண்டு) தேவியாரும் வரவேண்டும்?

சம்: ஆம்! பிரிவுத் துயர் தாங்காது தவிக்கும் இப்பேதை இன்னும் சிறிதுகாலம் எம்மோடு போந்து தலங்கள் தோறும் ஆடி, அரன் புகழ்பாடி நற்பயன் பெறட்டும். ஏற்பாடுகளைச் செய்!

மங்கை: (குதூகலத்துடன் குதித்துக் கொண்டு ஸ்வாமி தங்கள் அன்புக்கு யான் என்ன கைம்மாறு செய்வேன்? (குணவனிடம் சென்று) அரசே! காழியண்ணல் வாய் மொழி கேட்டீர்களா? இப்பொழுதே ஏற்பாடுகளைச் செய்யுங்கள்! பதிகள் தோறும் செல்வோம்! பாவங்கள் அனைத்தையும் அறுப்போம்!

பாண்: மங்கை? உனக்கு மறுப்புரைக்கும் நிலை எனக்கேது? எங்கு செல்ல வேண்டுமோ சொல்! செல்வோம்...

மங்கை: எங்கு? அரனுறை ஆலயங்களுக்கெல்லாம் 'அண்ண' லுடன் போக வேண்டுமென்கிறேன்1

பாண்: 'அண்ணலுடன்' போகத் தானே' ஆஹா... குலச்சிறை! ஏற்பாடுகளைச் செய்!

குலச்: உத்தரவு மன்னா?

(இவ்வாறு பாண்டியனும், குலச்சிறையும், பெற்ற தந்தையும் உடன்வர சம்பந்தன், மங்கையர்கரசியுடனும், மற்றும் சைவ அடியார்க் குழாத்துடனும் திருப்பரங்குன்றம், திருவாப்பனூர், திருப்பூவணம் (திருப்புவனம்) திருக்கானப்பேர், திருக்குற்றாலம், திருநெல்வேலி, திருராமேச்வரம், திருக்கே தீச்சரம், திரு ஆடானை, திருச்சிற்றம்பலம், திருப்புனல் வாயில் ஆகிய ஊர்களில் தலயாத்திரை என்ற பெயரில் வரன் முறை யற்ற கேளிக்கைகளில் ஈடுபட்டு, பிற நெறியாளர்களை அரசு உதவி கொண்டு அடியோடு ஒழித்து 'சிவத் தொண்டு' புரிந்துகொண்டு இறுதியாக குலச்சிறையின் சொந்த ஊராகிய மணமேற்குடியில் சிறிது காலம் போக்கிவிட்டு, பாண்டியனின் தொல்லை தாளாது மீண்டும், மதுரை வந்து எப்படியோ, மனத்துணிவு கொண்டோ அல்லது சலிப்புற்றோ மங்கையையும் மற்றும் பாண்டியன், குலச்சிறை ஆகியோரையும் பிரிந்து சோழ நாட்டுக்குத் திரும்புகிறான் சம்பந்தன், தன் தந்தையோடும் பரிவாரங்களோடும்! பாண்டியனோ பொன்னும் பொருளுமாகப் பல பல்லக்குகளில் அள்ளிக்குவித்து வழியனுப்பி வைக்கிறான்.) ●



படிப்பகம்

www.padippakam.com



கண்ணீரால் இரத்தத்தால்
கலங்கிச் சேறாகும்
ஈழத்தைப் பார்க்கிறேன்.
போராடும்
தமிழனைப் பரிவோடு
பார்ப்பது
ராஜ துரோகம் என்றால்,

# நான் ஒரு ராஜ துரோகி

என்பதில்
பெருமைப்படுகிறேன்.

பேராசிரியர் கு.அரசேந்திரனின் ஐந்து நூல்கள் வெளியீட்டு விழா சென்னை தேவநேயப் பாவாணர் அரங்கத்தில் நடந்தது. நூலை வெளியிடுவதற்காகப் பதினைந்து ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் அந்த அரங்கிற்குள் நுழைந்த ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, ஈழத்துக்குச் சென்று பிரபாகரனைச் சந்தித்த அந்த நாட்களை உணர்ச்சி பூர்வமாக நினைவு கூர்ந்தார்.

தேவநேயப் பாவாணர் அரங்கத்திலே நான் பேசிப் பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. உலகெங்கும் வாழுகின்ற தமிழர்கள் பெருமை கொள்ளத் தக்கதொரு போரை நடத்திக் கொண்டிருக்கும் தம்பி பிரபாகரனைச் சந்தித்து விட்டு, அங்கிருந்து கடல் வழியாகவும் தரை வழியாகவும் இரு நாட்டுப்படைகளின் தாக்குதலுக்குத் தப்பி, குறிப்பாக அப்போது அங்கு வந்திருந்த இந்திய ராணுவத்தின் வெறித் தாக்குதலுக்குத் தப்பி, அப்போது என்னைப் பாதுகாத்து அழைத்துச் செல்ல வந்திருந்த தம்பி பீட்டர் கென்னடி என்ற சரத் கொல்லப்பட்டு, பலர் படுகாயமுற்று, இனி உயிருடன் இந்த மண்ணை வந்து அடைய முடியாது என்ற நிலையில் மீண்டும் அலைகடல் வழியே ஓர் அதிகாலை வேளையிலே 4 மணிக்கு வல்வெட்டித் துறையிலே போய் நின்றோம்.

அப்போது தெருவெங்கும் இராணுவம் திரிவதால் மரக் கலத்தை விட்டு இறங்க வேண்டாம் என்று சொல்லப்பட்டது. 45 நிமிடம் காத்திருந்து இறங்கி நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீட்டுக்கு அழைத்துச் செல்லப் பட்டோம். அப்போது மழிக்கப் படாத முகமும், விளையாட்டுக் களத்திலே போட்டுக் கொள்ளப்படும் ஒரு கால் சட்டையும், கை வைக்காத ஒரு பனியனுமாக அடையாளம் காண முடியாத ஒரு தோற்றத்துடன் நான் இருந்தேன்.

நான் உள்ளே நுழையும் போது அந்த வீடெங்கும் ஒரு பரபரப்புக் காணப்பட்டது. சமையல் கூடத்தில் அந்த நேரத்திலும் கூட சமையல் தயாராகிக் கொண்டிருந்தது. அந்த வீட்டைச் சேர்ந்த ஏழு அல்லது எட்டு வயதுச் சிறுவன் ஒருவனை அவனது தந்தையார்

www.padippakam.com

அழைத்துக் கொண்டு என்னிடம் வந்து "இந்த மாமா யார் தெரிகிறதா பார்..." என்று என்னைக் காட்டிக் கேட்டார்.

நானோ நம்மை யாருக்கும் அடையாளம் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் கொஞ்சமும் தாமதிக்காமல் அந்தச் சிறுவன் "இவர் வை.கோபால்சாமி மாமா" என்றான். எப்படி என்னை இவன் இவ்வளவு சரியாக அடையாளம் கண்டு கொண்டான் என்று நான் திகைத்து, அவர்களிடம் கேட்ட போது அங்கிருந்த ஒளிப்பேழையை எடுத்துப் போட்டார்கள். அதில் நான் இந்தத் தேவநேயப் பாவாணர் அரங்கத்தில் பேசிய பேச்சு அதிலே பதிவு செய்யப்பட்டிருந்தது.

நாம் நெடுந்தூரம் கடந்து வந்திருக்கிறோம். வன்னிக் காடுகளிலே பேச்சு வார்த்தைக்காக நார்வே தூதுக்குழுவினர் வருகிறார்கள். பிரபாகரனைச் சந்திப்பதற்காக லண்டன் மாநகரிலே இருந்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அண்டன் பாலசிங்கமும், ஆஸ்திரேலிய மண் தமிழுக்குத் தந்த அவரது துணைவியாரும் வருகிறார்கள்.

கடல் வழியாக வரக்கூடிய ஒரு சிறு விமானத்தில் வந்து வன்னிக் காடுகளுக்குப் பக்கத்திலேயே இருக்கக்கூடிய கடலோரப் பகுதிகளிலேயே இறங்குகிறார்கள். கரையிலிருந்து பிரபாகரன் அவருக்குக் கரம் கொடுத்து வரவேற்கிறார். இந்தக் காட்சியைத் தொலைக்காட்சியிலே நீங்கள் பலரும் பார்த்திருப்பீர்கள். பிழைக்க முடியாது என்ற நிலையில் இருந்த பாலசிங்கத்தை - இரண்டு சிறுநீரகங்களையும் மாற்றியமைத்துக் குணப்படுத்திப் பாதுகாத்து -

"

**நார்வேக்காரனுக்கு பாலசிங்கத்தின் மீது இருக்கும் மனிதாபிமான உணர்வு இந்தத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடாதா?**

"



நார்வே நாட்டுக்காரர்கள் அழைத்து வருகிறார்கள்.

ஐம்பது ஆண்டுகாலத் தேசிய இனப்பிரச்னை அது ஒரு பயங்கரவாதப் பிரச்னை அல்ல. பாலசிங்கம் இருந்தால் தான் தீரும் என்ற நோக்கத்தோடு அவரை அழைத்து வந்திருக்கிறார்கள்.

எந்த ஆஸ்லோ நகரத்தில் பாலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்குமிடையே அமைதிப் பேச்சு வார்த்தை தொடங்கப்பட்டு அது வெள்ளை மாளிகையிலே கைகுலுக்கும் காட்சியாக அரங்கேறியதோ அந்த ஆஸ்லோ நகரத்திலேயிருந்து தமிழர்களின் ஐம்பது ஆண்டு காலத் தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு நார்வேக்காரர்கள் இந்தப் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது ஐம்பது ஆண்டு காலத் தேசிய இனப் பிரச்னை.

பயங்கரவாதப் பிரச்னை அல்ல. இது பயங்கரவாதப் பிரச்னை என்றால் ஏன் வட அயர்லாந்துப் பிரச்னையைப் பயங்கரவாதப் பிரச்னையாகப் பார்க்க உலகம் மறுக்கிறது. எண்ணற்ற உயிர்களை இருபுறமும் கொன்று குவித்துக் கொண்டிருக்கிற இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்னையைப் பயங்கரவாதப் பிரச்னையாக ஏன் உலகம் கணிக்கவில்லை. பச்சிளங் குழந்தைகள் கொல்லப்பட்டு, தாய்மார்கள் மானபங்கப்படுத்தப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, தமிழனின் பல்லாயிரக் கணக்கான நூல்கள் எரிக்கப்பட்டு இனிப்போராடாமல் நீதி கிடைக்காது என்ற நிலையில், உலகத்தின் எத்தனையோ இனங்கள் போராடிய வழியைப் பின்பற்றி ஈழத்து இளைஞர்கள் விடுதலைப் புலிகளாக மாறி ஆயுதம் ஏந்தினார்களே... அது தானே வரலாறு.

ஒரு மகத்தான இலட்சியத்துக்கான இந்தப் போராட்டத்தை மற்ற பகுதிகளில் நடக்கும் பயங்கரவாதத்தோடு ஒப்பிடுவது ஏற்கக்கூடியது அல்ல. நான் வன்முறையை ஆதரிப்பவன் அல்ல. தமிழகத்திலே வன்முறை தலைகாட்டி விடக் கூடாது என்ற நோக்கத்தோடு கடந்த எட்டு ஆண்டுகளாகத் தமிழகத்திலே நாங்கள் அரசியல் நடத்தி வருகிறோம். ரணில் விக்ரமசிங்கே நல்லூர் கந்தசாமிக் கோயிலுக்குள் போகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழர்கள் வாழ்த்தி வரவேற்கிறார்கள். 1983-க்குப்பிறகு இலங்கையின் அதிபரொருவர் இப்போதுதான் தமிழ்ப்பகுதிக்குள் போகிறார். புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் அந்தப் பகுதிக்குள் ரணில் விக்ரமசிங்கேயை பெரும் கூட்டமாகத் தமிழ் மக்கள் கூடி வரவேற்கிறார்களென்றால் அது புலிகள் செய்து கொடுத்த ஏற்பாடுதான். ரணில் விக்ரமசிங்கேயோடு மக்களைப் பாசத்தோடு நெருங்க விடுவது எதிர்காலத்தில் நமக்கு நல்லதல்ல என்ற குறுகிய புத்தி புலிகளுக்கு இல்லையே.

இப்படி எல்லோரும் அமைதிக்கு ஏங்கி, அதற்கான பேச்சு வார்த்தை நடக்க இருக்கும் இவ்வேளையில், ஓர் உச்சக்கட்ட நீரிழிவு நோயாளியான பாலசிங்கம் ஒரு சிறிய விமானத்தில் மாலத்தீவுக்குப் போகிறார். நார்வேக்காரனுக்கு பாலசிங்கத்தின் மீது இருக்கும் மனிதாபிமான உணர்வு இந்தத் தமிழ்நாட்டில் இருக்கக் கூடாதா? லண்டனிலே நான் பாலசிங்கத்தைச் சந்தித்து விட்டு வந்த போது 'எப்படிச் சந்திக்கலாம்? என்று தேசபக்தியை மொத்தக் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட சிலர் கேட்டார்கள். ராஜ துரோகி என்றார்கள்.

பாலசிங்கத்தைச் சந்திப்பதே ராஜதுரோகம் என்றால் மகிழ்ச்சியோடு நான் அதைப் பலமுறை செய்வேன்.


தடை செய்யப்பட்ட உல்பா இயக்கத்தின் தலைவரை உடல் நலமில்லாத அவரது தந்தையாரை வந்து பார்த்துச் செல்ல அனுமதியும், பாதுகாப்பும் அளித்துள்ளது அந்த அரசு. நாகலாந்தின் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் தலைவர்களோடு இந்திய அரசே நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்துகிறது.

தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் தலைவர்களோடு இந்திய அரசு பேசுவதில் தவறில்லை. ஆனால் ஐம்பது ஆண்டுகளாக இனப்படுகொலை செய்து கொண்டிருக்கும் சிங்களப் பேரினவாத அரசோடு தன் உரிமைக்காகப் போராடுகிற தமிழர்களின் அமைப்பு ஒன்று பேச்சு நடத்த - உயிருக்குப் போராடுகின்ற பாலசிங்கத்தைத் தமிழ்நாட்டிலே தங்க வைத்து அதற்கு உதவி செய்வதில் என்ன தவறு. இப்போது தாய் மண்ணிலே பேச முடியாத அவர்கள் தாய்லாந்திலே பேசப் போகிறார்கள்.

இந்தியாவிலே சென்னையில் வேண்டாம் ஏனென்றால் உலகமே பேச்சுவார்த்தையை வரவேற்றுக் கொண்டிருக்கிற பொழுது பாலசிங்கம் இங்கு வரவே கூடாது என்று கவர்னர் உரையிலேயே வாசிக்கப்பட்டது. வேறு ஒரு நகரத்தில் வைத்திருக்க அனுமதித்திருக்கலாம் அல்லவா? உடல் நலம் குன்றியுள்ள அவருக்கு அது எவ்வளவு உதவியாக இருந்திருக்கும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம்மோடு தொடர்புள்ள இந்தப் பிரச்னையில் இந்தத் தருணத்தில் இந்தியா இப்படி நடந்து கொண்டால் நிரந்தரமாகக் கைகழுவிவிடப் போகிறோமோ? தமிழர்களை? தந்தை செல்வாவின் காலத்துக்குப் பிறகு முதல் முதலாக இப்போதுதான் தமிழ் அமைப்புகள் குரல் கொடுக்கின்றன. செல்வாவின் காலத்திலே இல்லாத தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவு கூட இப்போது கிடைத்துள்ளது.

இந்திய வம்சாவழித் தமிழர்களும் விரும்பி வரவேற்கும் இந்த நிலையில் பேச்சு வார்த்தைக்கு நாம் உதவ வேண்டியது கட்டாயம் அல்லவா? பதினோரு ஆண்டுகளாக எந்தப் பிரதமரும் பேசாத ஒன்றை பிரதமர் வாஜ்பாய் பாராளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரையின் மீதான விவாதத்துக்குப் பதிலளிக்கும் போது கூறினார்.



'ஒன்றுபட்ட இலங்கைக்குள் எல்லாத் தரப்புக்கும் சமவாய்ப்புப் பெறும் வகையிலே அமைதிப் பேச்சு வெற்றிபெற வேண்டும்' என்று கூறினார். அது மட்டுமல்ல கோவையிலே நான் அருகில் இருக்கும்போது பத்திரிகையாளர்கள் ஒரு முறை அவரிடம், "ஈழப் பிரச்னையில் நீங்கள் தலையிடுவீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் "இரு தரப்பும் எங்களை அணுகினால்" என்றார். இமாசலப் பிரதேசத்துக்குச் சென்றிருந்த போது பத்திரிகையாளர்களிடம் பேசிய அவர், "தமிழர்கள் பக்கம் நியாயம் இருக்கிறது. அதற்காக அவர்கள் போராடுகிறார்கள் என்றும் கூறினார்.

ஆகவே பாலசிங்கம் இந்தியா வருவதற்கும், மருத்துவம் பெறுவதற்கும், அனுமதிக்க வேண்டும். அமைதிப் பேச்சு வார்த்தை இங்கு நடக்க இந்திய அரசு உதவ வேண்டும். அனைத்து உளவுப் பிரிவுகளையும் வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த வேண்டுகோளை பிரதமரிடமும், உள்துறை அமைச்சரிடமும், வெளியுறவு அமைச்சரிடமும் வைத்துள்ளேன். உலகெங்கிலுமுள்ள தமிழர்களின் வரலாற்றில் மறுமலர்ச்சி ஏற்பட இருக்கும் இந்த வேளையில் தமிழினத்தைச் சூழ்ந்துள்ள அந்தகாரம் விலக இருக்கும் இந்த வேளையில் இதை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

**தொகுப்பு: மெ.உலகநாதன்**

www.padippakam.com



# ஜெயபாஸ்கரன் கவிதையில் 'கெட்ட' வார்த்தை

நா. முத்து நிலவன்



அண்மையில் (25.03.2002) சென்னையில் நடந்த ஜெயபாஸ்கரன் கவிதைகள் நூல் வெளியீட்டு விழாவில் சுவையான விவாதம் ஒன்று நடந்தது.

'நந்தன்' ஆசிரியர் நா.அருணாசலம் தலைமையில், கவிஞர் கனிமொழி புத்தகத்தை வெளியிட்டுப் பேச, வீ.கே.டி. பாலன் முதல்படி பெற்று உரையாற்றினார்.

க.ப. அறவாணன், திலகவதி, 'தென்கச்சி' கோ.சுவாமிநாதன், வீரபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். மணிமுடி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

நானும் திருப்பூர் கிருஷ்ணனும் நூல் திறனாய்வு செய்து பேசினோம்.

முதலில் பேசிய நான் கவிதையெனில் முதலில் புரிய வேண்டும். பாரதி அப்படித்தான் 'எளிய பதம், எளிய சொற்கள், பொது மக்கள் விரும்பக்கூடிய மெட்டு இவற்றால் ஆகிய காவியம் ஒன்றை செய்து தருகிறவன் தமிழன்னைக்குப் புதிய அணிகலன் சூட்டியவனாகிறான்' என்று பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையிலேயே பிரகடனப்படுத்தி விடுகிறான்.

'ஜெயபாஸ்கரன் கவிதைகளின் வலிமையே அதன் எளிமைதான்.' என்று பேசியதோடு சில கவிஞர்கள் 'எந்த அளவிற்குப் புரியவில்லையோ அந்த அளவிற்கு உயர்ந்த கவிதை' என்பதாக நினைத்துக் கொண்டு விடுகிறார்கள் என்றும் கூறினேன்.

கவிஞர் மகுடேசுவரன் இப்படித்தான்.

..அது அதுவாகவும்
இது இதுவாகவும் இருந்தது
பிறகு-
அது இதுவாகவும்
இது அதுவாகவும் மாறின.
இப்போது அதது அததுவாக
இதிது இதிதுவாக..

என்றொரு... 'புரியாத பாணி'க் கவிதையை எழுதியிருக்கிறார் என்றும் சொல்லி வைத்தேன்.

அடுத்துப்பேசிய திருப்பூர் கிருஷ்ணன் 'தனக்குப் புரியவில்லை என்பதற்காக கவிதையில் ஒன்றுமில்லை என்று சொல்லி விடக்கூடாது. புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும்' என்று பேசிவிட்டு ஜெயபாஸ்கரனின் கவிதைகளைப் பாராட்டிய கையோடு தொகுப்பில் உள்ள 'மயில்' என்னும் கவிதையின் இறுதியாக-

'மயில்களைப் பார்க்கும் போது
மட்டுமின்றி
போய்ப்பார்த்தும்
சொல்லியாக
வேண்டியிருக்கிறது-
மயிலே... மயிலே... நீ
எந்த மயிரானுக்கும்
இறகு போடாதே'

என்று வரும் வரிகளை இன்னும் கொஞ்சம் மறைமுகமாகச் சொல்லியிருக்கலாம். கவிதையில் இது போன்ற சொற்களைக் கையாளும்போது இன்னும் யோசிக்க வேண்டும். எல்லாவற்றையும் அப்படியே சொல்லிவிடுவது நல்லதல்ல. என்று பேசினார். 'பகர ஈகாரம்-பவ்வீ' என்றெல்லாம் ஓரெழுத்து வார்த்தையைச் சொல்வதுமாதிரி இலைமறை காயாகச் சொல்ல வேண்டும்... என்றார்.

பிறகு பேசியவர்கள் இது பற்றி நிறையப் பேசினார்கள். அப்போது இதுபற்றி நான் சொல்ல நினைத்ததை அங்கேயே சொல்ல முடியாதவாறு நான் முதலிலேயே பேசிவிட்டதால், இப்போது அந்தக் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

இது பற்றிக் கவிஞர்கள் மட்டுமல்ல அனைவருமே கருத்துக் கூறலாம்.

சொல்லில் வழக்குச்சொல்லே முக்கியத்துவம் மிகுந்தது. தொல்காப்பியரும்--

'வழக்கும் செய்யுளும்
ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும்
பொருளும் நாடி'

தான் இலக்கணம் படைத்தார்.

அப்படியான தமிழ் இலக்



படிப்பகம்

www.padippakam.com

கணத்தில் அதே வழக்கை 'இயல்பு வழக்கு, தகுதி வழக்கு' என இரண்டு பிரிவாக்கினர் பின் வந்த நன்னூல் இலக்கணத்தார்.

அதற்கு என்ன பொருளெனில் 'இயல்பு வழக்கு' அப்படியே இயல்பான (உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே என்றவாறு உயர்வான) வழக்கு.

தகுதி வழக்குத்தான் கொஞ்சம் தகராறு. சபையில் - இலக்கியத்திலும்கூட - சொல்லத்தகாத சொற்களைத் தகுதிப்படுத்தி (அல்லது மறைத்து- பூசி மெழுகி) சொல்வது.

'பெரியவங்க பேசிக்கிட்டு இருக்கும் போது மருவாதி இல்லாம பேசக்கூடாது' எனும் உள்ளடக்கம் தான் இது.


இதனைச் சிலவகையாகப் பிரித்தனர் - 'பெரியோர்; அதாவது 'இடக்கர் அடக்கல்; (இடக்கான- தகுதியற்ற சொற்களை மாற்றிப்பேசுவது)

'ஆய் வருதும்மா' - ன்னு சொல்லக் கூடாது. ஆனா 'டூ பாத்ரூம் வருது'ன்னு சொல்லலாம் (!)

'மங்கலம்', (அமங்கலமான சொற்களை மங்கலமாக மாற்றிப்பேசுவது)

'ஆடிப்பெருக்கில் தாலி சுருக்குவதை 'தாலி பெருக்கிப் போடுவது' என்பது.

அடிப்படையில் பார்த்தால் 'தகுதியற்ற சொற்களை 'நீர் தெளித்து' தகுதிப்படுத்துவதுதான் இதன் உள்ளடக்கமும். அது- தகுதிப்படுத்துவதல்ல, இருக்கும் வேற்றுமைக்கு எதிரான கோபத்தைச் சமாதானப்படுத்துவது, ஏற்கச் செய்வது, வேற்றுமையைப் பாதுகாப்பதேதான்!



தகுதியற்ற சொல் என்றோ தகுதியற்ற மனிதன் என்றோ இயல்பில் யாரும் எதுவுமில்லை. சொல்லப்படும் சூழல், நோக்கம்தான் சொல்லின் பொருளை ஆழமாக வெளிப்படுத்தும். 'மயிர்' எனும் சொல்லை வள்ளுவரும் உவமையாக்கியிருக்கிறார் (குறள்969), அது அசிங்கமாயில்லையே!

கவிஞர் அறிவுமதியும்...

'பறையர், படையாட்சி, தேவர்,
செட்டியார்
நாடார், பிள்ளை- மசுரு
ஒரே முருகன்'

- எனும் போது 'ஒரே சாமியக் கும்பிட்டும் இன்னும் சாதிச்சனியன் ஒழியலையே', எனும் எரிச்சல் நமக்குள் ஏற்படுவதைச் சரியாகத்தானே வார்த்தைப் படுத்தியிருக்கிறார் கவிஞர்?

கவிஞர் இன்குலாப் அதையே எரிச்சலாக அல்ல ஆவேசமாகவே பயன்படுத்துகிறார். 'மனுசங்கடா'... எனும் பாடலில்.

கவிஞர் இன்குலாப் அதையே எரிச்சலாக அல்ல ஆவேசமாகவே பயன்படுத்துகிறார்.

'மனுசங்கடா'... எனும் பாடலில்,

'சதையும் எலும்பும் நீங்க வச்ச
தீயில் வேகுதே - உங்க

சர்க்காரும் கோர்ட்டும் அதுல
எண்ணெய ஊத்துதே

எதையெதையோ சலுகையின்னு
அறிவிக்கிறீங்க - நாங்க

எரியும்போது எவன் மசுரப்
புடுங்கப் போனீங்க'

எனும்போது, முனைவர் குணசேகரனின் குரலில் தெறிக்கும் கோபம், தலித்துகளின் தர்மாவேசமன்றி அசிங்கமா அது?

'பறையருக்கும் இங்கு தீயப்
புலையருக்கும் விடுதலை'

எனும் வரிகளைக் கேட்டு மிரண்டு 'சாதிப் பெயரா இருக்கே கொஞ்சம் மாத்திக்க முடியுமா' என்று கேட்ட வானொலி அதிகாரிகளிடம் பாரதியைக் கூட்டி வந்தா மாற்ற முடியும்?

அவன் வந்தாலும் மாற்றித் தருவானா?

'பறைச்சி யாவ தேதடா
பார்ப்
பனத்தி யாவ தேதடா

இறைச்சி தோல்
எலும்பிலே
இலக்க மிட்டு
இருக்குதோ'

எனும் சித்தர் பாடலில் கூட சாதிப்பெயர்கள் வரத்தான் செய்கின்றன. அது இழிவுபடுத்தும் நோக்கில் அல்ல. இடித்துரைக்க.

அசிங்கத்துக்கும் ஆபாசத்துக்கும் வேறுபாடு நிறை உண்டு. முன்னது, அருவெறுப்பூட்டுவது. பின்னது, இன்னது என்றறியாமலே தவறு செய்யத்தூண்டுவது. 'திரைப்பட, வணிக, படைப்பாளிகள் இரண்டையும் குழப்புவதில் தெளிவானவர்கள். அதனால்தான் உடல் உறுப்பு கூட ஆபாசமாக நமது சமூகத்தில் அறியப்பட்டுள்ளது.

இரண்டு பொருள்பட (சிலேடை) எழுதிய நரைப்புலவர்களாவது தேவலாம் எனும் அளவில் இன்றைய திரைப்புலவர்கள் (ஒரே பொருளில் தான்) உறுப்புகளைப் பற்றியும் பொறுப்பின்றி எழுது

www.padippakam.com

கிறார்கள்.

மறை உறுப்புகளின் பெயர்களைக் கூட ஒடுக்கப்பட்டவர்களின் ஆவேசத்தைத் தூண்டும் வகையில் பாட முடியுமா?

முடியும் என்றெழுதிய கவிகளும் உண்டு.

'ஆண்கள்தான் வேதம் படிக்க வேண்டும்' என்ற - இன்றைய - சங்கராச்சாரியாருக்கு விடையாக ஒரு வினா எழுப்பிய

'வேதம் படிக்க
கண்வேண்டும் வாய்வேண்டும்
ஆண்குறி எதற்கு?'

எனும் நீலமணியின் கேள்வியில் தெறிப்பது ஆபாசமா ஆவேசமா?

பெண்ணிய வளர்ச்சியில் பாட வந்த பெண் கவிஞர்கள், இந்த உறுப்பு சமாச்சாரங்களையெல்லாம் நொறுக்கி யெறிகிறார்கள்!

'அச்சமும் நாணும்
மடனும் முந்துறுத்த
நிச்சமும்
பெண்பாற்கு உரிய'

-எனும் பழம்பஞ்சாங்கத்தை கிழித் தெறிந்து,

'மரப்பாச்சி
பொம்மைக்கும்
மாராப்பு போட்டுவைத்த
பண்பட்ட தேசமிது,
இன்று- அரைகுறைதான்
அழகாம்!
இடையைக்கூர்ந்து
தொடையை ஆய்ந்து
கசாப்புக் கடைகட்டும்
இளம்எப் கலாச்சாரம்!
எல்லா நாயும்
காலைத் தூக்க
எம் தேசமென்ன
தெருவோர நடுகல்லா?'

-எனும் ஆர். நீலாவின் கோபத்தில் 'ஆபாசம்' ஆவேசமாகிறதே!

இதையெல்லாம் விடவும், 'பெண்கள் இப்படிப்பாடலாமா' என்று சிலர் அதிர்ச்சியடையும் விதத்தில் பாடுகிறார்கள் இன்றைய தமிழ் பெண்கவிகள் (க்ருஷாங்கினி - மாலதி மைத்ரி தொகுத்த 20-ஆம் நூற்றாண்டுப் பெண் கவிகளின் 'பறத்தல் அதன் சுதந்திரம்' காவ்யா வெளியீடு பார்க்க)

பெண்பார்க்கும் படலத்தில் பெண்ணின் சம்மதம் கேட்கப் படுவதில்லையெனும் புலம்பல் ஒருபக்கம் தொடரும் போதே திருமணம் பற்றிய மாற்றுப் பார்வையுடன்

> பெண்ணிய வளர்ச்சியில் பாடவந்த பெண் கவிஞர்கள், இந்த உறுப்பு சமாச்சாரங்களை எல்லாம் நொறுக்கி எறிகிறார்கள்!

'.... உன்னிடமிருந்து
கலங்கலானதே எனினும்
சிறிதளவு அன்பைப் பெற
எல்லா அறிதல்களுடனும்
விரிகிறதென் யோனி'

எனும் சல்மா வின் கவிதையில்தான் எத்தனை யுக ஆதங்கம். குட்டி ரேவதியின்

'ஆலிங்கனப் பிழிதலில்
அன்பையும்
சிசுகண்ட அதிர்வில்
குருதியின் பாலையும்
சாறெடுக்கின்றன'

எனும் 'முலை' கவிதை, எந்த உறுத்தலும் இன்றி இயல்பாகவே உள்ளதே!

அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே' எனும் பழைய கட்டுப்பாடுகள் கவிஞர் - கலைஞர்களிடம் வேண்டியதில்லை என்பதே எனது கருத்து. சொல்லின் வலிமை தெரிந்தவர்தானே கவிஞராக முடியும்?

புண்ணைக்கீறும் போது, நிணமும் சீழும் வரத்தான் செய்யும். மருந்து போட்டு ஆற்றுவதே நோக்கமெனில் அது தவறாகப் படாது. நண்பர் திருப்பூர் கிருஷ்ணன் இதை அறிவாராக.



வாய்மொழி வழக்கு, சொலவடை, பழமொழிகளில் இந்த உழைக்கும் மக்களின் இயல்பான 'கெட்ட' வார்த்தைகள் ஏராளமாக வருவதையும் பார்த்தால் அதில்தான் நமது மக்களின் ஆசை, கோபம், எரிச்சல், ஆற்றாமை, மகிழ்ச்சி உட்பட வாழ்க்கை வரலாறே தெரியும்.

அந்த பாணியிலான ஒரு 'சொலவடையோடு' இந்த விவாதத்தை முடிப்போமா...

அயோத்தி வழியாக கோத்ராவிலோ, குஜராத்திலோ காட்டுமிராண்டித்தனம் செய்யும் ஒருவனை எந்த மதம் என்றா கேட்பீர்?

அவன் மனிதனே கிடையாது! அப்புறம் அவனை எந்த மதத்தில் சேர்ப்பது?

"நக்குற நாய்க்கு,
செக்கு என்ன சிவலிங்கம் என்ன?

என்றுதான் சொல்ல முடியும்!

என்ன நாஞ் சொல்றது சரிதானுங்களே?



படிப்பகம்

www.padippakam.com

**1871**-இல் "பாரிஸ் கம்யூன்" என்றறியப்படும் முதலாவது தொழிலாளி வர்க்க ஆயுதப் போராட்டம் நடைபெற்றது. உடனே முதலாளித்துவ ஊடகங்கள் கம்யூனிஸ்ட் வேட்டையைத் தொடங்கின. கார்ல் மார்க்ஸ் - ஃப்ரெட்ரிக் ஏங்கெல்ஸ் தலைமையில் இயங்கிய 'தொழிலாளிகளின் சர்வதேச அமைப்புதான் பாரிஸ் தாக்குதலுக்குப் பின்னணியாக இருப்பதாக அந்த ஊடகங்கள்

●●

புரட்சி என்பது வேறு;
பயங்கரவாதம்
என்பது வேறு.
அறியாதவர்கள் அல்லர்
ஆதிக்கவாதிகள்.

ஆனால்...

●●

வருவாய் ஈட்டும் ஒரு பங்குச் சந்தைத் தரகரின் அறையைப் போல இருந்தது.... மேஜையில் இருந்த பூஜாடியில் வெடிகுண்டு ஏதாவது இருக்கிறதா என்று நான் ஓரக்கண்ணால் ஆராய்ந்தேன். பெட்ரோல் மணம் வீசுகிறதா என்றும் முகர்ந்து பார்த்தேன். ஆனால் எனக்கு ரோஜாப்பூ வாசனையைத் தான் உணர முடிந்தது.

# ஒரு 'பயங்கரவாதியாகிறார்'





# கார்ல் மார்க்ஸ்

செய்தியைப் பரப்பின. எந்த அளவுக்கு அவை பொய்ச் செய்திகள் என்பதை பின்னர் பத்திரிகையாளர்களுக்கு அளித்த 'நேர்காணலின்' போது மார்க்ஸ் சுட்டிக் காட்டினார்.

கார்ல் மார்க்ஸ் என்ற 'கொடிய பயங்கரவாதி' யைப் பற்றியும் அவருடைய 'பயங்கரவாத' இயக்கத்தைப் பற்றியும் அன்றைய அமெரிக்க ஊடகங்கள் என்னென்ன செய்திகளைப் பரப்பின என்பதை 1871-ஆம் ஆண்டு ஜூலை மூன்றாம் நாள் 'நியூயார்க் வேர்ல்டு' பத்திரிகையில் வெளியான அந்த நேர்காணலில் இருந்துதெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

நேர்காணலில் முன்னுரையாக நியூயார்க் வேர்ல்டு செய்தியாளர் ஆர்.லாண்டோர் கீழ்வருமாறு எழுதுகிறார். இரவில் நேர்காணலுக்காக நான் சென்றபோது என்னை அமர்த்திய அறை, பெரிய

மெல்ல மெல்ல எட்டு வைத்து, நடப்பது நடக்கட்டும் என்று துணிந்து நான் காத்திருந்தேன். அவர் அறைக்குள் நுழைந்து மிகுந்த நட்புத் தோரணையில் என்னை வரவேற்றார். ஆம், நான் இப்போது புரட்சியின் அவதார மனிதருடன், தொழிலாளிகளுடன் போரிடப்புறப்பட்டு விட்டீர்களானால் சொந்தக் குடும்பம் எரிந்து சாம்பலாவதைக் காணத் தயாராயிருங்கள் என்று முதலாளித்துவத்துக்கு எச்சரிக்கை விடுத்துப் பேசிய அந்த மனிதருடன்

www.padippakam.com

ஒரே வார்த்தையில் சொல்வதானால் பாரிஸ் கம்யூனுக்கு 'வக்காலத்து' வாங்கி நடக்கும் அந்த மனிதருடன் பேசிக் கொண்டிருக்கிறேன்."

சுற்றி வளைக்காமல் நான் நேராக விஷயத்துக்குள் நுழைந்தேன். இன்டர் நேஷனலைப் பற்றி உலகம் இருளில் தடவிக் கொண்டிருப்பதாகச் சொன்னேன். உலகம் இந்த அமைப்பை வெறுக்கிறது. ஆனால் எதற்காக வெறுக்கிறது என்பது உலகுக்குத் தெரியாது. இந்த மர்மத்தின் மீது சற்று வெளிச்சம் பாய்ச்சுவீர்களா என்று நான் கேட்டேன்.

என்ன இவ்வளவு பயமா என்ற நினைப்பாக இருக்கலாம். அவர் வாய்விட்டுச் சிரித்தவாறு கூறினார்: 'அன்பார்ந்த ஐயா, இதில் எந்த மர்மமும் இல்லை. ஏதாவது மர்மம் இருப்பின் அது சிலருடைய முட்டாள்தனத்தின் விளைவுதான். எங்களுடைய இயக்கம் பகிரங்கமாகச் செயல்படுகிறது. என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள். எங்களுடைய இயக்க நடவடிக்கைகள் வெளியிடப்படுகின்றன. யார் வேண்டுமானாலும் அவற்றைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம். ஒரு 'பெனி' விலையில் எங்கள் சட்டதிட்டம் விற்கப்படுகிறது. ஒரு 'ஷில்லிங்' அளித்தால் எங்களுடைய துண்டுப் பிரசுரங்களும் கிடைக்கும். இதையெல்லாம் வாங்கிப் படித்தால் எங்களைப் பற்றி ஏறத்தாழ எங்களுக்குத் தெரிந்தவற்றை நீங்களும் தெரிந்து கொள்ளலாம்.

செய்தியாளர்: ஏறத்தாழ தெரியக்கூடும். 'ஏறத்தாழ'வின் எஞ்சியதுதானே முக்கியம்? உங்களைப் பற்றிய பொதுவான அவநம்பிக்கைக்குக் காரணம் பொதுமக்களின் அறியாமையிலிருந்து தோன்றிய வெறுப்பு மட்டுமில்லை. ஒன்றைக்கேட்க விரும்புகிறேன். இந்த 'இன்டர் நேஷனல் அசோசியேஷன்' என்பது என்ன?

மார்க்ஸ்: அதில் சேர்ந்திருப்பவர்களைப் பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம். அவர்கள் எல்லோருமே உழைக்கும் மக்களாவர்.

செய்தியாளர்: இவர்கள் ஈவிரக்கமற்ற எதையும் செய்யத்தயங்காத ஒரு தலைமையின் கரங்களில் இருக்கும்விளையாட்டுப்பொம்மைகளாக இருந்தால்?

மார்க்ஸ்: அதற்கு என்ன ஆதாரம்?

செய்தியாளர்: நடந்து முடிந்த பாரிஸ் கலவரம்.

மார்க்ஸ்: இந்த விஷயத்தில் எந்த வகையிலாவது சதித்திட்டம், அன்றைய சூழ்நிலையில் நடக்கக் கூடாதது ஏதேனும் நடைபெற்றதாக ஆதாரம் காட்ட முடியுமா? சதி நடந்திருந்தால் கூட இதில் இன்டர்நேஷனல் பங்கேற்றதாக ஆதாரமுண்டா?

செய்தியாளர்: அனைத்துப் பிரெஞ்சுப் பத்திரிகைகளும் இவ்வாறு செய்திகளை வெளியிடும் போது ஐரோப்பா இதை நம்பாமல் வேறு என்ன செய்ய முடியும்?

மார்க்ஸ்: அனைத்துப் பிரெஞ்சுப் பத்திரிகைகளும், இல்லையா? இதோ இதுவும் அதில் ஒன்றுதான் (பிரெஞ்சுப் பத்திரிகையை விரித்துக்காட்டி) இது அடுக்கிக் காட்டும் ஆதாரங்களின் நம்பகத்தன்மையை நீங்களே முடிவு செய்யுங்கள். (படிக்கிறார்) "இன்டர் நேஷனல்" தலைவரான கார்ல் மார்க்சை ஃபிரான்சிலிருந்து வெளியேற முயன்றபோது ப்ரசல்சில் போலீஸார் கைது செய்தனர். அவருடன் தொடர்புடைய அமைப்புகளின் நடவடிக்கைகளை லண்டன் போலீஸ் நீண்ட காலமாகக் கண்காணித்து வந்தது." பார்த்தீரா, இரண்டு வாக்கியங்களிலேயே இரண்டு பொய்கள். உங்கள் கண்களுக்குத் தெரி



செய்தியாளர்: இத்தகைய தவறான செய்திகளைத் தாங்கள் மறுக்க முயற்சிக்கவில்லையா?

மார்க்ஸ்: எழுதி எழுதி என் கைகள் ஓயும்வரை நான் மறுப்புக் குறிப்புகளை அனுப்பியிருக்கிறேன்.

● ●



படிப்பகம்

www.padippakam.com

யும் ஆதாரத்தையே ஆராயலாம். நான் இப்போது பெல்ஜியம் சிறையில் இல்லை. லண்டனில் என்னுடைய வீட்டில்தான் இருக்கிறேன். இருப்பினும் இந்தச் செய்தி ஐரோப்பா முழுக்க பரவிக் கொண்டே இருக்கும். எந்தப் பத்திரிகையிலும் இதற்கு எதிரான மறுப்புச் செய்தி வராது.

*செய்தியாளர்: இத்தகைய தவறான செய்திகளைத் தாங்கள் மறுக்க முயற்சிக்கவில்லையா?*

*மார்க்ஸ்:* எழுதி எழுதி என் கைகள் ஓயும்வரை நான் மறுப்புக் குறிப்புகளை அனுப்பியிருக்கிறேன். இந்தக் கட்டுக்கதைகளுக்கு இன்னொரு உதாரணத்தையும் சுட்டிக்காட்டுகிறேன். ஃபெலிக்ஸ் பியாட் எங்களுடைய அமைப்பில் ஓர் உறுப்பினர் என்று கூட எழுதினார்கள்.

*செய்தியாளர்: இல்லையா?*

*மார்க்ஸ்:* எங்களுடைய அமைப்பில் இத்தகைய ஒரு காட்டுமிராண்டிக்கு எப்படி இடம் கிடைக்கும்? இந்த ஆசாமி ஒரு முறை எங்கள் பெயரில் ஒரு அறிக்கையை வெளியிடத் துணிந்தார் என்பது உண்மைதான். கையோடு நாங்கள் அதை மறுக்கவும் செய்தோம். ஆனால், பத்திரிகைகளை மதித்தே சொல்கிறேன். அவர்கள் எவருமே அதை வெளியிடவில்லை.

*செய்தியாளர்: மாஜினி எப்படி? அவர் உங்கள் அமைப்பைச் சேர்ந்தவர் தானே?*


*மார்க்ஸ்:* (சிரித்தவாறு) அய்யோ இல்லவே இல்லை. அந்த மனிதரின் கருத்துக்களைத் தாண்டிச் சென்றிருக்காவிட்டால் எங்களால் ஒரு அங்குலம் கூட முன்னேறியிருக்க முடியாது.

*செய்தியாளர்: தாங்கள் என்னை வியக்க வைக்கிறீர்?*

நேர்காணலின் முடிவில் செய்தியாளர் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார். 'இந்த அசாதாரண மனிதருடன் மேற்கொண்ட நேர்காணலில் நினைவில் இருக்கும் எல்லாவற்றையும் நான் விளக்கியிருக்கிறேன். இதிலிருந்து வாசகர்களே ஒரு முடிவுக்கு வரட்டும். என்ன சொன்னாலும் ஒரு விஷயம் மட்டும் நிச்சயம். இந்த அமைப்பு நாகரிக உலகைப் பொறுத்த மட்டில் ஒரு புதிய சக்தியாகும். நல்லதுக்கானாலும் கெட்டதுக்கானாலும் மிக விரைவிலேயே நவீன உலகம் இதை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

ரிபப்ளிக் சார்பு பத்திரிகையான 'சிகாகோ டிரிப்யூனல்' 1879 ஆம் ஆண்டு ஜனவரி ஐந்தாம் நாள் வெளியிட்ட மார்க்சுடனான நேர்காணல் கீழ்வருமாறு:

*செய்தியாளர்: சோஷலிசத்தின் மூளையும் முன்னணியும் நீங்கள் தான் என்று சொல்லப்படுகிறதே டாக்டர்? இப்போது நடைபெறும் அசோசியேஷனையும் புரட்சியையும் இந்த வீட்டிலிருந்து நீங்கள் தான் இயக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இதைப் பற்றி என்ன சொல்கிறீர்?*



*மார்க்ஸ்:* (சிரித்துக் கொண்டே) எனக்குத் தெரியும். அது சுத்த பொய்! இருப்பினும் அதற்கு வேடிக்கையான ஒரு அம்சமும் இருக்கிறது.

*செய்தியாளர்: போஸ்டனில் இருக்கும் ரெவாரண்ட் ஜோசப் குக் என்பவரைப்பற்றி தாங்கள் கேள்விப்பட்டிருக்கிறீரா?*

*மார்க்ஸ்:* ஆம். சோஷலிசத்தைப் பற்றி மிகவும் தவறாகப் புரிந்து கொண்ட மனிதர்.

*செய்தியாளர்: நான் குறிப்பிட்ட ஜோசப் குக் 1871-இல் தாங்கள் பாரிஸ் கம்யூனிஸ்டுகளுக்கு அனுப்பிய ஒரு கடிதத்தின் சில பகுதிகளை வெளிப்படுத்தினார். அது கீழ்வருமாறு:*

"நாம் அதிகபட்சமாக இப்போது 80 லட்சம் பேர்தான் இருக்கிறோம். 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஐந்து கோடியோ பத்து கோடியோ ஆகப் பெருகலாம். அன்றைக்கு உலகம் நம்முடையதாகி விடும். ஏனென்றால் அன்றைக்கு ஆக்கிரமிப்பாளர்களான முதலாளித்துவத்தை எதிர்க்க பாரிசும், பெர்லினும், மார்செலிசும் மட்டுமின்றி மியூனிச்சும், லண்டனும், லிவர்பூலும், மாஞ்செஸ்டரும், செயிண்ட் பீட்டர்ஸ்பர்கும், நியூயார்க்கும் பங்கேற்கும். உலகம் முழுக்கப் பங்கேற்கும். வரலாறு இதுவரை கண்டிராத ஒரு புதிய கிளர்ச்சியின் முன் கடந்த காலம் ஒரு அச்சுறுத்தும் பயங்கரக் கனவாக மறைந்து விடும்..." இந்தக் கடிதத்தின் பிதா தாங்கள் தான் என்பதை ஒப்புக் கொள்வீர் என்று நினைக்கிறேன்.

*மார்க்ஸ்:* அதில் ஒரு வார்த்தை கூட நான் எழுதியது இல்லை. உணர்ச்சிகரமாக இத்தகைய நாடகபாணிச் சவடால்களை நான் ஒரு போதும் எழுத மாட்டேன். நான் எழுதுவதைப்பற்றி மிகுந்த கவனம் செலுத்துவேன். மேற்குறிப்பிட்ட கடிதம் என்னுடைய கையெழுத்துடன் 'லாஃபிகரோ'வில் வெளியானது. அத்தகைய நூற்றுக்கணக்கான கடிதங்கள் வெளியாகிக் கொண்டிருந்தன. இந்தக் கடிதம் போலியானது என்று அறிவித்து நான் லண்டன் டைம்சுக்கு எழுதினேன். நான் பேசியதாகவும் எழுதியதாகவும் சொல்லப்படும் அனைத்தையும் மறுப்பதென்றால் எனக்கு 20 செயலாளர்கள் தேவைப்படுவார்கள்.

*செய்தியாளர்: ஆனால், பாரிஸ் கம்யூனிஸ்டுகளை ஆதரித்து தாங்கள் எழுதவில்லையா?*

*மார்க்ஸ்:* நிச்சயமாக சில பத்திரிகைகளின் தலையங்கங்களில் அவர்களைப்பற்றி எழுதப்பட்ட விஷயங்களைப் பரிசீலித்து அவர்களுக்கு எழுதியிருக்கிறேன். ஆனால் பத்திரிகை ஆசிரியர் குறிப்புகளின் வாயிலாகப் பரப்பப்படும் முட்டாள்தனங்களை மறுக்க, பாரிசில் இருந்தும் இங்கிலாந்திலிருந்தும் வெளியாகும் பத்திரிகைகளில் வரும் கடிதப்போக்குவரத்துகளே போதுமானதாகும். கம்யூன் 60 பேரை மட்டும்தான் கொன்றது; மார்ஷல் மக்மோகனும் அவருடைய கொலையாளிப்படையினரும் 50,000-க்கு மேற்பட்டவர்களைக் கொன்று குவித்தனர். ●

www.padippakam.com





# இலையுதிர் காலப் பூக்கள்

திடீரென ஆயிரம் சிறகுகள் முளைத்து விட்டதைப் போலிருந்தது வள்ளிக்கு. விசுக்கென மனம் ஒரு குதூகலப் பந்தாய் மாறி இதுவரை கண்டிராத வசந்த வெளிக்குள் எம்பிப் பாய்ந்தது.

வாசலில் நின்ற வேப்பமரம் பூத்து உதிர்வதைக் கூட இப்போதுதான் பார்க்கிறாள். இலைகள் உதிர்ந்து, தளிர்கள் துளிர்த்து, பூக்கள் மலர்ந்து... காலம் அவளைச் சட்டை செய்யாமலேயே இவ்வளவையும் நிகழ்த்திச் சென்றிருந்தது. அடர்ந்த மௌனமும் வறண்ட புன்னகையுமாய்ப் பொதி சுமந்த கழுதைகளின் பின்னால் கழிந்த பதினைந்து வருஷங்களில் பாளம் பாளமாய் வெடித்து இறுகிக் கிடந்த தனக்குள் இப்படி ஒரு பெருமழை வந்து நனைக்கும் என்று அவள் எதிர்பார்க்கவில்லைதான்.

"ஒன்னே ஒன்னு, கண்ணே கண்ணுன்னு இருக்கிற என் ஒரே மகளை ஊருக்குத்துணி வெளுக்கவும் உவருப் புடிக்கவும் விடமாட்டேன்" என்ற சபதத்தோடுதான் சுப்பன் அவளை வளர்த்தான். தான் ஆசைப்பட்ட படியே சிங்கப்பூரில் செண்டு வித்துக் கொண்டிருந்த தன் மச்சான் மகன் கருப்பையாவுக்குச் சீர் செனத்தியோடு கூட்டியும் வைத்தான்.

காதைத்தாண்டி அடர்ந்திருந்த கிருதாவும், சுருண்ட ஹிப்பி முடியுமாய், 'பாபி' காலர் வைத்த சந்தன நிறச் சட்டையும், பட்டு வேட்டியும் உடுத்திக் கொண்டு மாப்பிள்ளையாய் வந்த கருப்பையாவைப் பார்த்து மாமனாரே மயங்கிப் போனபோது வள்ளி எம்மாத்திரம்?

சிங்கப்பூர் செண்டும், மல்லிகைப் பூ வாசமும் ததும்பி வழிந்தது. வள்ளியின் வாழ்வில் அந்த முதல் முப்பது நாட்கள் மட்டுமே! "இன்னும் ஆறு மாசத்துக்குள்ளே ஒனக்கு விசா வாங்கினவுடனே ஒன்னைய வந்து கூட்டிக் கிட்டுப் போயிருவேன். நம்ம புள்ளெ சிங்கப்பூர்லதான் பொறக்கும்" என்று சொல்லிப் போன கருப்பையாவுக்கு பதினைந்து வருஷங்களாகியும் வள்ளிக்கு விசா கிடைக்கவில்லையோ என்னவோ? அவன் வரவே இல்லை. அந்த முப்பது நாள் வசந்தத்தின் சுவடாய் மகள் உமா மட்டுமே அவளிடம். தனக்குத் தெரிந்து சிங்கப்பூருக்குச் செல்பவர்களிடமெல்லாம் பலமுறை சொல்லிவிட்டும் கருப்பையாவிடமிருந்து ஒரு கடிதம் கூட வரவில்லை. அங்கு யாரோ ஒரு சீனத்துக்காரியுடன் குடும்பம் நடத்துகிறான் என்று அரசல் புரசலாகப் பேச்சு அடிபட்டது. பொய்யாய்ப் பழங்கதையாய் மெல்ல அவள் மனதில் இருந்து மறைந்து கொண்டிருந்தான் கருப்பையா.

பிள்ளைகள் வெளியூரில் இருப்பதால் தனித்து விடப்பட்ட ராமையா அம்பலக்காரருக்கும், அவர் மனைவி தெய்வானைக்கும்



படிப்பகம்

www.padippakam.com

ஒத்தாசையாய் இருப்பதும், ஊருக்குக் குடிவேலை பார்ப்பதுமாய்க் காலம் நெட்டித் தள்ளிக் கொண்டிருந்தாள் வள்ளி.

ராமையா அம்பலக்காரர் வீட்டுக்கு வேலை பார்ப்பதற்கு மாதம் ஒரு சிறு தொகை நிரந்தரமாகக் கிடைத்தது. மகள் உமாவின் படிப்புச் செலவுக்கும் மற்றவைக்கும் அது உதவியாக இருந்தது. தொடக்கத்தில் தண்ணீர் எடுத்து வைப்பது துணி துவைப்பது என்று மட்டும் பார்த்துக் கொண்டிருந்தாள். கிழவனுக்கும் கிழவிக்கும் தளர்வு வரவர எல்லாம் இவளே என்றாயிற்று. காலையில் தன் வீட்டு வாசலைக் கூட்டிப் பெருக்குகிறாளோ இல்லையோ, அய்யாவுக்கும் ஆத்தாவுக்கும் காப்பி வைத்துக் கொடுக்க ஓடிவிடுவாள். வள்ளியின் சமையலைப் பற்றி அம்பலக்காரக் கிழவர் வானளாவப் புகழ்வார். "ஒரு வண்ணாத்தி சமைத்து இந்தக் கிழம் ரெண்டும் சாப்பிட்டு உயிரோடு இருக்கோணுமாக்கும்..." என்ற குத்தல் பேச்சையெல்லாம் பொருட்படுத்தாத நேசமாய் அந்த உறவு கெட்டிபட்டுப் போனது.

வழக்கம் போலக் காலைப் பலகாரம் செய்து கொடுத்து விட்டு மதியத்துக்கும் ஆக்கி எடுத்து வைத்து விட்டு வீட்டுக்கு வந்த போதுதான் அந்தக் கடிதம் வந்திருந்தது.

தனக்குப் பரிச்சயம் இல்லாத கையெழுத்தாய் இருந்தது. சுரத்தே இல்லாமல் பிரித்துப் படித்தவளுக்கு உடலெங்கும் மின்சாரம் பாய்ந்தது.

'தன் கூட்டாளி ஒருவனால் ஏழு வருஷம் சிறையில் இருக்க வேண்டியதாகி விட்டதாகவும், வெளியில் வந்து நிர்க்கதியான நிலையில் உன்னோடு தொடர்பு கொள்ள விருப்பமில்லை எனவும், இப்போது இவ்வளவு காலம் கஷ்டப்பட்டதில் கொஞ்சம் பணம் காசு சேர்த்தபின் தான் உன்னைப் பார்க்கத் தோன்றியது எனவும், இந்தக் கடிதம் உன் கையில் கிடைத்த மறுநாள் நான் உன்னோடு இருப்பேன் என்றும் அதில் கருப்பையா எழுதி இருந்தான்.

வேப்பமரத்தடியில் உட்கார்ந்த படி கடிதத்தைத் திரும்பத் திரும்ப படித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். இந்த நேரத்தில் மகள் உமா பக்கத்தில் இல்லாமல் பள்ளிக்கூடம் போய் விட்டாளே என்று தோன்றியது.



"என்னடி... என்னடி..." என்று அக்கம் பக்கத்துப் பெண்கள் வந்து வள்ளியை மொய்த்தனர். பேச்சு வராமல் அவர்களிடம் கடிதத்தைக் காட்டினாள். யாருக்குமே பேச்சு வரவில்லை. கண்களில் நீர் வந்தது. ஓயாத சிரிப்பு வந்தது.

கடிதத்துடன் அம்பலக்காரர் வீட்டுக்கு ஓடினாள் வள்ளி.

"அய்யா... ஆத்தா... அவரு... அவரு... நாளைக்கி வர்றாறாம் ஆத்தா-எனக்கும் ஒரு நல்ல காலம் வந்துருச்சானு என்னாலெ நம்பவே முடியலை ஆத்தா...."

நெட்டுயிர்த்துக் கண்கலங்கி நின்ற வள்ளியைப் பார்த்துக் கிழவனும் கிழவியும் நெகிழ்ந்து போனார்கள்.

"அடி பைத்தியமே... நான்தான் அப்பவே சொன்னேனே..." என்னைக்கிருந்தாலும் கருப்பையா நல்ல நெலைமையிலே ஒன்னைத் தேடி வருவாண்டி'னு..." என்ற கிழவியின் முகத்தில் தான் சொன்னது பலித்த பெருமிதம் பொங்கி வழிந்தது.

மறுநாள் பொழுது வள்ளிக்கு ஒரு புதிய விடியலாகவே விடிந்தது. இரவு முழுவதும் கருப்பையாவைப் பற்றிக் கதைகதையாய் மகளிடம் கொட்டித் தீர்த்தாள். தாயும் மகளும் தூங்கவே இல்லை.

முதன் முதலாக அப்பாவைப் பார்க்கப் போகிற துள்ளலும் குறுகுறுப்பும் உமாவுக்குள்... அதுவும் சிங்கப்பூரிலிருந்து வரும் அப்பா...

"காரு வந்துருச்சு... காரு வந்துருச்சு... வள்ளி ஓம் புருஷன் வந்துட்டாண்டி..."

வள்ளியும், உமாவும் அந்தக் கூரை வீட்டுக்குள்ளிருந்து ஆவலாதியோடு ஓடி வருகிறார்கள்.

தலையெல்லாம் வழுக்கையாகி முன்னைக்கு நேர்மாறான ஒரு தோற்றத்தில் வந்து இறங்கி இருந்தான் கருப்பையா. ஆனால் நாகரிக முதிர்ச்சியும், நாசூக்கும் அவனுடைய நடைமுறைகளில் தூக்கலாகத் தெரிந்தது.

பதினைந்து வருஷங்களையும் கண்ணீராகவும், வார்த்தைகளாகவும் பரிமாறிக் கொண்டார்கள் இருவரும். மறுநாள் மாலை நெருங்கியும் முடிந்தபாடில்லை. இத்தனை வருஷ இறுக்கம் கலைந்தாலும் கலைந்தது வள்ளி அவனைத் 'தொணதொண'வெனத் துளைத்து எடுத்து விட்டாள். ஆனால் கருப்பையாவுக்கு அதில் சலிப்பே தோன்ற வில்லை.

www.padippakam.com

அப்போதுதான் திடீரென்று "அய்யா, ஆத்தா" ஞாபகம் வந்தது வள்ளிக்கு.

"அய்யய்யோ... என்ன பண்ணு னாகன்னே தெரியலியே..." என்று அலறி அடித்துக் கொண்டு ஓடி னாள்.

கிழவி உட்கார்ந்த படி நகர்ந்து நகர்ந்து அடுப்பருகில் சென்று அடுப்பைப் பற்றவைக்கத் தீப் பெட்டியைத் தடவிக் கொண்டி ருந்தாள்.

"ஆத்தா.. இந்தா வந்துட்டேன்... அவரு வந்ததுல கையும் ஓடல, காலும் ஓடல..." ராவெல்லாம் ஏதாச்சும் சாப்பிட்டியளோ என் னமோ..."

என்று கைத்தாங்கலாய்க் கட்டி லில் கொண்டு போய் உட்கார வைத்தாள்.

மளமளவென்று அடுப்பைப் பற்ற வைத்து ஆகவேண்டியதைக் கவனிக்கத் தொடங்கினாள்.

"வள்ளி... நீ இவ்வளவு காலம் பட்ட பாட்டுக்கு இப்பத்தான் விடிவுகாலம் வந்திருக்கு. எங் களுக்கு என்ன... இனிப் போற காலம். கல்யாணம் பண்ணியும் வாழ்வை அனுபவிக்க முடியாமத் துயரப் பட்டவ நீ... இப்ப ஓம் புருஷன் நல்ல நெலைமைல வந் திருக்கான். அவனோட சந் தோஷமா இருக்கறதுதான் இனி ஒனக்கு முக்கியம். எங்களை விடு... நாங்க எப்படியோ பாத்துக்குறம்..." கட்டிலில் இருந்த படி இப்படிச் சொல்லிக் கொண்டிருந்த கிழ வியை நோக்கி சடாரென்று திரும் பினாள் வள்ளி.

"ஆத்தா... இதுவரைக்கும் நான் உங்களுக்கு எவ்வளவு பார்த்திருந் தேன்னாலும் அதுக்குனு ஒரு கூலி வாங்கி இருக்கேன். அது என் நிலைமை. ஆனால் இனி எனக்கு எந்தக் குறையும் இல்லை. நீங்க எதுவுமே எனக்குத் தரவேண்டிய தில்லை.

ஆனா.... என்னைய வர வேணாம்னு மட்டும் சொல் லீறாதிய... இனி நான் ஒங்களுக்குப் பார்க்கப் போறதுதான் உண்மை யான ஒத்தாசை. இத்தனெ வரு ஷமா திக்கில்லாமக் கிடந்த எனக்கும் எம்புள்ளைக்கும் ஆத ரவா இருந்த ஒங்களுக்குப் பார்க்க வேண்டியது என் கடமை..."

அருகில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கண் மூடிக் கிடந்த ராமையா அம்பலம் "சரி... சரி... விடு. வள்ளி யாரு... அதுவும் நம்ம புள்ளைதானே. அது பாக்குற துக்கும் நாம பெத்துக்குறதுக்கும் உரிமை இருக்கு" என்றார்.

மறுநாள் காலையில் கழுத்து நிறைய நகையும், சிங்கப்பூர் சேலை யுமாய் வந்து வள்ளி போட்டுத் தந்த காப்பியைக் கைநீட்டி வாங் கும் போது கிழவனுக்கும், கிழவிக் கும் 'மூசு மூசு' என்று அழுகை முட்டிக் கொண்டு வந்தது. ●




2002 - இல்
ஆசிரியர் பிறந்தநாள் வெளியீடு

ஆத்மா என்றொரு தெருப் பாடகன்

இரண்டாம் பதிப்பு
விலை ரூ.60

இது ஒரு நந்தன் வெளியீடு




படிப்பகம்

www.padippakam.com

# எல்லை கடந்த காதலும் இந்து முன்னணியும்

மதப்பழமை வாதிகளால் மதவெறியும் பயங்கரவாதமும் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் வேளையில்,


மதக்கலவரங்களாலும், படுகொலைகளாலும் இந்திய வாழ்க்கையே அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருக்கும் வேளையில்

குவைத்திலிருந்து இரு காதலர்கள் இந்தியாவுக்குப் பறந்து வந்திருக்கிறார்கள்.

இங்கிருந்து குவைத்துக்கு வேலை தேடிச் சென்ற காதர் பாட்ஷாவுக்கும் குவைத் நாட்டின் கோடீஸ்வரர் ஒருவரின் பெண்ணுக்கும் காதல் மலர்ந்தது.

மதவாதப் பிற்போக்கு உக்திகளின் அரவணைப்பில் இஸ்லாமியனைக் கொல், இந்துவைக் கொல் என்று இந்தியாவெங்கும் விரோதம் விதைக்கப்பட்டு உயிர்களை அறுவடை செய்து கொண்டிருக்கும் வேளையில்,

இந்தக் காதலர்களுக்காக தமிழ் நாட்டின் கட்சிகள் அனைத்தும், இதயங்கள் அனைத்தும் ஆதரவுக்குரல் எழுப்பியிருக்கிறதே அது தான் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த செய்தி.



குவைத் நாட்டின் சட்டப்படியும், பொது முரண்பாடான வர்க்க பேதமும் தங்களை வாழவிடாது என்று அறிந்து கொண்ட காதர் பாட்ஷாவும் தலால் ஆஸ்மியும் இந்தியாவுக்குப் பறந்து வந்தார்கள். ஆனால் தலால் ஆஸ்மியின் பாஸ்போர்ட் உண்மையானதல்ல என்பதால் கைது செய்யப்பட்டு, சிறைப்பட்டு... நிபந்தனையின் மீது வெளியே வந்து, திருமணமும் செய்து கொண்டார்கள்.

காதலர்களுக்குத் தடைகள் வருவதும், அவை விலகுவதும், அல்லது அவை அவர்களை வீழ்த்துவதும் புதிய செய்தி அல்ல.

மதவாதப் பிற்போக்கு உக்திகளின் அரவணைப்பில் இஸ்லாமியனைக் கொல், இந்துவைக் கொல் என்று இந்தியாவெங்கும் விரோதம் விதைக்கப்பட்டு உயிர்களை அறுவடை செய்து கொண்டிருக்கும் வேளையில்,

இந்தக் காதலர்களுக்காக தமிழ் நாட்டின் கட்சிகள் அனைத்தும், இதயங்கள் அனைத்தும் ஆதரவுக் குரல் எழுப்பியிருக்கிறதே அது தான் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த செய்தி.

காதலிப்பது குற்றமல்ல, இந்தியாவுக்கு ஆஸ்மி வந்திருப்பது சதி வேலைக்கோ, கடத்தல் தொழிலுக்கோ அல்ல. காதலையும், தங்கள் உயிரையும் காப்பாற்றிக் கொள்வதற்காக. சட்ட நுணுக்கங்களுக்குள் நுழைந்து இந்தக் காதலைத் தண்டித்து விடக் கூடாது என்று ஏடுகளும், நல்லோர்களும் மனிதாபிமானத்தின் பரிபூரணத்தை வெளிப்படுத்தினார்கள்.

இந்தியாவில் வேறு எந்த நாட்டில் இந்தக் காதலர்கள் இறங்கியிருந்தாலும் 'காவு' கொடுக்கப்பட்டிருப்பார்கள்.

தமிழ் நாட்டில் மாத்திரமே இந்த அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. இதுதான் தந்தை பெரியார் இந்த மண்ணில் நிகழ்த்திய அற்புதம்.

கலைஞர், ஜெயலலிதா, வைகோ, டாக்டர். இராமதாஸ், இளங்கோவன், வாசன், திருமாவளவன், இஸ்லாமிய அமைப்புகள் அனைவரும் இந்தக் காதலர்களுக்காகக்

www.padippakam.com

குரல் கொடுத்திருக்கிறார்கள்.

இந்திய நாடுகளிலேயே தமிழகம் தனித்து ஒளிர்வதை இந்த நிகழ்ச்சி உலகுக்கு அறிவித்திருக்கிறது.

இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கூட மதச்சம்பிரதாயப்படி காதலர்கள் இருவரும் குவைத் நாட்டுக்கே அனுப்பப்பட்டு கல்லால் அடித்துக் கொல்லப்பட வேண்டும் என்று எதிர்ப்பு காட்டாததற்காக மனிதாபிமானிகள் சார்பில் பாராட்டுத் தெரிவிக்கலாம்.

இவ்வாறு மனிதமும் காதலும் இங்கே செழித்து வளரமுடியும் என்கிற நம்பிக்கையை அந்தக் காதலர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் சூழலில், அபசுரமாய், வெறிச் கூச்சலாய் மெல்லக் கேட்கிறது ஒரு குரல். அது இந்து முன்னணியின் குரல்.

இந்து முன்னணியின் ஒருங்கிணைப்பாளரும், வினாயகர் சதுர்த்தி இயக்க அமைப்பாளருமான வி.முரளி என்பவர், தலால் ஆஸ்மி - காதர் பாட்ஷாவின் காதலையும் அவர்களுக்குத் தமிழக மக்கள் காட்டும் ஆதரவையும் கண்டித்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில்,

இவ்விருவரும் (தலால் ஆஸ்மியும், காதர் பாட்ஷாவும்) பாரத நாட்டு போலி மதச் சார்பின்மை பேசும் அரசியல் வாதிகளின் மேல் எவ்வளவு நம்பிக்கை இருந்திருந்தால் தைரியமாக இவர்களை நம்பித் திருமணத்திற்கு முன்பே கருவுற்று, இரு நாட்டு பாஸ்போர்ட் மற்றும் குடியேற்ற விதிகளை ஏமாற்றி மோசடி செய்து பாரதத்திற்குள் தைரியமாக வந்திருப்பார்கள்?

இவர்களுக்காக வரிந்து கட்டிக் கொண்டு பாரத நாட்டின் கண்களில் மண் தூவத் துணைபோகும் போலி மதச் சார்பின்மை பேசும் அரசியல் வாதிகளுக்குச் சில கேள்விகள் என்று வினாவும் தொடுக்கிறது இந்து முன்னணி.

இந்து முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் "...ஆதலினால் மானிடரே காதல் செய்வீர்!" என்கிற பாரதியின் பாடலையாவது படித்திருந்தால் இம்மாதிரியெல்லாம் பேசமாட்டார்.

இந்து முன்னணி கேட்கிறது.

1. திருமணத்துக்கு முன் கருவுற்றதை இவர்கள் ஆதரிக்கிறார்களா?

(தலால் ஆஸ்மி கருவுற்றிருப்பதாக ஆரம்பத்தில் அவர் நம்பினார்)

இது தகுமா? என்கிறது இ.மு.

ஏன் கூடாது? திருமணம் என்பதே காட்டுமிராண்டித்தனமானது; பெண்ணடிமைத்தனத்துக்கு அரண் சேர்ப்பது என்பதுதான் நல்லறிவாளர் கருத்து. இது தவறு என்றால் பல இந்துக் கடவுள்களின் பிறப்பே அசிங்கமானதில்லையா? குதிரைக்குப் பிறந்த இராமன் வழிபாட்டுக்குரியவனா



திருமணம் என்பதே காட்டுமிராண்டித்தனமானது; பெண்ணடிமைத்தனத்துக்கு அரண் சேர்ப்பது என்பதுதான் நல்லறிவாளர் கருத்து.

என்று கேட்கிறவர்களுக்கு என்ன பதில் இருக்கிறது?

2. வாழும் நாட்டின் சட்ட திட்டங்களை மோசடி செய்து ஏமாற்ற எல்லா நாட்டினருக்கும் இவர்கள் துணைபோவார்களா? என்கிறது இ.மு.

காதலின் மகத்துவத்துக்கு முன் தேச எல்லைகள், சட்ட சம்பிரதாயங்கள், சனாதன ஆசாரங்கள் எல்லாமே அற்பமானவைதாம்.

3. எல்லா முஸ்லீம்களும் குர்ஆனையும் ஷரீயத்தையும் தூக்கி எறிந்து விட்டு காந்திஜி சொன்னபடி தேச பக்தர்களாக மாறும்படி உபதேசிப்பார்களா? என்கிறது இ.மு.

எல்லா இந்துக்களும் புராணங்களையும், சடங்குகளையும் தூக்கி எறிந்து விட்டு இங்குள்ள இஸ்லாமியர்களுக்கு வழிகாட்டினால் இஸ்லாமியர்களிடம் இதை வலியுறுத்த முடியாதா என்ன? இந்துக்கள் அனைவருமே தேசபக்தியுடன் தான் நடந்து கொண்டிருக்கிறார்களா? காந்தியடிகளைப் பற்றிப் பேச இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? காந்தியடிகளைக் கொன்றது கூடத் தேச பக்தியினால்தானா?

4. பாஸ்போர்ட் மற்றும் குடியேற்றச் சட்டங்களை மீறும் மற்ற நாட்டுக் குற்றவாளிகளுக்கு உதவுவார்களா? என்கிறது இ.மு.

காதலுக்கு மாத்திரமே உலகெங்கும் விதிகள் தளர்த்தப்படும். சட்ட மீறல்கள் அனுமதிக்கப்படும் என்பது தெரியாதா?

5. மற்ற முஸ்லீம் நாடுகளில் அற்பமான விஷயங்களுக்காக இந்துக்கள் மரண தண்டனைக்குட்படுத்தப்படும் போது இந்த அரசியல் வாதிகள் எங்கே போனார்கள்? என்கிறது இ.மு.

மரண தண்டனையே காட்டுமிராண்டித்தனமான செயல் என்பதுதான் முற்போக்குச் சிந்தனை. இந்துக்களுக்காகப் பரிந்து பேசும் இந்து முன்னணி இலங்கையில் 'இந்துக்கள் கொடுமைப்படுத்தப்படுவதைக் கண்டிப்பதில்லையே அது ஏன்? தமிழர்கள் இந்துக்கள் அல்ல என்று ஒப்புக் கொள்கிறதா?

6. பாஸ்போர்ட் சட்டதிட்டங்களை யார் வேண்டுமானாலும் மோசடி செய்து இந்த நாட்டுக்குள் வரலாமா? என்கிறது இ.மு.

(நாலாவது கேள்வியும் இதுதானே? ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டம் என்பது சரிதான்)

பாஸ்போர்ட் சட்டதிட்டங்களை மோசடி செய்வதில் உறுதுணையாக இருக்கும் அய்யர் அய்யங்காரர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி இது.

என்கிறார்கள் சிந்திக்கத் தெரிந்தவர்கள். ●



படிப்பகம்

www.padippakam.com



கூட்டின புருசன் சோம்பேறி. பொம்பிளையாள் முதலாளிமார்க வீட்டில் வேலைக்குப் போறது. சும்மம்புல் குத்திக் கொடுக்கிறது. மிச்சம் மீதி பழையதை எடுத்து வர்றதுன்னு இவனுக்குச் சோறு போட்டுக்கிட்டிருந்தாள்.

ஒரு நா அவ கேட்டா " வருச மெல்லாம் இப்படிப் படுத்துக் கெடந்தா என்னய்யா செய்யறது?"

"நா என்ன செய்வேன். எனக்கு எவன் வேலை தருவான்?"

"ஏதாவது மரம் மட்டைய வெட்டுறது? வெறகு கட்டாய்க் கட்டிக் கொண்டு போய்க் கடையில போடுறது. ஏதோ ஆகுமா கஞ்சி தண்ணி குடிச்சிக்கிரலா மில்லே"

அவன் அரிவாள் எடுத்திட்டு, விறகு வெட்டப் போனான். அரிவாளை தெரு வழியே வீசிட்டுப் போனான்ல, குறுக்கே வந்த காக்காய் வெட்டுப்பட்டுக்கிருச்சி.



உடனே பொஞ்சாதிக்காரி "எம்புருஷன் காக்காயை வெட்டிட்டான். காக்காயை வெட்டிட்டான்"ன்னு கூப்பாடு போட்டாள். ஊர்பூராவும் தெரிஞ்சிருச்சி.

இப்படி ஒரு கெட்டிக்காரன் இருக்கானே. ஆட்டுக்கிடையில் அன்னாடம் புலி வந்து அடிச்சித்தின்னுது. இவன கிடை காவலுக்கு அனுப்பனுமே என்று யோசித்தார்கள். "யம்மா ஆடுகளை புலிவந்து தின்னுட்டுப் போகுது. ஒங்க வீட்டுக்காரரை கிடைக்காவலுக்கு அனுப்பனும். காக்காயையே வெட்டிட்டாரே. புலியை லேசில விடுவாரா?" என்றார்கள்.

அப்ப, அவர்கள் ஒரு நிபந்தனை போட்டார்கள்.

"கிடை காவல் காத்திட்டு, அடையாளத்துக்கு ஒரு இளங் கிடாயைப் பிடிச்சிட்டு வரணும்"

பொம்பளையாள், புருசனிடம் சொல்வா;

"நீ ஒரு சாக்கை எடுத்துக் கிட்டுப் போ. அதை கிடை வாசல்ல விரிச்சி வச்சிகிட்டு ஓம் பாட்டுக்கு நில்லு. அப்ப கிடாய் வந்து நுழையும் குபீர்னு பிடிச்சிக் கட்டிட்டு வந்திரு"

அது மாதிரியே இவன் சாக்கை விரிச்சி வச்சிக்கிட்டு இளங்கிடாவைப் பிடிச்சிரலாம்னு நிக்கிறான். நடுச்சாமத்தில புலிவந்து பாய்ஞ்சுது. "ஆஹா, கெடாய் வந்து மாட்டிக்கிருச்சி''




என்று அப்படியே சாக்கு மூட்டையில கட்டிப்போட்டு சுமந்துக்கிட்டு ஊருக்கு வந்து சேர்ந்தான்.

'கிடாயைப் பிடிச்சிட்டு வான்னா, புலியையே பிடிச்சிட்டு வந்து நிக்கிறானே" என்று ஊர்க் காரர்கள் அதிசயித்தார்கள். நாட்டில் இவன் மாதிரி கெட்டிக்காரன் இல்லை என்று "இன்னிமே நீ கிடை காவலுக்குப் போக வேண்டாம். வாழைத் தோட்டத்தில் யானை வந்து அழிமானம் பண்ணுது. வாழைக் காவலுக்கு போய் வந்திடு" என்றார்கள்.

அப்ப பொம்பளையாள் சொல்வா.

"ஒரு கத்தி கொடுக்கறேன். எல்லாப் பக்கமும் வேலி போட்டிருக்கிறதினாலே யானை, வாசல் வழியாத்தான் நுழையும். நீ கத்திய எதிர் தாப்பில இருக்கிற வாழையிலே மறு பக்கம் வர்ற மாதிரி குத்தி வச்சிரு. யானை வந்ததும், முத வாழையில்தான் வாய் வைக்கும். வந்து தின்னவுடனே, ஈட்டி மாதிரி கத்தி குத்தி செத்துப் போகும். அந்த கத்தியை எடுத்து யானை வயித்துல குத்தி வச்சிட்டு வந்திரு"

இவன் கத்தியை முத வாழையில குத்தி வச்சிட்டுக் காத்திக்கிட்டிருந்தான். யானை வந்தது. வந்து தின்னதும் தொண்டை கிழிப்பட்டு செத்துப் போனது. கத்தியை எடுத்து யானை வயித்தில் குத்தி வச்சிட்டு இவன் வீட்டுக்கு வந்திட்டான். "போய்ப் பாருங்க. யானையைக் கொன்னு போட்டாரு எம் புருசன்" என்றாள். கிராமத்தார்கள் போய்ப் பார்த்தால் யானை வயிறு கிழிபட்டுச் செத்துக் கிடக்கிறது".

இந்த இடத்தில் கதையை நிறுத்தி, நெடிய மனித வரலாற்றின் இருட்குகையில், கொஞ்சம் உற்றுப் பார்ப்போம். மினுக்கட்டாம் பூச்சிகள் போல், மினுக், மினுக் என்று லேசான ஒளி தென்படுகிறதா!

இன்னும் கொஞ்சம் அறிவுப் பிரகாசத்தை நுழைத்து கடந்த கால இருளுக்குள் கூர்ந்து பார்த்தால், கொஞ்சம் கொஞ்சமாய் இருட்டுக்குள்ளிருந்து உண்மை வெளியே வரும்.

ஒரு காலத்தில் இனக்குழு சமுதாயமாக இருந்த மனித இனம் பயிர்த் தொழிலுக்கு மாறிக் கொண்டிருந்தது. சன்னம் சன்னமாக.

www.padippakam.com

அடர்ந்த வனம், காடுகளை அழித்து விவசாய நிலம் ஒன்றிரண்டாய் உருவாகிய போது மலங்காடுகளிலிருந்து காட்டுப் பன்றிகள் வெளிப்பட்டு நாசம் செய்தன. சமவெளியில் யானைகள் நடமாடி வாழைத் தோட்டத்தை துவம்சப்படுத்தின. நரி, சிறுத்தை, புலி - ஆடு, மாடுகளைக் கை வைத்தன.

ஆடு மேய்க்கும் சிறு பயல் "புலி வருது, புலி வருது" என்று கூப்பாடு போட்டு, வேடிக்கை செய்து வேதனையாய் மாறியகதைக்கு இதுதான் மூலம். வனத்துக்கும், விவசாய நிலத்துக்கும் அருகருகே நடந்த வாழ்க்கையே மூலம்.

இப்போதும் எங்கள் பக்கத்தி லுள்ள ஒரு கிராமத்திற்குப் பெயர் 'நரி நுழைஞ்சான்பட்டி'

விவசாயமும், விவசாயத்தை ஒட்டிய உப தொழில்களும் (ஆட்டுக்கிடை போடுதல்) வெல்லப்பட முடியாத விலங்குகளால் அழிமானம் ஆன காலத்தில், இந்தக் கதைகள் முளைத்தன. மிருகத் தடை மட்டுமல்ல, வாழ்வுத் தடைகளையும் இப்படி குயுக்தியான யோசிப்புகளால் வென்றெடுக்க முயன்றார்கள்.

மழையால், வெயிலால், புயலால், விலங்கால், இவையினும் மேலான மனிதனால் கலைச்சல் கண்ட மனித இனத்தை, தேற்றி நிலை நிறுத்திக் கொண்டதுதான் இந்தக் கதைகளின் பாடம்.

இனி கதை தொடர்கிறது.

"இந்த நாட்டு ராசாவுக்கும் அடுத்த நாட்டு ராசாவுக்கும் கலாட்டா (சண்டை) நம்ம காக்கா வெட்டி, புலிவெட்டி யானை வெட்டி வீரன் இருக்கான்ல, இவனைத்தான் சண்டைக் களத்துக்கு அனுப்பனும்னு ராசா முடிவு செய்தார். அவனோட பொம்பிளையாளைக் கூப்பிட்டனுப்பினார். "யம்மா, ஓம் மாப்பிள்ளையைத்தான் (புருசன்) நம்பியிருக்கோம். நாளைக்கு கலகத்துக்குக் கூட்டிட்டுப் போறோம். தயார் பண்ணி வை" என்றார்.

"எஜமான் எம் புருசனுக்கு நல்ல குதிரையா பார்த்துக் கொடுங்க. நா அனுப்பி வைக்கிறேன்" என்றாள்.

நா கலகத்தில எந்தக் காலத்தில போய் அடிச்சேன். நான் போய்ச் சாகவா?" என்றான் புருஷன்காரன்.

அந்தக் குதிரை லேசா சுண்டினாப் போதும் பறக்கும். ஆனா ஒத்தக் கண்ணு. பெண்டாட்டி இவன குதிரையில ஏறவைச்சி, கீழ-விழாம, கயிற்றால குறுக்கும் மறுக்குமா வரிஞ்சி கட்டினா.

சண்டைக்குத் தயாரா, படைகள் அங்க பாதி, இங்க பாதியா நிக்குது. குதிரையத் தட்டினவுடனே கண்ணு மண்ணு தெரியாம பறக்குது. அங்கன ஒரு லேசான பனை. பயத்தில் இவன் சேத்துப் பிடிச்சான்ல, பனைவேரோடு பிடுங்கிட்டு வந்திருச்சி. பனையும் இவனுமா பறக்கிறாங்க.

எதிர்ப்பக்கம் இருக்கிறவங்க, பார்த்தாங்க "சே இவன் பனையை இல்லை பிடுங்கிட்டு வர்றான். இனிமே இங்க நிக்கப்படாது. பனையை பிடுங்கிட்டு வர்ற பய, நம்மள தவிடாக்கிரமாட்டானா" என்று பயந்து ஓடிவிட்டார்கள். பிறகு குதிரைவீரன் திரும்பிவிட்டான்.



ராசா சந்தோசமாகி ஒனக்கு என்ன சன்மானம் வேணுமோ கேளுன்னார்.

இவன் "மகராஜா, எனக்குப் பணியாரத்து மேல ஆசை. பணியாரம் வேணும்' என்றான்.

"பணியாரம்தானே, அண்டா, அண்டாவா கொண்டு வந்து கொட்டச் சொல்றேன்" என்றார்.

"அவிச்சிப் போடுங்கடா. எவ்வளவு திங்கணுமோ திங்கட்டும்" என்று கட்டளை போட்டார் ராசா.

கற்பனை என்பது ஏற்கனவே இருக்கிற ஒன்றிலிருந்துதான் பிறப்பெடுக்க முடியும். கற்பனை, யதார்த்தத்திலிருந்து பிறக்கிறது. கற்பனை என்பது யதார்த்தத்துக்குப் பொருத்தமான இன்னொரு யதார்த்தம்.

இல்லாத ஒன்றிலிருந்து கற்பனை தோன்ற முடியாது. தோன்றுவதை கற்பனை என்றும் சொல்ல முடியாது.

ஆகாயக் கோட்டை கட்டுகிறான் என்கிறார்கள். ஆகாயம் என்ற ஒன்றிருக்கிறது. கோட்டை என்ற ஒன்றும் உண்டு. இரண்டும் நிஜம். நிஜத்தின் மேல் ஏற்றப் படுகிற கற்பனையே ஆகாயக் கோட்டை.

ஆகாயமும் இல்லாமல், கோட்டையும் இல்லாமல் கட்டப் பட்டதுதான் தீபாவளி, கார்த்திகை, விநாயக சதுர்த்திகள். இவை பொய்கள்!

ஒரு ராசாவுக்கும் இன்னொரு ராசாவுக்கும் சண்டை நடப்பது உலக யதார்த்தம். அதில் தன் நாட்டு ராசா வெற்றி பெற நினைப்பதும், ஆசைப்படுவதும் யதார்த்தம். கற்பனையாக வெற்றிக் கனியைப் பறித்துப் பார்க்கிறார்கள் மக்கள். அப்போது வெளிப் படுகிற கற்பனை, அவர்கள் யோசிப்பின் கூர்மையை சொல்திறமையை வியக்க வைக்கிறது.

அப்பவும் இந்த காக்காய் வெட்டி வீரன் எனக்கு பங்களா வேணும், நிலபுலம் வேணும், நல்ல நஞ்சையாப் பாத்து நூறு ஏக்கர் வேணும் என்று கேட்கக்கூடாதா? எனக்குப் பணியாரம் வேண்டும் என்கிறான்.

அன்றாடம் உழைத்துக் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிற கிராமத்து மக்களின் ஆசை அவ்வளவுதான். என்னதான் ராசா கேட்டாலும், அவர்களின் அட்டுப்பிடித்த தரித்திரம் அதற்கு மேல் யோசிக்க வைக்க வில்லை. அவர்களின் யதார்த்த நிலை என்னவோ அதிலிருந்தே கற்பனை யோசிப்பும் செய்கிறார்கள். அவர்களுக்கு கற்பனையிலாவது வாய்க்கு ருசியாய் சாப்பிட வேண்டுமென்பது.

இதில் பொங்கி வழிவது, கதை சொல்லியின் ருசிப்பான சொல் வளம். போர் என்றோ யுத்தம் என்றோ சொல்லவில்லை. அது எழுத்துப் புத்தகத்தில் அறியப் பட்ட சொல்.

கலாட்டா, கலகம் என்கிறார் கதை சொல்லி. இது எழுத்து வாசனை, அண்டாத மக்கம் மொழி.

குத்திக் கொடுக்கிறது, செய்றது. மரம், மட்டைய வெட்டுறது - ஆகமா கஞ்சி, தண்ணி குடிச்சிச் சிரலாம் யானை வெட்டி, புலி வெட்டி -

இது ஒரு பேச்சு இசை. மக்கள் மொழி, எப்போதும் எதுகை, மோனையென்ற இசையாகக் கொட்டுகிறது. ●



படிப்பகம்

www.padippakam.com

## எழுகதிர் அருகோ

"பிராமணர்களுக்குப் பிடிக்காததை, விரோதமானதைப் பிராமணர்களால் சக்தியூட்டப்படும் கடவுளர்களே செய்தாலும் அதை எதிர்க்கப் பிராமணர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம். அது சாஸ்திரோக்தமானதே. ஏனெனில், சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும் பிராமணர்களுக்கு, பிராமணர்களாலேயே உருவாக்கிக் கொள்ளப்படுபவையே" - அர்த்த சாஸ்திரத்தில் கௌடில்யர்.

□ பிராமணர்களுக்குப் (பார்ப்பனர்களுக்கு) பிடிக்காததை கடவுளே செய்தாலும் எதிர்க்கலாம்.

□ கடவுளுக்குச் சக்தியூட்டுபவர்களே பிராமணர்கள்தாம்.

□ சாஸ்திர சம்பிரதாயங்கள் என்பவை பிராமணர்களுக்கு பிராமணர்களாலேயே உருவாக்கப்பட்டவை.






மேலே காண்பவை அஸ்தினாபுரி (இன்றைய தில்லி) பாடலிபுத்திரம் (இன்றைய பாட்னா) அரசுகளை அன்று பந்தாடி மகிழ்ந்த சாணக்கியன் என்னும் பார்ப்பனன் பகர்ந்தவையாகும். இன்றைக்கும் இவைதான் இந்திய அரசியலில் பார்ப்பனர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

"குஜராத், மதக்கலவரங்களால் பற்றி எரிகிறதே அணையுங்கள்" என்றால், என்ன பதில் சொல்லப்படுகிறது? "கோத்ரா ரயில் நிலையத்தில் கரசேவகர்கள் கொளுத்தப்பட்டதற்குப் பழிக்குப்பழி" என்கிறார்கள்.

"சென்னை மாகாணத்தில் முதல் பொதுத்தேர்தலிலேயே 1952-இல் அகில இந்தியக் கட்சி (காங்கிரஸ்)யின் அரசு தோற்று, ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றும் அன்றைய ஆளுநர் ஸ்ரீபிரகாசா, இராசகோபாலாச்சாரியைக் கூப்பிட்டு (அப்போது அவர் சட்டமன்ற உறுப்பினர் கூட இல்லை) காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கச் சொன்னாரே நியாயமா?" என்றால்,

"வெற்றி பெற்ற கட்சிகளில் அதுதான் தனிப்பெருங்கட்சி, அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி ராஜாஜியைத் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்ததால் அது நியாயமே" என்கிறார்கள்.

"அதே நியாயம் உத்தரப்பிரதேசத்திற்கும் பொருந்துமே! அங்கு வெற்றி பெற்ற பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த முலாயம் சிங்கின் சமாஜ்வாதிக் கட்சிதானே தனிப்பெருங் கட்சி? அவரை முதலில் ஆட்சி அமைக்க அழைப்பதுதானே முறை?" என்றால் (அவர் இராசகோபாலாச்சாரி போல் பூணூல்காரர் இல்லை என்பதால்)" அங்கு எக்கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை. அதனால்தான் அங்கு ஆளுநர் யாரையும் அழைக்கவில்லை" என்கிறார்கள்.

ஆளுநர் என்பவர் யார்? நடுவணரசின் முகவர். நடுவணரசின் பிரதமர் வாஜ்பேய் அவர்களோ, சிங்கப்பூருக்குப்போன இடத்தில் "நான் நாடு திரும்பியதும் உ.பி.யில் அமைச்சரவை நிறுவுவதில் முடிவெடுக்கப்படும்" என்கிறார். அதே நாளில் பகுஜன் சமாஜ்கட்சியின் தலைவர் கன்சிராம், "முலாயம்சிங் கட்சியை விட கூட்டுச்சேர்வதற்கு வாஜ்பேய் கட்சியே மேல்" என்கிறார்.

இதிலிருந்து இந்தியாவில் சட்டம், நியாயம், மரபு, சம்பிரதாயம் என்பதெல்லாம் பார்ப்பனர்களின் வசதிக்கேற்ப வைத்துக் கொள்ளப்படுவதுதான் என்ற சாணக்கியனின் வழியே இன்றும் கடைப் பிடிக்கப்படுகிறது என்பதே உறுதியாகிறது.

அந்த முறையில்தான் தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் சொல்லி வரும் வரலாற்று நியாயத்தையும் பார்ப்பனர்கள் கூட்டணி சேர்ந்து கொண்டு 'கோரசாக' எதிர்த்து வருகின்றனர்.

ஏனெனில் அவர்களைப் பொறுத்த வரை வரலாறு என்பதே தங்களால் வரையப்படுவதுதான் என்பதும் நியாயம் என்பது தாங்கள் நினைப்பதுதான் என்பதும் சாணக்கியன் காலத்திலிருந்தே சாதிக்கப்பட்டு வருவதாகும்.

அதனால்தான் இந்திய வரலாற்றுப்பாடத்தையே அந்தரங்கமாக அமைக்கப்பட்ட ஒரு குழுவின் மூலம் மாற்றி எழுதி, அதை மத்திய அரசு பள்ளிகளில் நடைமுறைப் படுத்தவும் தொடங்கி விட்டார்கள்.

அவர்கள் எழுதியுள்ள புதிய வரலாற்றுப் பாடத்தின்படி ஏசுநாதர் காஷ்மீரில் வாழ்ந்தவராம்.

www.padippakam.com

சீனாவின் கலைகள் பண்பாடுகளைக் கட்டி வளர்த்தவர்கள் இந்தியப் பிராமணர்களாம். என்னே கொடுமை!

புகழ் பெற்ற இந்தியக் கல்வியாளர்கள் எல்லாம் வரலாற்றுப் பாடத்தைத் திருத்தியமைத்த குழுவினரின் பெயர்களைத் தெரிவிக்கும்படிப் போராடியும் இன்று வரை தெரிவிக்கப்படவில்லை. இந்தியப் பத்திரிகை உலகத்தைப் பெரும்பாலும் தங்கள் கைகளில் வைத்துக் கொண்டிருக்கும் பார்ப்பனர்களும் இதை வெளியுலகத்திற்குத் தெரியாமல் மறைப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

ஆனால் "தான் ஆடா விட்டாலும் தன் சதை ஆடும்" என்ற பழமொழிக்கேற்ப, நெடுமாறன் விவகாரத்தில் ஆசிரியர் வீரமணி அவர்களால் அப்படி அமைதி காக்க முடியவில்லை. "விடுதலை" ஏட்டின் மூலம், கூட்டணி சேர்ந்து கொண்டு குழி பறிக்கும் பார்ப்பன ஏடுகளின் முகத்திரையைக் கிழித்தெறிந்திருக்கிறார். உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்.

'கல்கி' ஏடு கிருஷ்ணமூர்த்தி காலத்திலிருந்தே பார்ப்பனியத்தைத் தூக்கிப்பிடிப்பதாக இருந்து வந்தாலும், இராசகோபாலாச்சாரியின் குரலாகவே ஒலித்து வந்தாலும், இடையிடையே தந்தை பெரியார் பற்றியும், பேரறிஞர் அண்ணா பற்றியும் ஒரு சில வார்த்தைகள் புகழ்ந்தெழுதி, தான் தமிழ்ப்பற்றுள்ள ஏடு போல் காட்டிக்கொள்ளத் தவறுவதில்லை. அவ்வேட்டில் இடம்பெற்றிருக்கும் கேள்வி-பதில் பகுதியில்...

கேள்வி: காந்தியை ஒரு பிராமணன் கொன்றான் என்பதற்காகப் பிராமணர்கள் அனைவரையும் நாடு கடத்தி விட்டோமா? அப்படியிருக்க, விடுதலைப்புலிகள் ஒரு சிலர் ராஜீவைக் கொன்றனர் என்பதற்கா... களுள் யாரையும் இந்... அனுமதிப்பதில்லை என்... வது சரியில்லை என்... மாறன் பேசி இருக்கிறா...

பதில்: நமது அரசிய... செய்த தந்திரப் பிரசாரங்... திரப் புகழ்பெற்ற கோ... கூட தலைகுனியச் செய்... காந்தியைக் கொல்ல ஓர் இ... திட்டமிட்டுச் சதி செய்... இயக்கம் சார்ந்த தனிநபரின்... அச்செயல். ஆனால் விடு... புலிகள் ... ராஜீவ் காந்தி ... யைத் திட்டமிட்டு... செய்து, வெள்... டம் பார்த்து நிறை... றியது. அது பயங்... இயக்கமாக ... வெகுகாலமாகி... கோட்ஸே பிரா... என்று சாதி ... வேறு புதிதாக... துவது விஷவி... தூவுவதாகும் ... தான் ஏமாறாம... வேண்டும்.

இப்படி 17-2-200... கல்கி இதழில் ... தை எடுத்துப் ... டும், அதுபோல... 2002 தேதியிட்ட ... இதழில் கேள்வி ... பகுதியில்

கேள்வி: ஒரு ... மணன் காந்தியை... கொன்றான் என்பதற்... காக அனைத்துப் ... மணர்களையும் நாடு கடத்தி விட்டோமா? இ... இரு சீக்கியர்கள் இந்திரா காந்தி... யைக் கொன்றவர்கள் என்பதற்... காக சீக்கியர்களை நாடு கடத்தி... விட்டோமா? அப்படியிருக்க... விடுதலைப் புலிகளை ... தடை செய்வதிலும், எதிர்... லும் அர்த்தமில்லை என்கிறா... நெடுமாறன்! இது குறித்து?

பதில்: காந்தி மற்றும் இந்திரா காந்தியைக் கொன்றவர்கள் ... இயக்கங்களையும் சார்ந்த... அல்ல. ராஜீவ் காந்தியைக் கொன்ற... வர்கள் விடுதலைப் புலி இயக்...

••

பார்ப்பனர்களைப் பொறுத்தவரை வரலாறு என்பதே தங்களால் வரையப்படுவதுதான் என்பதும் நியாயம் என்பது தாங்கள் நினைப்பதுதான் என்பதும் சாணக்கியன் காலத்திலிருந்தே சாதிக்கப்பட்டு வருவதாகும்.



அந்த முறையில்தான் தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் சொல்லிவரும் வரலாற்று நியாயத்தையும் பார்ப்பனர்கள் கூட்டணி சேர்ந்து கொண்டு 'கோரசாக' எதிர்த்து வருகின்றனர்.

••



படிப்பகம்

www.padippakam.com

கத்தைச் சார்ந்தவர்கள் இந்த இயக்கத்தின் தலைமை எடுத்த முடிவின் படி ராஜீவைக் கொன்றார்கள். அதனால் இந்த இயக்கத்திற்கு இங்கே இடமில்லை என்று இந்திய அரசு தீர்மானிக்கிறது.

என்ற அதையும் போட்டு, காஞ்சி சங்கராச்சாரி ஆசியுடன் வெளிவரும் 'காமகோடி' மார்ச் 2002-இதழில் எழுதப்பட்டிருப்பதை

ஈழத்தமிழர், இலங்கை பற்றிப் பேச வந்த நெடுமாறன் மகாத்மா காந்தியை ஒரு பிராமணர் கொலை செய்ததால் அனைத்துப் பிராமணர்களையும் வெளியேற்றி விட்டீர்களா? என்றும், இந்திரா காந்தியை இரு சீக்கியர்கள் கொலை செய்ததால் சீக்கியர்கள் எல்லோரையும் நாடு கடத்தி விட்டீர்களா? என்றும் கேள்வி எழுப்பியிருப்பது அறியாமையின் உச்சகட்டம். ஒசாமா பின்லேடன் பயங்கரவாதப் படுகொலைகளுக்குப் பின்புலமாக இருப்பதால், அராபியர்கள் அனைவருமே பயங்கரவாதிகளா? என்று அவர் கேட்டிருந்தால் அதில் அர்த்தம் இருந்திருக்கும். ஆனால் காந்திஜியைக் கொலை செய்தவனை சாதியைக் குறிப்பிட்டு உதாரணம் காட்டுவானேன்?

மகாத்மா கொலை செய்யப்பட்டதற்கு சாதிப்பிரச்னையா காரணம்? கோணல் புத்திக்காரர்களைத் தவிர அக்கொலை வழக்கைப் பற்றிப் படித்திருக்கும் அனைவருக்குமே அதன் பின்னணி தேசப்பிரிவினையால் உருவான கோரச் சம்பவங்களே என்பது தெரியும்.

என்ற காமகோடி பீடத்தின் கருத்தைப் பிரதிபலிக்கும் அதையும் எடுத்துப்போட்டு, "உண்மையைத்தான் சொன்னார் பழ. நெடுமாறன். மூன்று ஏடுகளும் விழுந்து குதறுகின்றனவே, அதற்குக் காரணம் என்ன? பார்ப்பனர்களிடத்திலே அல்லவா நெடுமாறன் கைவைத்து விட்டார். அதுவும் அடிப்படையான ஆணி வேரை அசைக்கும் எடுத்துக் காட்டையல்லவா தூக்கிப் போட்டிருக்கிறார்!" என்று கூறி, காந்தியைக் கொன்ற நாதுராம் கோட்சே ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்தான் என்பதை ஆதாரப்பூர்வமாக நிலைநாட்டியுள்ளது விடுதலை ஏடு.

●●

**நெடுமாறன் விவகாரத்தில் ஆசிரியர் வீரமணி அவர்களால் அப்படி அமைதிகாக்க முடியவில்லை. "விடுதலை" ஏட்டின் மூலம், கூட்டணி சேர்ந்து கொண்டு குழி பறிக்கும் பார்ப்பன ஏடுகளின் முகத்திரையைக் கிழித்தெறிந்திருக்கிறார். உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்.**

●●



அதுமட்டுமின்றி காந்தியாரைப்படுகொலை செய்யப் புறப்படுமுன், நாதுராம் கோட்சே பாடிய பாடல் ஆர்.எஸ்.எஸ். சாகாக்களில் பாடப்படும் பிரார்த்தனைப் பாடல்தான் என்று, அவனுடைய தம்பி கோபால் கோட்சே எழுதியிருப்பதை எடுத்துக் காட்டி, காந்தியார் கொலையில் அரை டஜன் பார்ப்பனர்கள் சம்பந்தப்பட்டிருந்ததையும், அன்று அக்கிரகாரங்களில் எல்லாம் இனிப்பு வழங்கப்பட்டதையும் கூறி, இஸ்மாயில் என்று கையில் பச்சை குத்திக் கொண்டு, முஸ்லிம்களுக்கே உரித்தான சுன்னத்தைச் செய்து கொண்டும் கோட்சே காந்தியாரைக் கொலை செய்ததன் சூழ்ச்சி என்ன? காந்தியாரைக் கொன்றவன் முஸ்லிம் என்ற செய்தி பரவி, வெகுமக்கள் வெகுண்டெழுந்து, முஸ்லீம்களைத் தாக்க வேண்டும் என்பது தானே? என்றும், சரியாகச் சாட்டையடி கொடுத்திருக்கிறது 'விடுதலை' ஏடு.

கோத்ராவில் கரசேவகர்கள் வந்த ரயிலைத் திட்டமிட்டுக் கொளுத்திவிட்டு, அதற்குப் பழிவாங்கும் சம்பவம் என்ற பெயரால் குஜராத் கலவரத்தை நடத்தியவர்களே - நடத்திக் கொண்டிருப்பவர்களே சங்கப்பரிவாரங்கள்தான் என்று உலகும் செய்தியை நோக்கினால், காந்தியார் கொலையும் அந்த நோக்கில் செய்யப்பட்டதுதான் என்ற முடிவுக்கு வருவதைத் தவிர்க்க முடியாது.

ஏனென்றால் இராசகோபாலாச்சாரி, படேல், நேரு முதலிய பார்ப்பனத் தலைவர்கள் எல்லாம் தவிர்க்க முடியாத காரணத்திற்காக

www.padippakam.com

பாகிஸ்தான் பிரிவினையை ஏற்றுக்கொள்கிறோம் என்று முன் வந்தும், கடைசிவரை அதை ஏற்றுக் கொள்ளாதவர், அதை எதிர்த்து உண்ணா நோன்பிருந்தவர் காந்தியார் மட்டும்தான்.

அதனால்தான் இந்து மத வெறிக்கூட்டம் காந்தியாரை கோட்சே மூலம் கொலை செய்தது.

ஏன்? பாகிஸ்தான் பிரிவினையை ஏற்றுக்கொள்ளாவிட்டால், வெள்ளையர் விடுதலை தரமாட்டார்கள். விடுதலையைத் தந்துவிட்டு, வெள்ளையர் வெளியேறாவிட்டால் தாங்கள் அரசு கட்டில் ஏறமுடியாது. தில்லியில் பார்ப்பன ஆட்சியை நிறுவமுடியாது என்பதற்காகவே காந்தியாரைத் தீர்த்துக் கட்டினார்கள்.

ஏனென்றால், சங்கப்பரிவாரங்கள் தூக்கிப்பிடிக்கும் சனாதன தர்மப்படி பார்ப்பனர்கள் நேரடியாக ஆட்சிக்கு வரக்கூடாது. சத்திரியர்களை முன்னே நிறுத்தி, பின்னால் நின்று கொண்டுதான் அவர்கள் சதிகள் மூலம் மட்டுமே, நினைத்ததைச் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் பார்ப்பன சரித்திரம். இந்து தர்மம். இந்திய விடுதலைக்கு முன்புவரை அப்படித்தான் பார்ப்பன வரலாறு அமைந்திருக்கிறது.

"காந்தியாரைக் களபலியாக்கித்தான் அந்தச் சம்பிரதாயத்தை வரலாற்றை முறியடித்தனர் பார்ப்பனர்கள். இதை அவர்கள் ஒரு இயக்கமாகத்தான் நடத்தி முடித்தார்கள். சங்கப்பரிவாரங்கள் இன்றும் அதைத்தான் செய்து கொண்டிருக்கின்றன. அதாவது இந்தியாவைப் பிராமணர்களே ஆளவேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்கின்றனர்.

ஆனால், தமிழர்கள் இயக்கமாகச் சேர்ந்தால் அதைத் தடை செய்ய வேண்டும் என்கிறார்கள். புலிகளை எதிர்ப்பது அதற்காகத்தான். மாவீரன் நெடுமாறன் அவர்கள், "காந்தியாரைக் கொன்ற பார்ப்பனர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றிவிட்டோமா?" என்று கேட்டு அதைத்தான் அம்பலப்படுத்திவருகின்றார். திராவிடர் கழகப்பொதுச் செயலாளர் ஆசிரியர் வீரமணி அவர்கள் இதில் நெடுமாறன் அவர்களுக்குத் துணையாக நிற்பதைத் தமிழுலகம் போற்றிப் பாராட்ட வேண்டும்.

## உடை; மூட நம்பிக்கை

*கழுதைப் படம்*
*மாட்டினால்*
*காசு குவியுமாம்*
*எங்களூர்*
*சலவைத் தொழிலாளி*
*வீட்டில்*
*இன்னும்*
*கஞ்சிக்குக்கூட*
*வழியில்லை.*

**அக்னி பாரதி**

ஆம்; தமிழர்களுக்கு எதிரான சிந்தனையில் பார்ப்பனர்கள் அனைவரும் ஒன்றாகச் சிந்திப்பதையும், செயல்படுவதையும் பார்க்கிறோம். பார்ப்பனரல்லாதார் அப்படி நடக்க ஏன் தயங்க வேண்டும்?

பின்லேடனை உருவாக்கி வளரச்செய்தது அமெரிக்காதான். அந்தப் பின்லேடனைச் சாக்கிட்டு, முஸ்லீம் நாடுகளையும், குறிப்பாக அரபு நாடுகளையும் இன்று அழிக்கத் தலைப்பட்டிருப்பதும் அமெரிக்காதான். அமெரிக்காவே சமாதானம் பேசி உருவாக்கிய பாலஸ்தீனை, அமெரிக்க பாணியில், தற்கொலைப்படைகளை அனுப்பி இஸ்ரேலைத்தாக்குகிறது என்று குற்றஞ்சாட்டி, இன்று இஸ்ரேல் தகர்க்க முனைந்திருப்பதையும், பாலஸ்தீனத்தலைவர் யாசர் அராபத்தை அவர் அலுவலகத்திலேயே முற்றுகை மூலம் சிறைவைத்திருப்பதையும், இஸ்ரேலின் இச்செயலை அமெரிக்கா கண்டிக்காததையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இது புலனாகும்.

ஆனால் சங்கராச்சாரியின் ஊது குழல் 'காமகோடி' ஏடு நெடுமாறனைப் பார்த்து அராபியர்களைப் பயங்கரவாதிகள் என்று ஏன் சொல்லவில்லை? என்று கேட்கிறது. பார்ப்பனப் பயங்கர வாதத்தை மறைக்கிறது.

இப்படித்தான் தமிழ்வழிக் கல்வியானாலும், கச்சத்தீவுப் பிரச்சினையானாலும், கண்ணகி சிலைப் பிரச்னையானாலும், முற்போக்கு, பிற்போக்கு, மதவாதம், மதச்சார்பின்மை, அந்தக்கட்சி, இந்தக்கட்சி என்று சொல்லிக் கொள்ளும் எந்தப் பார்ப்பனரும் ஒன்றாகவே நிற்கிறார்கள். மெட்டு வேறுபட்டாலும் ஒரே பாட்டையே பாடுகிறார்கள். ஒன்று போலவே ஆடுகிறார்கள்.

அப்படியிருக்க தமிழர்கள் ஏன் பிரிந்து நிற்கவேண்டும்? ஒன்றாக நின்று ஏன் குரல் கொடுக்கக் கூடாது? ஒருமித்துச் செயல்பட ஏன் தயங்கவேண்டும்? என்பது தான் நமது கேள்வியாகும். இது நமது கேள்வி மட்டுமல்ல. அனைத்துத் தமிழ் மக்களின் அகவேட்கையுமாகும்.

கிடுக்கிப்பிடி போட்டு பார்ப்பனர்களைத் திணற அடித்திருக்கும் மாவீரன் நெடுமாறன் அவர்களையும், அடுக்கடுக்கான சான்றுகளைக் காட்டி அவருடைய கிடுக்கிப் பிடிக்கு வலுச்சேர்த்து, பார்ப்பன முகத்திரையைக் கிழித்திருக்கும் ஆசிரியர் வீரமணி அவர்களையும் நெஞ்சாரப் பாராட்டுகிற அதே நேரம் தமிழ் - தமிழர் - தமிழ் நாட்டுப் பிரச்னைகள் அனைத்திலும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்று விழைகிறோம். ●



படிப்பகம்

...ளிநாட்டுத் தமிழர்களுக்கான ஏற்றுமதி நிறுவனம்

THAVAH IMPEX PVT LTD

(இலங்கையிலும் இந்தியாவிலும் பதிவு பெற்ற நிறுவனம்)

...ந்த ஈழத்தமிழர்களுக்குத் தேவையான சகல பொருட்களையும் சென்னையிலிருந்து ஏற்றுமதி செய்கிறோம்.

TEL: 0091 - 44 - 4415796 FAX: 4402405 E-mail: thavahimpex@yahoo.com


... 16-ஆம் நாள் நந்தன் ...கத்தில் "அயோத்தியில் ... ஆலயத்தை இடித்து ... இராமர் கோவில் ...து ஆரிய அயோக்கியத் ... அயோக்கியத்தனத் ...அப்புறப்படுத்தப்பட்டது ...ன்" என்று குறிப்பிட்டி...றுக்கு நூறு உண்மை.

...கியின் ராமாயணத்தில் ...காடுகடத்தப்பட்ட பிறகு ...அவனுடைய தாத்தாவின் ...ாசகிருகத்தில் இருந்து ...க்கு அழைத்து வரப்படு... அயோத்திக்குள் நுழை... அந்நகரமே சோகத்தில் ...தாக வால்மீகி சொல்லு...போது.

...முன்போல் காணப்பட ...தேவாய தன சைத்யேசு ...ஆனவது.

... நினைவாலயங்கள் ... வருந்தக் கூடிய நிலை ...என்று எழுதுகிறார். 71-வது ... 42 ...து சுலோகம்.

...ண்டத்தில் "இலங்கையில் ...த்தை அழித்தேன். பவுத்தத் ...களைக் கொன்றேன், ...ங்களை அழித்தேன்" ... அனுமார் கூறுகிறார்.

... போருக்குப்புறப்படும் ... அண்ணன் ராவணனால் ... கட்டப்பட்ட 'நிகும் ...பவுத்த விசாரை' வணங்கி ...சென்றதாக யுத்த காண்டம் ... 84 சுலோகம் 32 சொல்லு...

...ம் ராமன். "புத்தன் ஒரு ... என்று கூறியதை எவரும் ...

...கியின் 'ராமகதையே' ...திற்கு எதிரான பிரச்சாரத் ...புனையப்பட்டது என்பதை ...ளவர் அனைவரும் ஏற்று ...அதான் எனவே நந்தன் ...கம் சொல்வது உண்மையே.

**– குருவிக்கரம்பை வேலு.**

...ம் முறை செய்தி மடலும் ...களும் சுணங்கிக் ... இதழ்கள் வர, காலம் ...ன் நமது தோழர்கள் சோர்ந்து விட்டனர். செய்தி மடல் வந்ததும் நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியடைந்ததைப் போலவே செய்திகளும் மகிழ்ச்சியடைவதற்கான தகவல்களைத் தாங்கியே வந்து சேர்ந்தது நன்றி !

உங்கள் பேச்சிலே தான் நாட்டிற்கே எழுச்சி ஏற்படக் கூடிய கருத்துக்கள் கருவூலமாக அமைந்து, கலைஞருக்கே பழைய நினைவைத் தோற்றுவித்திருக்கிறீர்கள். பத்து ஆண்டுகளுக்கு முன் இவ் வேண்டுகோள் விடுத்திருக்க வேண்டுமென்ற கருத்து அபத்தமானது எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. உறங்குவது போல பாவனை செய்து காட்டுகிறார். ஆனால் உண்மையான உறக்க நிலை இல்லை என்பதை அவர் வெளிபடுத்தி இருக்கிறார். இது போன்றவை எங்களுக்கு நன்றாகவே விளங்கும். நீங்கள் நினைவுபடுத்தித் தான் அவர் கருப்புச் சட்டையை அணிந்து இலட்சியப் பணி ஆற்ற வேண்டுமா ? அந்த அளவு கலைஞர் தடம் புரண்டு விட்டார் என்றே தான் எண்ணவேண்டியதிருக்கிறது. ஆட்சியின் அலங்கார சிம்மாசனத்தில் இருக்கும் போது ஒரு விதமாகவும். எதிர் வரிசையில் அவரை மக்கள் அமரச் செய்கிற பொழுதெல்லாம் கொள்கையில் நல்ல தெளிவைக் காண முடிவது விநோதமாகவே எங்களுக்குப் படுகிறது.

ஆனால் நாட்டையும் மக்களையும் நிலையையும் மனதிற்கொண்டு சுவரை வைத்து சித்திரம் எழுத முனைந்து நீங்கள் செயல்படுவதையும் எங்களால் யூகிக்க முடிகிறது. செய்யத்தக்க செயலாக எண்ணி மகிழ்கிறோம் மன மார வாழ்த்துகிறோம். உங்கள் தொண்டு தொடர வேண்டும். வளர வேண்டும் வளமாக.

தமிழ் நாட்டை வளமாக்கும் திட்டமாகப் பேரறிஞர் அண்ணாவால் பேசப்பட்டு நாட்டின் கண்களையே திறக்கும் செயலை மட்டுமல்ல பொருளாதார வளத்தையும் மக்கள் தொழில் பெற்று சிறக்க வேண்டிய சேது சமுத்திரத்திட்டம் கலைஞர் காலத்திலேயே (ஆட்சி) கவனிப் பாரற்று தூக்கிப் போடப்பட்டு விட்டது. தமிழ் வழிக் கல்வியும் இவர் செய்து தர மனமில்லாது போனதால் நீதி மன்றத்தில் உறங்கிக் கிடக்கிறது. இதையும் நீங்கள் விட்டுவிடக் கூடாது.

உங்கள் அலுவலகத்தில் நான் உங்களைச் சந்தித்த பொழுது , தமிழ் வழிக் கல்வி பற்றி என்னிடம் பேசினீர்கள். ஐந்தே நிமிடங்களில் கலைஞரால் செய்து தர முடியும் என்பதையும் என்னிடம் சொன்னீர்கள். முடிந்தால் கலைஞரையும் இணைத்தே தமிழில் ஆட்சி நடக்க வழி காண விழைகிறேன்.

காவிய நாயகியின் சிலையை அண்ணாவால் வைக்கப்பட்டதையே கண்ணகி அம்மையார் தூக்கி எறிந்து விட்டார். இன்னும் என்னென்ன வேலைகளைத் (சித்து விளையாட்டு) தொடங்கி நாட்டை எங்கே இட்டுச் சொல்ல போகிறரோ தெரியவில்லை. இவைகளை எல்லாம் நாடு எப்படிப் பொறுத்துக் கொள்கிறது என்பதுவும் எங்களுக்கு விளங்கவில்லை.

இவைகளை எல்லாம் எங்களின் ஆலோசனையாக அல்ல, வேண்டுகோளாக ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறோம். இலங்கைத் தமிழர்களின் சமாதானப் பேச்சுகள் தமிழ்நாட்டில் நடைபெற வழியில்லாது ஆகிவிட்டால் பெரும் அவலமாக இதைக் கருத வேண்டிவரும்.

**– கோ. கலைச் செல்வன்**
**யாங்கோன் மியன்மர்.**

## உங்கள் பார்வையில்

www.padippakam.com

அச்சு என்பது கலை;
கலை உணர்ச்சி என்பது
மனிதனின் வான் தொடும் முயற்சி.

உங்கள் முயற்சியில்
நாங்கள் சிறகாகிறோம்.

# மாணவர் மறுதோன்றி அச்சகம்

எண் 9, சுங்குராம் தெரு,
உயர்நீதிமன்றம் எதிரில்,
சென்னை - 600 001.
தொலைபேசி: 538 2513

கடை எண். 3 & 4, அபெக்ஸ் சேம்பர்
நாகேஷ் திரையரங்கம் அருகில்
தியாகராயர் சாலை,
பாண்டிபஜார், சென்னை - 600 017.
தொலைபேசி: 434 3862, 434 6580

"அடையாறு மாணவர் நகலகத்தின் அச்சகப் பிரிவு"

படிப்பகம்

நந்தன் வழி - மாதமிருமுறை ... 679/2002 • NANDAN VAZHI TAMIL FORTNIGHTLY REGD. NO. 1588/97 •
TN/CHIEF/PMG - 679/2002 • WPP382 • REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER NO. 68724/98

www.padippakam.com




## வாங்கி விட்டீர்களா?

அறிஞர் அப்பாத்துரையார்
தமிழர்க்கு விட்டுச் சென்ற
அருநிதியம்

# தென்னாட்டுப் போர்க்களங்கள்

ரூபாய் 150 – அஞ்சலில் ரூ.170




இது ஒரு
நந்தன் வெளியீடு

தொடர்புக்கு:
**மாணவர் புத்தகப்பண்ணை**
28, ச.ப. சாலை, அடையாறு,
சென்னை–20. தொலைபேசி: 491 1358